விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 28 புதன்கிழமை (10.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கையில் நடந்தது
# இனப்படுகொலையே!

## யாழ். வந்த இந்தியக் குழுவிடம் தமிழ்ச்சமூகம் தெரிவிப்பு

## சர்வதேச கண்காணிப்பிற்கும், இடைக்கால நிர்வாகத்திற்கும் வலியுறுத்தப்பட்டது




(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்றது மிக மோசமான இனப்படு கொலை என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். இத் திட்டமிட்ட தமிழ் இன அழிப்பை தடுத்து நிறுத்த நிரந்தர அரசியல் தீர்வும் சர்வதேச கண்காணிப்பில் இடைக்கால நிர்வாகமும் தேவை என யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற குழுவினரிடம் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் மன்னார் ஆயர் உள்ளிட்ட சிவில் சமூக பிரதிநிதிகளும் வலியுறுத்தியுள்ளனர். (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக எதிர்ப்பின் மத்தியில்

## இரவோடு இரவாக இந்தியக் குழு இலங்கை வருகை

(யாழ்ப்பாணம்)

தமிழக அரசியல் கட்சிகள் மற்றும் மக்களின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் இரவோடு இரவாக இந்திய நாடாளுமன்றக் குழுவினர் இலங்கை வருகை தந்துள்ளனர்.

இந்திய நாடாளுமன்றக் குழுவினரின் இலங்கைக்கான விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இந்தியாவின் தமிழகத்திலுள்ள மிகவும் பிரபல்யமான (சன் ரீவி) தொலைக்காட்சிகளில் செய்திகள் வெளியாகியிருந்ததோடு இணையத்தளங்களின் செய்திகளும் உறுதிப்படுத்தியிருந்தன.


இருப்பினும் இந்திய நாடாளுமன்றக் குழுவினர் நேற்று முன்தினம் இரவோடு இரவாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்த இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று மாலையே பொலிஸாரின் கடும் பாதுகாப்புடன் வருகை தந்தனர். அத்தோடு சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளையும் யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான சௌகத்தா றோய், பிரகர் ஜவதேகர், சந்தீப் கித், அனுராக் தாகூர், தனஞ்ஜய் சிங், மது கௌட்ஜக் உள்ளிட்டோருடன் வெளிவிவகார அமைச்சை சேர்ந்த பி.எஸ்.இராகவன், பிமல் ஜீல்கா ஆகியோரும் வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## இலங்கையில் யுத்தம் முடிபடைந்தாலும் ஜெனிவா யுத்தம் முடிபடையவில்லை

### கவலையடைகிறார் மகிந்த ராஜபக்ஷ



(அநுராதபுரம்)

இலங்கையில் யுத்தம் முடிந்தாலும் இப்போது ஜெனிவாவில் எம்முடன் யுத்தம் ஆரம்பித்துள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் நெடுஞ்சாலையை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து அதனையொட்டிய மக்கள் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து உரை (20ஆம் பக்கம் பார்க்க)

## தனித் தமிழீழத்தை ஐ.தே.க. ஏற்காது

(கொழும்பு)

தனித் தமிழீழத்தை உருவாக்க தமிழகத் தலைவர்களும் இந்திய எதிர்க்கட்சியான பா.ஜ.கவும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், இலங்கையில் தமிழீழம் மலர ஐக்கிய தேசிய கட்சி ஒரு போதும் இடமளிக்காது என அக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவில் தமிழ் நாடு தனி நாடாவதையும் தான் ஒரு போதும் விரும்ப மாட்டார் (19ஆம் பக்கம் பார்க்க)

## பாரதிய ஜனதாவில் மட்டுமே இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு

### அடித்து கூறுகிறார் தமிழிசை

(திருவெற்றியூர்)

வீதிகளில் போராட்டம் நடத்தி வரும் கட்சிகளை விட பாராளுமன்றத்தில் எண்ணிக்கை பலம் வாய்ந்த கட்சியான பாரதிய ஜனதாவால் மட்டுமே இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு காலம் கிட்டும் என பா.ஜ.க. தேசிய செயலாளர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்தும், இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையைக் கண்டித்தும் பா.ஜ.க. மீனவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திருவெற்றியூரில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் (19ஆம் பக்கம் பார்க்க)

## டிப்ளோமா பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கல்

### பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 212 தேசிய போதனாக்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி நியமனத்திற்காக நியமிக்கப்படவிருக்கும் தேசிய போதனாவியல் டிப்ளோமா பட்டதாரிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், இன்றும் நாளையும் கல்வி அமைச்சு வடக்கு மாகாணத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை பாடசாலைத் தெரிவிற்காக நடைபெறவிருக்கும் நேர்முகத்தேர்வில் தங்கள் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறும் ஏனைய மாவட்டத்தைச் (04ஆம் பக்கம் பார்க்க)

## நிலப்பறிப்பிற்கு எதிராக

## முல்லைத்தீவில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

(முல்லைத்தீவு)

காணி அபகரிப்புக்கு எதிராகவும் திட்டமிட்ட சிங்கள- முஸ்லிம் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தக் கோரியும் இன்று முற்பகல் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், அரசியல் கட்சிகள் பங்கு கொள்ளுமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் மீண்டும் வன்முறை வெடிக்கும்

### சாத்தியம் இருப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இலங்கையில் மீண்டும் வன்முறை வெடிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கி, யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படாவிட்டால் மீளவும் முரண்பாடுகள் ஏற்படக்கூடுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சல் சிசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்கால நிலைவரங்கள் தொடர்பில் சர்வதேச ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த சிசன், அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

2009-ம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த நிலையில், இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான (19ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானில் பூகம்பம்

## 30 பேர் பலி 800 பேர் காயம்

(புஷேர்).

ஈரானில் ஒரேயொரு அணு ஆலை அமைந்துள்ள புஷேர் நகருக்கு அருகே நேற்று ஏற்பட்ட பூகம்பத்தில் 30 பேர் உயிரிழந்ததுடன் 800 பேர் காயமடைந்துள்ளனர்.

அந்த பூகம்பத்தின் மையம் நகருக்கு தென்கிழக்கே 100 மைல் தூரத்தில் நிலை கொண்டிருந்தது என்றும், (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனப்படுகொலையே...

இந்தியாவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் மற்றும் இந்திய அரசின் வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட திட்டக் கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் இருவர் அடங்கிய குழுவொன்று வட மாகாணத்தில் இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட வருகை தந்துள்ளது.

நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்திய நாடாளுமன்றக்குழுவினர் யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் மாலை 6 மணியளவில் தமிழ்க் கட்சியின் பிரதிநிதிகளையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் வலம்புரிக்குத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திற்கு இன்று (நேற்று) வருகை தந்துள்ள இந்திய நாடாளுமன்றக்குழு உத்தியோக பூர்வமானதல்ல. இருப்பினும் இங்குள்ள நிலைவரங்களை அறிந்து செல்ல வந்துள்ளனர்.

இந்தக் குழுவினருக்கு பல விடயங்களை நாம் வலியுறுத்தியிருந்தோம். குறிப்பாக இலங்கையில் இடம் பெற்றது மிக மோசமாக இனப் படுகொலை என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது ஒரு இலட்சத்து 47 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என நம்பப்படுகின்றது. ஆனால் அதற்கு கணக்கில்லை. அத்தோடு ஐ.நாவினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில்,

40 ஆயிரம் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. இது தவிர உள்ளக விசாரணையில் 70 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறுகின்றது.

தற்போது வடக்கு மாகாணத்தில் ஒன்றரை இலட்சம் இராணுவம் உள்ளது. தொடர்ச்சியாக மக்கள் அச்சத்தில் வாழும் சூழ்நிலை தான் உள்ளது. நாட்டை விட்டு தமிழ் மக்கள் ஓட வேண்டிய சூழ்நிலை. தமிழ் மக்களை அவர்களது பூர்வீக நிலங்களில் இருந்து துரத்தும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறுகின்றது. இது இப்படியே தொடர்ந்தால் இன்னும் 5 வருடத்தில் தமிழினம் என்ற இனம் இலங்கையில் இல்லாமல் போய்விடும்.

எனவே இதைத் தடுத்து நிறுத்தவும் சிங்கள குடியேற்றம், பௌத்த கோவில்கள் அமைத்தல், காணிகள் பறிப்பு என்பவற்றைத் தடுத்து நிறுத்த இடைக்கால நிர்வாகம் உருவாக வேண்டும்.

இடைக்கால நிர்வாகம் உருவானால்தான் இறுதித் தீர்வுக்கு வர முடியும். அது தொடர்பிலும் பேச முடியும்.

இடைக்கால நிர்வாகம் வேண்டுமானால் இந்தியாவின் கண்காணிப்பிலும் சர்வதேசத்தின் கண்காணிப்பிலும் அமைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் வலம்புரிக்கு தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களுக்கு நம்பிக்கைக்குரியதாகவில்லை. அதில் இருந்த பல அதிகாரங்களும் தற்போது பறிக்கப்பட்டுள்ளது. எனவே அதை ஏற்க முடியாது.

இலங்கையில் நாள்தோறும் இடம்பெற்று வரும் இனப்படுகொலை தமிழ்த் தேசத்தை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கை என்பவற்றைக் கட்டுப்படுத்தவும் இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்தவும் இடைக்கால நிர்வாகம் அவசியமானது என்பதை வலியுறுத்தியிருந்தோம் எனப் பல விடயங்களை தெரிவித்திருந்தார்.

இதேவேளை இந்தச் சந்திப்பு தொடர்பில் வலம்புரிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம், மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் மாநகர சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் உள்ளிட்ட பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இதில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கம் வடக்கில் குறிப்பாக மாநகர சபை எல்லைக்குள் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நன்றி தெரிவித்திருந்தேன்.

யாழ்.மாநகர எல்லைக்குள் கலாசார மண்டபம் அமைத்துத் தர இந்தியா முன்வந்துள்ளது. அத்தோடு அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை அபிவிருத்திக்கும் புகையிரதப் பாதை அமைப்பதற்கும் காங்கேசன்துறை துறைமுகம் புனரமைப்பு செய்வதற்கும் எனப் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி வருகின்றது இந்தியா.

மேலும் எமது அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் கூறியிருந்தேன். அதாவது இந்திய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வினைப் பெற்றுத் தர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தெரிவிற் குழுவிற்குள் செல்ல வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன். அத்தோடு 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டேன் என முதல்வர் மேலும் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றக் குழுவினருடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி, கூட்டமைப்பு மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளான மன்னார் ஆயர் இராசப்பு ஜோசப் ஆண்டகை, முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, சட்டத்தரணிகளான சாந்தா அபிமன்னசிங்கம், கே.குருபரன், மு.றெமியஸ், பேராசிரியர்களான சி.க.சிற்றம்பலம், எஸ்.சிவச்சந்திரன் எனப் பலர் கலந்து கொண்டனர். (செ-6)

## ஆலயத்தில் புகுந்து உண்டியல் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டப் பகலில் ஆலயத்தினுள் புகுந்த திருடர்கள் கோவில் உண்டியலினை தூக்கிச் சென்றுள்ளனர்.

இத்துணிகரச் சம்பவம் யாழ்.கந்தர்மடம் செல்வநாகபூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாலயத்தில் கடந்த வருடம் இதே போன்று திருட்டு முயற்சிகள் பல இடம்பெற்றுள்ளதால் இச் சம்பவம் தொடர்பில் ஆலய தலைவரினால் யாழ்.பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. (செ)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
1958.12.05

இறப்பு
2011.04.10

**அமரர் திருமதி விஜயகுமார் செல்வறாணி**

(முன்னாள் அதிபர் மு/மாங்குளம் மகா வித்தியாலயம்)

அன்பால் அரவணைத்த தெய்வமே
அன்னமுத்து வளர்த்தெடுத்த அம்மாவே
யார் மனமும் கலங்கவிடாது இருப்பாயே
குலம் காக்க அவதரித்த குல விளக்கே
உங்கள் பிரிவு எம்மை வாட்டுதம்மா
உங்கள் ஆத்மா சாந்தி பெற
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
கணவர் : யோ.விஜயகுமார்
பிள்ளைகள்: யோய்ஸ் றெமேக்கா (சகானா)
யோய்ஸ் றெமேசன் (தம்பா)

(C-2925)


## வாடகைக்கு வீடு தேவை

யாழ்.நகருக்கு அண்மையில்,
தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 04
Or 03 அறைகள் கொண்ட வீடு
வாடகைக்கு தேவை.

தொடர்பு: 0774336778

யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER



உங்கள் வீடுகளில் உள்ள பெறுமதிமிக்க இலத்திரனியல் உபகரணங்களை (Computer, LCD & LED TV, Etc.) பாதுகாத்துக் கொள்ள இன்றே தெரிவு செய்யுங்கள். நீண்ட நேரம் மின்சாரத்தை சேமித்து வைக்க கூடிய சாதனம். உத்தரவாத காலத்தில் பழுது ஏற்படின் உடன் நிவர்த்தி செய்யப்படும். (Warranty 18 Months)

TECHFINE UPS (LED DISPLAY)

650watts : Rs. 4475, ~~4900~~/=
1200watts : Rs. 9850, ~~11,700~~/=
1500watts : Rs. 12,700, ~~14200~~/=

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம், உங்கள் கணனிகள் அனைத்தும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். (வியாபாரிகளுக்கு விசேட விலையில்)

Authorized Dealer in Jaffna District

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460

## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

A/L 2015
கலை, வர்த்தகம்
(புதிய பிரிவு)

| | |
|---|---|
| கணக்கீடு<br>திரு.எஸ்.தவா | வணிகக்கல்வி<br>திரு.எஸ்.பிரதீபன் |
| பொருளியல்<br>திரு.பி.சண் | அரசியல் விஞ்ஞானம்<br>திரு.எஸ்.இளங்கோ |
| இ.நாகரிகம்<br>திரு.ஜெயக்குமார் | வரலாறு<br>திரு.வேலா |
| புவியியல்<br>திரு.வேலா, குமரன் | அளவையியல்<br>திரு.சயந்தன் |
| நாடகமும் அரங்கியலும்<br>திரு.மோகனதீபன் | தமிழ்<br>திரு.எஸ்.குகன் |

ஆரம்பம்: 13.04.2013
சனி 8 மணி

## காணி, வீடு விற்பனைக்கு

காணி — தெல்லிப்பழை
மல்லாகம் சந்திக்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கும் இடையில் கே.கே.எஸ். வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
(NRE/L/020)

காணி — கரவெட்டி
கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு அண்மையில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தென்னைகள், பனைகள் உள்ள காணி
(NRE/L/019)

காணி — நெல்லியடி
நெல்லியடி மத்திய கல்லூரிக்கு அண்மையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
(NRE/L/017)

காணி — உடுவில்
உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு அண்மையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
(NRE/L/015)

தொடர்புகளுக்கு:

ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate

காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்

26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810

## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## சுத்திகரிப்பு தொழிலாளர் தேவை

சூழலை சுத்தமாக்கும் சேவையை வழங்கும் எமது நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு தொழிலாளர் (ஆண் / பெண்) தேவை.

கைதடியில் இருந்து 3 Km வரையறைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் அமைந்திருக்கும் எமது அலுவலகத்திற்கு 12.04.2013 வெள்ளிக்கிழமை அன்று நேரில் வரவும்.

கிளின்வெல் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(C-2924)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சாமர்த்தியம்

யாரையும் ஏமாற்றவும் கூடாது; ஏமாந்து போகவும் கூடாது; இதற்கு மிகவும் சாமர்த்தியம் அவசியம்.

ஒரு ஊரிலே பெரிய வீணை வித்துவான் இருந்தார். உண்மையிலே வீணை வாசிப்பதிலே மிகவும் கெட்டிக்காரன்.

அவரது வீணை வாசிப்பை கேட்டு விட்டு ஒரு மகாராஜா என்ன செய்தார் தெரியுமா? ஆள் உயரத்துக்கு ஒரு வீணையை தயார் செய்து அதை அவருக்கு பரிசாகக் கொடுத்தார்.

அதன்பின் அவர் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த வீணையைத் தன்னுடன் எடுத்துச் சென்று கச்சேரிகளில் வாசிப்பார். அவர் வீணை வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறலாம்.

அதேபோல் கடம் வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர் ஒருவர் இருந்தார். அவர் காலத்திலே கடம் வாசிப்பதில் நம்பர் வன் என்று கூறினார்கள்.

இருவரும் ஒரே நேரத்தில் கச்சேரி நடத்துவதில்லை. இவர்கள் இருவரையும் எப்படியாவது ஒரே மேடையில் வாசிக்க வைக்க வேண்டுமென்று மக்கள் விரும்பினர்.

இரு துருவங்களை எப்படி ஒன்றிணைக்க முடியும்?

ஒரு கிராமத்தில் கௌரவத்திற்கு ஆசைப்பட்ட பண்ணையார் இருந்தார். அவர் வீட்டிலே ஒரு கல்யாணம். அக் கல்யாணம் அவரது மகளுக்காகும்.

இந்தக் கல்யாண கச்சேரிக்கு எப்படியாவது அந்த இரு வித்துவான்களையும் கொண்டு வந்து கச்சேரியில் அமர்த்த வேண்டும் என நினைத்தார்.

ஆனால், இவர் வருகிறார் என்றால் அவர் வரமாட்டார். அவர் வருகிறார் என்றால் இவர் வரமாட்டார். என்ன செய்வதென யோசித்தார்.

"சரி இருவரும் வரும் விடயத்தை ஒருவருக்கொருவர் கூறாது, பொய் சொல்லி அழைத்துக் கொள்வோம்.

கச்சேரி ஆரம்பமாகும் சமயத்தில் இருவரையும் மேடையில் அமர வைத்து விடுவோம். எல்லோர் முன்னிலையிலும் அவர்கள் சண்டை பிடிக்கமாட்டார்கள் என்றொரு முடிவுக்கு வந்தார். கூறியபடி ஏற்பாடுகளும் முடிவு பெற்றன.

இருவரும் தனித்தனியாக அழைத்து வரப்பட்டு வெவ்வேறு வீடுகளிலே தங்க வைக்கப்பட்டனர்.

அன்று மாலை இசைக்கச்சேரி நடைபெற இருந்தது.

ஆனால், இருவரும் அழைத்து வரப்பட்ட சிறிது நேரத்தில் இவரது திருகுதாளம் சாதுவாகத் தெரிய வரத்தொடங்கியது.

ஊரிலே இதற்கென சிலபேர் இருப்பார்கள்... ஒருவருக்கொருவர் பற்ற வைப்பதற்காக...

வீணை வித்துவான் கட வித்துவானை எப்படி "கட்" செய்யலாமென யோசித்துப் பார்த்தார்.

உடனே பண்ணையாரை அழைத்து... "இதோ பார்! அந்த 'கட' வித்துவானோடு நான் வாசிப்பதற்கு எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. இருந்தாலும் ஒரு விடயத்தை உங்களுக்கு சொல்ல வேண்டியது எனது கடமை.

அவர் எத்தனை "கடம்" கொண்டு வந்துள்ளார் என்பதை கவனித்தீர்களா?" என்று கேட்டார்.

"கவனித்தேன்! இரண்டு கொண்டு வந்திருக்கிறார்" என்றார்.

"அது எதற்கென்றால், ஒரு கடம் உடைந்தால், மற்றதை உபயோகப்படுத்துவதற்கு... ஒரு சுபகாரியத்திலே மேடையிலே பானை உடைந்தால் அது நல்ல சகுணமா? யோசித்து பாருங்கள்" என்றார்.

நீங்கள் கூறுவது நியாயம்தான். ஆதலால், தருவதாக பேசிய பணத்தைக் கொடுத்துத் திருப்பினார்.

உடனே கடவித்துவான் இந்தப் பண்ணையாரைப் பார்த்து "நீங்கள் சொல்வது சரி... இருந்தாலும் நானும் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டியது எனது கடமை" என்றார்.

என்னவென அவர் வினவினார்.

"அந்த வீணை வித்துவானின் வீணை ஆள் உயரம் வரை உள்ளது. அதை அவர் மட்டும் தூக்க முடியாது. அந்த வீணை மேலே பட்டுத்துணி போர்த்தி முன்பக்கம் இருவரும் பின்பக்கம் இருவருமாக மொத்தம் நான்கு பேர் தூக்கிக் கொண்டு மேடைக்கு வருவார்கள். அது பார்ப்பதற்கு பாடையைத் தூக்கும் ஞாபகம் வரும்.

"சுபமுகூர்த்தம் நடக்கும் வேளையிலே இது தேவைதானா- நன்றாக யோசித்துப் பாருங்கள்" என்று கடவித்துவான் கூறினான்.

இதைக்கேட்ட பண்ணையார் சற்று யோசித்தார்.

"என் வீட்டுக் கல்யாணத்துக்கு கச்சேரியே வேண்டாம்" என்று கூறிவிட்டு அவரையும் கணக்கு தீர்த்து அனுப்பி விட்டார்.

இந்த மூன்று பேரில் யார் கெட்டிக்காரன் என்று நினைக்கிறீர்கள்? ஒன்றுக்கொன்று சளைத்ததில்லையே...

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தொழிலாளர்களின் நலன்களையும் முதலாளிகள் கவனிக்க வேண்டும்

### யாழ். தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

முதலாளி வர்த்தகத்தினர் தொழிலாளர் நலன் கருதி செயற்பட வேண்டுமே தவிர சட்டத்திற்காக மட்டும் செயற்படக்கூடாது என யாழ். மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி நீல லாஜினி ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் கட்டடத் தொகுதியில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் தொழிலாளர் சட்டங்கள் சீரழிந்து காணப்படுகின்றன. அவ்வாறு சட்டங்கள் காணப்பட்டாலும் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

குறிப்பாக தொழிலாளர்களின் நலன்களினை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் உள்ளது. தனியார் துறையினருக்கு ஊழியர் சேமலாப நிதியம் உள்ளது.

அதனை அவர்களுக்கு நியாயமானமுறையில்வழங்குவதற்குதொழில் தருநர்கள் முன்வரல் வேண்டும். தனியார் துறையினருக்கும கட்டாய பொது விடுமுறை தினங்களாக தைப் பொங்கல் திருநாள், கிறிஸ்து பிறப்பு விழா, வெசாக்தினம், நபிகள் பிறந்த தினம், சுதந்திரதினம், புதுவருடப் பிறப்பு ,அதற்கு முந்தைய நாளும் தொழிலாளர்தினம் என்பன உள்ளன.

இத்தினங்களில் தொழிலாளர்களினை வேலைக் கமர்த்த முடியாது. அவ்வாறு வேலைக்கமர்த்தப்பட்டால் அத்தினத்திற்காக சம்பளம் இருமடங்காக வழங்கப்படல் வேண்டும்அல்லதுவேறொரு நாள் விடுமுறை வழங்கப்படல் வேண்டும்.

குறுகிய நாட்களோ, நீண்ட நாட்களோ ஒருவர் தொழிலில் ஈடுபட்டால் அவருக்குரிய ஊழியர் சேமலாப நிதியம் வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறு தொழிலாளர் களின்உரிமைமற்றும்நலன்கள் மீறப்பட்டால் பாதிக்கப்பட்டோர் எமது திணைக்களத்தில் முறையிட்டுதீர்வினை பெறமுடியும்.

சட்டம் என்பது உயிரற்ற சடப்பொருள். இயற்கை ரீதியில் முரண்பாடு ஏற்பட்டமையினால்தான் சட்டம் என்பது உருவாக்கியுள்ளது. ஆகையினால் தொழில் வழங்குநர்கள் தொழிலாளர்களின் நலன் கருதி மனிதாபிமான ரீதியில் செயற்படல் வேண்டும் என்றார் அவர். (செ-4)

### இந்திய அரசின் ஏற்பாட்டில்

# சேதமுற்ற வியாபார நிலையங்களை புனரமைப்பதற்கான கொடுப்பனவு விழா

இந்திய அரசின் நிதி உதவிகோரி போரினால் சேதமுற்ற தமது வியாபார நிலையங்களைப் புரனமைப்பதற்கென கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து ஏற்கனவே விண்ணப்பித்து தகுதியுடையவர்கள் எனக் காணப்பட்டுள்ள ஆயிரத்து230 பேருக்கான கொடுப்பனவு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி ஏ 9 வீதியில் டிப்போசந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் விசேட செயலாளர்களுடன் இந்திய உயர்தானிகராலய அதிகாரிகள், இலங்கை வர்த்தக சம்மேளன அதிகாரிகள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பிரமுகர்களுடன் அரச அதிகாரிகளும் ஒன்றியத்தினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் பயனாளிகளின் கணக்கில் உதவி தொகை வைப்புச் செய்யப்படுவதுடன் பயனாளிகளின் எதிர்கால நலன் கருதி சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. பயனாளிகளுக்கான எதிர்கால அறிவுறுத்தல்களும் இதன்போது வழங்கப்படவுள்ளதுடன் அனைவரையும் சமுகம் தருமாறு இந்நிதி உதவித் திட்டத்தின் பிரதான இணைப்பாளர் டபிள்யூ.ஜே.சூசைரத்தினம் அறியத்தருகின்றார். (செ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-140 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 180 | 150 |
| தக்காளி | 100 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 60 | 60 |
| கரட் | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 50 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100-140 | 100-140 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 90 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 60 |
| கறிமிளகாய் | 120 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 400 | 400 |
| போஞ்சி | 70 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 15-20 | 120 |
| தேசிக்காய் | 60 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40-45 |
| இராசவள்ளி | 90 | 100 | 100 |

# இராசி பலன்

10.04.2013
(பங்குனி 28, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 3.40 மணிவரை
ரேவதி முன்னிரவு 9.57 மணிவரை
இராகுகாலம் 12.06-1.36 மணிவரை
சுபநேரம் 4.36-6.06 மணிவரை
அமாவாசை விரதம்

**மேடம்** எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பிதா சிந்தையுண்டு.

**இடபம்** தடைப்பட்ட காரியங்கள் கை கூடும், உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், செய் தொழில் வருமானம் அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**மிதுனம்** பிறர் உதவியுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், சுப தகவல்களால் நன்மையுண்டு, முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும்.

**கடகம்** கட்டுப்பாடுகள் ஏற்படலாம், உடல் உழைப்புண்டு, எதிர்பாராத வகையில் ஏற்படும் பயணங்களால் பலனுண்டு, மனதில் அச்சமான நிலைகள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** குடும்பத்தில் கோபமாக பேசிவிட்டு மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தலான சம்பவங்கள் ஏற்படலாம்.

**கன்னி** அபூர்வ சந்திப்புண்டு, திடீர் பயணங்களால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், நீங்கள் பகைவராக நினைத்த நபர் உதவி செய்ய முன்வரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகள் நலன் கருதி செலவுகள் செய்து மகிழ்வீர்கள், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், மனச்சஞ்சலங்கள் கூடும்.

**தனுசு** கல்விக்காக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும், பயந்த சுபாவமுண்டு, ஆடம்பர பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், நண்பர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மகரம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொருளாதார நிலையில் முன் னேற்றம் காண்பீர்கள், அந்நியர் சந்திப்புண்டு, சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**கும்பம்** பூமி யோகமுண்டு, உங்கள் வார்த்தைகளை பிறர் ஏற்று நடப்பர், பொருள் விரயமுண்டு, முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மீனம்** பெரியோர் ஆசியுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், சயன சுகமான நாள், கற்பனை மிகுதியான நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த கடன் சுமையால் வர்த்தகர் தலைமறைவு

நெல்லியடி நகரப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் 27 இலட்சம் ரூபாவுடன் தலைமறைவாகியுள்ளார்.


நெல்லியடி முடக்காடுச் சந்தியில் உணவகம் ஒன்றை நடத்தி வந்த வர்த்தகர் தனது தொழிலை மேம்படுத்துவதற்காக 27 இலட்சம் ரூபா கடனைப் பெற்றுள்ளார்.

நாளுக்கு நாள் மீற்றர் வட்டி அதிகரிக்க வர்த்தகரினால் பணத்தை மீளச் செலுத்த முடியாமல் சில தினங்களுக்கு முன் தலைமறைவாகியுள்ளார் என கூறப்படுகிறது.


குறித்த வர்த்தகர் துன்னாலை கல்லிகை பகுதியைச் சேர்ந்த நபரிடம் அதிகூடிய மீற்றர் வட்டித் தொகையாக 20 இலட்சம் ரூபாவையும் வேறு சிலரிடம் மிகுதிப்பணத்தையும் கடனாக பெற்றுள்ளார்.

அடிக்கடி வந்து பணத்தை மீளச் செலுத்துமாறு கடன் கொடுத்தவர்கள் தொல்லை கொடுத்து வந்ததாகவும் இதனால் வர்த்தகர் தலைமறைவாகி இருக்கலாம் எனவும் தெரிய வருகிறது.

வடமராட்சி நெல்லியடியில் அண்மைக் காலமாக மீற்றர் வட்டிக்கு பணத்தைப் பெற்று மீளச் செலுத்த முடியாமல் தலைமறைவாகும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (செ-3-24)




# சமாதான நீதவானாக நியமனம்



(தும்பளை)

கரவெட்டி துன்னாலை தெற்கைச் சேர்ந்த நல்.கணேசன் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீனால் நியமனம் செய்யப்பட்டு பின்னர் கல்கிஸ்ஸை மாவட்ட மேலதிக நீதிபதி பிரதீப் எம்.அபேரத்ன முன் னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற்சங்க சம்மேளத்தின் தொழிலுறவு அலுவலரான இவர் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் பொதுஜனத் தொடர்பு அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். (செ-5,19)

# புதுவருடச் சந்தை

(தும்பளை)


கரவெட்டி சமுர்த்தி மகா சங்கம், உடுப்பிட்டி சமுர்த்தி வங்கி, நெல்லியடி சமுர்த்தி வங்கி, துன்னாலை சமுர்த்தி வங்கி ஆகியன இணைந்து நடத்தும் புதுவருடச்சந்தை இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் நெல்லியடி பொதுச் சந்தைக்கு முன்பாக நடத்தப்படவுள்ளது.

இதில் மலிவானதும் தரமானதுமான உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-3-19)

# கூடைப்பந்தாட்ட போட்டிகள் இன்று

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் மானிப்பாய் ஏஞ்சல் சுவதேச பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட இருபாலாருக்குமான போட்டியில் பங்கு பற்றும் அணிகளை குறித்த நேரத்திற்கு சமுகம் தந்து போட்டியில் பங்குபற்றுமாறு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (செ-3,23)


நல்லூர் பிரதேச செயலகத்தினரால் புத்தாண்டை முன்னிட்டு நேற்று திவிநெகும வாழ்வெழுச்சிப் புத்தாண்டு சந்தை கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் உள்ளிட்ட விருந்தினர்கள் இணைந்து நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் விருந்தினர்கள் புத்தாண்டுச் சந்தையை பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

# டிப்ளோமா பட்டதாரிகளுக்கு...

சேர்ந்தவர்கள் வட மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி.செ.சு. செபஸ்ரியன் உடன் 077 209 0038 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளும்படி வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

ஆசிரியர் நியமன பெயர் விபரம் வருமாறு :-

என்.பிருந்தா-புலோலி, யு.சசிகலா-வவுனியா, எஸ்.சரன்ஜா-வவுனியா, ஆர்.மேகலா-மீசாலை, ரி.தியாகேஸ்வரி-வவுனியா, எஸ்.மதனரூபி-வவுனியா, கே.ஜனனி-ஆனைக்கோட்டை, கே.தயானிதி-ஆனைக்கோட்டை, ரி.கிருத்திகா-உடுப்பிட்டி,

எஸ்.கோபிகா-நல்லூர்,சி.மேரி ஜெயபாலினி-யாழ்ப்பாணம், பி.ராதிகா-வேலணை, ஆர்.மாதங்கினி-அச்சுவேலி, சி.கிறிஸ்ரின் வேர்ஜினி-குருநகர், ரி.வனஜா-கைதடி, ஆர்.சிந்துஜா-திருநெல்வேலி, எம்.நிசாந்த்-நல்லூர், ப.தாரணி-சாவகச்சேரி, ரி.சுதர்சன்-புதுக்குடியிருப்பு, எஸ்.யாழினி-வவுனியா, ஏ.சாலினி-புத்தூர்,

பி.தர்சிகா-திருநெல்வேலி, ஆர்.ரமணன்-அல்வாய், ஜே.ஈ.மார்லின் தயானா-கொழும்புத்துறை, ஜே.கௌசிகா-அரியாலை, எஸ்.சிவாஜினி-புலோலி, ரி.மயூரன்-முள்ளியவளை, ரி.பத்மசிறி-புதுக்குடியிருப்பு, என்.றேகா-கே.கே.எஸ்.வீதி, ஏ.சுபேசன்-கோண்டாவில், ரி.அஜந்தன்-நவாலி, கே.மஜீதா-மீசாலை, பி.மேகலா-ஆனைப்பந்தி, வி.சரண்யா-திருநெல்வேலி,

ஜி.சாரங்கன்-செட்டிக்குளம், எஸ்.மேரி புஸ்பமலர்-இளவாலை, பி.சுபாசினி-உடுப்பிட்டி,எஸ்.அபிராமி-வேலணை, எம்.சதீஜா-சாவகச்சேரி, கே.பிரியதர்சினி-சித்தங்கேணி, வை.லக்ஸ்மன் சுரெந்தர்-குருநகர், எஸ்.நிலானி-அல்வாய், பி.சுதேசினி-கொடிகாமம், எஸ.சிவரமணன்-சுளிபுரம், பி.துதீஸ்குமார்-அரசடி வீதி, எஸ்.கங்காதரன்-கரவெட்டி, ஏ.சர்வேஸ்வரன்-சுளிபுரம், என்.சகிலன்-உடுப்பிட்டி, கே.துஜாந்தனன்-ஊர்காவற்றுறை, ஓ.இ.ஜெயபிரியங்கன்-வண்ணார்பண்ணை, பி.சுதேஸ-நீர்வேலி,

கே.கஜந்தன்-கொடிகாமம், பி.நிசாந்தன்-அல்வாய், ஆர்.ஹேமச்சந்திரன்-சுன்னாகம், இ.றொபின்சன்-உரும்பிராய், ஜே.சங்கீதா-கல்வியன்காடு, வி.விஜயசங்கர்-கோண்டாவில், எஸ்.செந்துரன்-வட்டுக்கோட்டை, எஸ்.பாலதீபன்-வட்டுக்கோட்டை, பி.புஸ்பவிஜிதா-வரணி,

கே.றுக்சிகா-திருநெல்வேலி, வி.கவீசன்-கோண்டாவில், ஜே.கவித்ரா-கிளிநொச்சி, கே.சசிரேகா-நுணாவில், ஐ.அகிலரூபி-மானிப்பாய், எஸ்.லக்சனா-கொக்குவில், கே.சரன்ஜா-கரவெட்டி, பி.மயூரி-பருத்தித்துறை, எஸ்.கௌசியா-சுன்னாகம்,

ஆர்.சுகந்தன்-சாவகச்சேரி, பி.தமயந்தி-மானிப்பாய், எம்.லக்சிகா-கோப்பாய், ஆர்.தர்மிலா-நல்லூர், இ.அரனியா-நீர்வேலி, எஸ்.ரஞ்சிதா-நல்லூர், எஸ்.டிலக்ஷா-நல்லூர், எஸ்.அபிராமி-சுண்டிக்குழி, வி.புவி-சுன்னாகம், ரி.தர்சிகன்-மட்டுவில் கிழக்கு, கே.தேனுகா-கிளிநொச்சி, ரி.தாரணி-மானிப்பாய், வி.கீதாசினி-பண்டத்தரிப்பு, ரி.பிரமிளா-ஆரையம்பதி, எம்.மயூரன்-அச்சுவேலி, எஸ்.சங்கீதா-கொடிகாமம், வி.துஜீவா-தாளையடி, கே.ஜனக்ன்-காரைநகர், எஸ்.ஆர்த்திகா-சுன்னாகம், எஸ்.சோமகாந்தி-மீசாலை,

அஜந்தாஜினி-அரியாலை, ரி.ஜீவிதா-வல்வெட்டித்துறை, எஸ்.ஆன்குயின்ரீனா-நவாலி, எம்.சொரூபினி-அரியாலை, எஸ்.கோபிகா - யாழ்ப்பாணம், ஏ.சுதாசினி-உடுவில், கே.பிரசாலினி-வட்டுக்கோட்டை, எஸ்.சர்மிலா-சண்டிலிப்பாய், வி.விஜிதா-வவுனியா, எஸ்.பாஸ்கரன்-சண்டிலிப்பாய், பி.கௌபிரியா - இரம்பைக்குளம், ரி.சுசிலதா-கோப்பாய், ஆர்.பானுஜா-கைதடி, ரி.கார்த்திகா-கிளிநொச்சி, கே.நிக்சா-கொக்குவில், கே.சத்தியபிரகாஸ்-முன்னேஸ்வரம், ஜே.எம்.சமீர்-ஆனைமடுவ, என்.கேசனா-முல்லைத்தீவு, டபிள்யு.சிவதர்சன்-வைரவப்புளியங்குளம்,

பி.தினேஸ்குமார்-வேலணை, ரி.துஷாந்தினி-நெடுங்கேணி, கே.அஜந்தினி-வட்டுக்கோட்டை, கே.மைதினி-மன்னார், கே.சியாமளா-பருத்தித்துறை, என்.செந்தாளன்-நெல்லியடி,

ஏ.ஆதவன்-உருத்திரபுரம், பி.பிரியதர்சினி-யாழ்ப்பாணம், ஏ.ஜே.மேரி தனுசியா-உடுவில், எம்.விமல்ராஜ்-நெடுந்தீவு, ஏ.சிரோமி-வவுனியா, ஜே.ப்ரின்சி-நெடுந்தீவு, எம்.மெலனி-நெடுந்தீவு, பி.அ.சகோ.மேரிமொறின் றோச்-யாழ்ப்பாணம், அ.சகோ.பி.டிலீசியா-மிருசுவில், ஜே.றதீசியா-கரவெட்டி, எஸ்.ஏ.மினோல்டா-தோணிக்கல், அ.சகோ. இ.பா.சவியானா கில்டா-யாழ்ப்பாணம், பி.விபுலாஜினி-மானிப்பாய்,

இமாஜினி-சண்டிலிப்பாய், எம்.நிரோஜன்-கோப்பாய், பி.கார்த்தீபன்-வல்வெட்டித்துறை, என்.நிசாந்தினி-சண்டிலிப்பாய், வி.ஜெயராஜா-அளவெட்டி, ஏ.நிரோசா-மூளாய், எஸ்.ஏ.நிலோஜினி-துன்னாலை, கே.அர்ஜினி-கரவெட்டி,எம்.ஆன்.லுட்ஸ்-பண்டத்தரிப்பு, ரி.தர்சினி-வட்டுக்கோட்டை, ரி.சிஜானா-சுன்னாகம், வி.ஜசோதா-நாகர்கோவில், ஜே.அஸ்வின்-கரவெட்டி, ஈ.சுவீற்றி-சண்டிலிப்பாய், பி.றஜிதா-கோப்பாய், ஜே.நிரூபறோஜினி-மன்னார், என்.பார்த்தீபன்-வவுனியா, பி.தனுஷியா-மூளாய், வை.வைஷரபி-வவுனியா, வி.தர்மினி-யாழ்ப்பாணம், கே.அஜந்தினி-கல்வியன்காடு, டபிள்யு.ஜான்சியா-அரியாலை, என்.பிரசாந்தினி-அரியாலை, ஆர்.எமில்டா-இருபாலை, எஸ்.ஹம்ஷா-மானிப்பாய், ஜீ.நிஷாந்தியா-மானிப்பாய், எஸ்.சைலஜா-கல்வியன்காடு, எஸ்.நிரோஜினி-சாவகச்சேரி,

எஸ்.தீபனா-சாவகச்சேரி, ஆர்.சுவேந்தினி-கரவெட்டி, என்.நிரோஜி-வரணி, என்.நாகசுதர்சினி-மன்னார், ரி.சர்மிலா-கிளிநொச்சி, பி.றஜனி-கோப்பாய், கே.கோசலா-வவுனியா, ஏ.பிரதீபா-ஒட்டுசுட்டான், ஏ.நிரோசா-கிளிநொச்சி, ஏ.தாரணி-சாவகச்சேரி, எஸ்.நர்மலா-சாவகச்சேரி, எவ்.ஜெனாட்றம்ஷியா-அளம்பில், எஸ்.யாழினி-காரைநகர், ஜே.கனிஷ்ரா-வவுனியா, எஸ்.சோபிகா-கோப்பாய், ரி.யதுஷ்யா-தெல்லிப்பளை, எஸ்.கோகுலராணி-பளை,

எம்.ஜனனி-மன்னார், பி.சுமணா-கொடிகாமம், ரி.ஜெயரூபி-மீசாலை, வை.கார்த்திகாஜினி-மானிப்பாய், ஜே.சாலினி-கோப்பாய், எம்.மஞ்சுளா-கிளிநொச்சி, வி.நிக்ஷன்-முல்லைத்தீவு, ஜே.குயின்ஷிகா-சுன்னாகம், பி.கஜந்தன்-துணுக்காய், எஸ்.செவவேள்-கிளிநொச்சி, எவ்.சி.ஷவ்னா-மன்னார், எஸ்.ஜெயசுஜி-யாழ்ப்பாணம், கே.பாலகுமார்-சுளிபுரம், எஸ்.சுபதர்சினி-சுண்டிக்குழி, ரி.கொலின்ஸ்-வவுனியா,

ஆர்.அபினேஷ்- தொண்டைமனாறு, என்.ஐ.எவ்.கேமலதா-மன்னார், ரி.லிங்கேஸ்வரன்-சுளிபுரம், எஸ்.நிஷாந்த்-புத்தூர், எஸ்.பிரவினா-கிளிநொச்சி, எஸ்.மிர்தா-புத்தூர், கே.தசிகரன்-வயாவிளான், ரி.கஸ்தூரி- யாழ்ப்பாணம், எஸ்.வினோதா-யாழ்ப்பாணம், எஸ்.ஸ்ரீமதி-கீரிமலை, எஸ்.சுரேனா-மானிப்பாய், ஜே.சர்மிலா-அச்சுவேலி, எஸ்.மதுரியா-ஏழாலை, கே.குகப்பிரியா-நெடுந்தீவு, எஸ்.சியாமளா-புலோலி, ஏ.அனிதா-பருத்தித்துறை, ஏ.யசில்டா சாலினி-முருங்கன், வி.தியாகினி-கிளிநொச்சி, ஆர்.வினிதா-ஏழாலை, எஸ்.கஜானி-கைதடி, ரி.பமிலா-மல்லாகம், எஸ்.மேனகா-காரைநகர், எஸ்.சுசீந்திரா-முள்ளியவளை, ரி.பவகரன்-முள்ளியவளை, ஏ.சங்கீதா-மன்னார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை தடைகள்வரினும் மக்களுக்காக உழைப்போம்

## சில்வேஸ்திரி அலென்ரின் எம்.பி.குரல்

(யாழ்ப்பாணம்)

எத்தனை தடைகள்வரினும் மக்களுடைய வாழ்வை முன்னேற்றுவதற்காக பாடுபடுவோம் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்துள்ளார். நல்லூர் பிரதேச செயலகத்தினால் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு திவிநெகும வாழ்வெழுச்சி புத்தாண்டுச் சந்தையொன்று நேற்று கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்தைப் பொருத்தவரை சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரம், பொருளாதாரம் அபிவிருத்தி கண்டு வருகின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் தேவைகள் இனம் காணப்பட்டு வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வாழ்வின் எழுச்சி எனச் சொல்லப்படும் திவிநெகும திட்டத்தை நடைமுறைப்படுத்த விடாது பல எதிர்ப்புக்கள் வந்தன. இருப்பினும் அந்த எதிர்ப்புக்களின் மத்தியிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் மீண்டும் மீண்டும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ வேண்டும் என நினைப்பவர்களும் உண்டு. ஏனெனில் அவர்களின் வறுமையைக் காரணம் காட்டி அரசியல் நடத்த பார்க்கின்றனர்.

மேலும் தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை குறைந்த விலையில் இங்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். பொருட்களின் தரத்தில் குறைவு இருந்தாலும் விலை குறைவாக இருக்கும் காரணத்தினால் அதனைப் பொதுமக்களும் வாங்குகின்றனர். எனவே, தரமான பொருட்களை உள்ளூரில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டும். அத்தோடு உள்ளூர் உற்பத்தியை ஊக்கப்படுத்த வேண்டும்.

எத்தனை தடைகள் வரினும் மக்களுடைய வாழ்வாதாரத்தை முன்னேற்ற நாம் தொடர்ந்து பாடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# நிறுவை இயந்திரங்கள் தொடர்பில் வவுனியாவில் விசேட பரிசோதனை

(பூந்தோட்டம்)

வவுனியா நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் மீது நேற்று நிறுவை இயந்திரங்கள் தொடர்பில் விசேட பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளது.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைத் திணைக்களத்தின் வவுனியா அலுவலக பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தலைமையிலான குழுவினர் இப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த சில மாதங்களாக நிறுவை இயந்திரங்களுக்கு முத்திரையிடும் செயற்பாடு வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்று வந்திருந்த நிலையில் முத்திரையிடாத நிறுவை இயந்திரங்களை கண்டறிவதற்கே இப் பரிசோதனை இடம்பெற்றதாக பா.இராஜேஸ்வரன் கூறினார்.

அத்துடன் கடந்த பெப்ரவரி மாதம் வவுனியா மாவட்டத்தில் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின் போது 17 வர்த்தக நிலையங்களில் முத்திரையிடப்படாத நிறுவை இயந்திரங்கள் இனம் காணப்பட்டு அவ் வர்த்தக உரிமையாளர்களுக்கு எதிராக வவுனியா நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 42 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதாகவும் தற்போது அடையாளம் காணப்படும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக எதிர்வரும் நாட்களில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-2-266)

# வயலின், யோகா, ஹிந்தி கற்கைகள் விரைவில் ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் வயலின், யோகா, ஹிந்தி ஆகிய கற்கைநெறிகளை யாழ். இந்திய துணைத்தூதரகம் ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சிகள் எதிர்வரும் ஏப்ரல் இறுதி வாரம் மே மாதம் பகுதியில் ஆரம்பிப்பதற்கு இந்திய தூதரகம் தீர்மானித்துள்ளது.

பாடநெறிகளுக்கான பதிவுக் கட்டணம் 250 ரூபா என்றும் பயிற்சி நெறி இலவசம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிகள் அனைத்தும் வார நாட்களில் மாலை 5 மணியலிருந்து 7 மணிவரை நடைபெறவுள்ளதென்றும் இக்கற்கை நெறிகளை தொடர விரும்புவர்கள் வார நாட்களில் சமூகமளிக்கூடியவர்களாக இருக்க வேண்டுமென யாழ். இந்திய துணைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிகள் அனைத்தும் இந்திய துணைத் தூதரகம் இல-14 மருதடி வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளன.

இதற்கமைவாக இப்பயிற்சியை தொடர விரும்புவர்கள் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வகையில் தமது விண்ணப்பங்களை cul. jaffna@mea. gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 021222053 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

விண்ணப்பத்தாரிகள் தமது விண்ணப்பத்தில் பெயர், வயது, இணையவுள்ள பாடநெறி (ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களை தெரிவு செய்ய முடியும்). மேலதிக தொடர்புகளுக்கான விபரங்கள் என்பவற்றை குறிப்பிடுமாறு கோரப்பட்டுள்ளனர். (செ-6)

# கிளிநொச்சி கோவில் காணியை தனி நபரொருவர் அபகரிக்க முயற்சி

## அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தொண்டமாநகர் கிராம அலுவலர் பிரிவில் உதிரவேங்கை வைரவர் கோவலின் காணியை தென் பகுதியைச் சேர்ந்த தனிநபர் ஒருவர் அபகரிக்க முற்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, கோவிலுக்கு முன்பாகவுள்ள கோயிற் காணியானது. மஹோற்சவ காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் இப்பகுதியில் உள்ள இளைஞர்கள் இக்காணியை விளையாட்டு தேவைகளுக்கு பயன்படுத்தி வந்ததாகவும் தெரிவிக்கின்றனர். இருப்பினும் தற்போது இக்காணியில் தென்பகுதியைச் சேர்ந்த ஒருவர் மதில் கட்டி இக்காணியை அபகரிக்கும் நிலைமை ஏற்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ் விடயம் சம்பந்தமாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மக்களுடன் கலந்துரையாடியதுடன் ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் இப்பிரச்சினை சம்பந்தமாக பாராளுமன்றம் வரை கொண்டு செல்ல இருப்பதாகவும் சட்டபூர்வ நடவடிக்கைக்காக நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் தெரிவித்தனர். எனவே இக்கோவில் காணி தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு இக்காணியை விடுவித்து தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-3-254)

# க.பொ.த.(சா/த) பரீட்சை முடிபுகள் -2013

**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி**

ஈ.துஜீகரன்- 8ஏபி, எஸ்.மயூரன்- 8ஏசி, ரி.சுஜிந்தன்- 8ஏசி, ரி.சிந்துஜன்- 7ஏபிசி, எஸ்.ஐங்கரன்- 7ஏசிஎஸ், ஆர்.சஞ்சீவன்- 6ஏ 2பிசி, ஜி.லிபிநாத்- 6ஏ2பிசி, கே.புருசோத்தமன்- 6ஏ 2பி சி, ஈ.தினேஸ்- 6ஏ 2பிசி, ஆர்.விதுசாத்- 6ஏ2பிசி, எஸ்.ரேணுஜன்- 5ஏபி 2சி, டி.டினோசன்- 5ஏ3பிஎஸ், எஸ். ராதா கிருஸ்ணன்-. 5ஏ 2பி2சி, ஜே.துவாரகன்- 5ஏ3பிசி, பி.குருப்ரேகன்- 5ஏ3பிசி,எம்.அபிசாத்- 4ஏ4பிஎஸ், எஸ்.சுவன்சன்- 4ஏ 2பி 3சி, பி.திவாகர்- 4ஏ3பி சிஎஸ், ஆர். டினோஜன்- 4ஏ2பி3சி. (செ)

## உடையார்கட்டில் யானைகள் அட்டகாசம்

உடையார் கட்டு தெற்கு கிராமத்தில் உள்ள குளக்கட்டு பகுதியில் யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக. அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மேற்குறித்த கிராமத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் கூட்டம் கூட்டமாக வரும்யானை கள் விவசாயப் பயிர்ச் செய்கையை நாசம் செய்ததுடன் வீடுகளுக்குள்ளும் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளது. (செ-3)




இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்: 5'8"<br>கி.பா: 16<br>தகைமை/தொழில்: BSc விரிவுரையாளர்<br>தொ.இ: B -1580 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>உயரம்: 5'7"<br>கி.பா: 14.75<br>தகைமை/ தொழில்: Bio Medical Science Degree, Health Science Degree, PHD (Student) Australia PR (Doctor)<br>தொ.இ: G -610 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 2, 4 இல்செவ்<br>தகைமை/தொழில்: HNDA (Computer English)<br>தொ.இ: B -1582 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'3"<br>கி.பா: 39.5, 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G-612 |
| பிறப்பு: 1984 இந்து செங்குந்தர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>உயரம்: 5'8"<br>தகைமை/ தொழில்: A/L வியாபாரம்<br>தொ.இ: B -1583 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 65, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L ஆசிரியர்<br>தொ.இ: G -614 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>உயரம்: 5'8"<br>கி.பா: 25.25<br>தகைமை/தொழில்: BBM Post Master<br>தொ.இ: B -1584 | பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'5"<br>கி.பா: 19, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L Teacher<br>தொ.இ: G -615 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளை வழங்கும் விஜய வருடம்

**நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி (13.04.2013) சனிக்கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்த யோகத்ததில் விஜய வருடம் பிறக்கிறது.**

| | | | |
|---|---|---|---|
| புதன் (அ) | சூரியன் செவ் (அ) சுக்ரன் (அ) கேது | சந்திரன் வியாழன் | |
| | 13.04.2013 தமிழ் புத்தாண்டு கிரக நிலை | | |
| | | | |
| லக்னம் | | சனி (வ) ராகு | |

மண்ணில் விஜய வருட மழைமிகுதி
எண்ணுசிறு தானியங்க ளெங்குமே -நன்னும்
பயம் பெருகி நொந்து பரிவாரமெல்லாம்
நயக்கலின்றி வாடுமென நாட்டு

பொருள்:- இந்த விஜய வருடத்தில் நல்ல மழை பெய்யும். அதிலும் மிகுதியாகவே மழைபொழியும். சிறு சிறு தானியங்கள், புஞ்சை தானியங்கள் அதிக அளவில் விளையும்.




ஆனால் சில குறிப்பிட்ட பகுதிகளில் அதிக மழையால் விவசாயம் பாதிக்கலாம். அதனால் விவசாயிகள் வாட்டத்தோடு இருக்கின்ற நிலை உருவாகலாம்.

தமிழ் வருடங்கள் அறுபதில் இருபத்து ஏழாவதாக வருவது தான் விஜய ஆண்டு. இந்த ஆண்டுக்கான பாடலின் பொருளைப் பார்க்கின்ற பொழுது இந்த விஜய வருடம் மழை மிகுதியாக வந்து மக்களைக் குளிர்விக்கப் போகிறது என்றும் அளவிற்கு அதிகமாக மழை வரும் பகுதிகளில் பயம் ஏற்பட்டு நொந்து கொள்ளும் நிலைமையும் உருவாகும் என்றும் எடுத்துரைக்கின்றது.

முற்காலத்தில் வருடாதி வெண்பா என்ற தலைப்பில் முன்னோர்கள் எழுதிய பாடல் இது. இது பஞ்சாங்கங்கள் அனைத்திலும் இடம்பெற்றிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

பாடலின் பொருளைப் பார்த்து நாம் பயப்பட வேண்டியதில்லை. தற்காலிக கிரக நிலைகளுக்கேற்பவும் ராஜா, மந்திரியாகப் பொறுப்பேற்றுள்ள கிரக நிலைகளை அடிப்படையாக வைத்தும் உலக நிலைமை மாறுபடலாம். வருடத் தொடக்க நாளில் நாம் செய்யும் கூட்டுப் பிரார்த்தனை தான் வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இல்லத்தில் சீற்றங்கள் வராமலிருக்க தனிப்பட்ட பிரார்த் தனை போதுமானது. இயற்கை சீற்றங்களால் உலகம் பாதிக்கப்படாமல் இருக்க கூட்டு பிரார்த்தனைகள் தான் தேவை. அதிகாலையில் புத்தாண்டை கொண்டாடி நாம் வரவேற் போம். பிறக்கும் புத்தாண்டில் அதன் கிரக நிலைகளுக்கு ஏற்ப வழிபாடுகளை நாம் வைத்துக் கொண்டால் வாய் ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். வசதிகள் பெருகும்.

இந்த விஜய வருடத்தில் ராஜாவாக குருவும் மந்திரியாக சனியும் சேனாதிபதியாகவும் அர்க்காதிபதியாகவும், மேகாதிபதியாகவும், சனியும், சஸ்யாதிபதியாக செவ்வாயும், தான்யாதிபதியாக சந்திரனும், ராசாதிபதியாக குருவும் நீரஸாதிபதியாக செவ்வாயும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். குருவிற்கு இரண்டு பொறுப்புக்களும் சனிக்கு நான்கு பொறுப்புக்களும் செவ்வாய்க்கு இரண்டு பொறுப்புக்களும் சந்திரனுக்கு ஒரு பொறுப்புக்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

எந்த பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதோ அந்த கிரகங்கள் நமது இராசியில் எந்த இடத்திற்கு அதிபதியோ அந்த இடங்கள் எல்லாம் தழைக்கும், நல்ல பலன்கள் நாடி வந்து சேரும்.

**நன்மை பெறும் இராசிகள்!**

ராஜாவாக குரு விளங்குவதால் குருவின் பார்வை பதியும் இராசிகளான கன்னி, விருச்சிகம் மகரம் ஆகிய இரர்சிக்காரர்களுக்கும் குருப்பெயர்ச்சிக்கு பின்னர் துலாம், தனுசு, கும்பம் ஆகிய இராசிக்காரர்களும் பொதுவாக ராஜாவாக குரு இருப்பதால் குருவிற்குரிய நட்சத்திரங்களான புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் 3,12,21,30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கும் மந்திரியாக சனி விளங்குவதால் 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு ஒரு பொன்னான ஆண்டாக அமையும்.

மேற்கண்ட இராசி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு பொன்னும் பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் உயரும். இனிய வாழ்வும் அமையும். ஏனைய இராசிக்காரர்களுக்கும் ஏனைய நட்சத்திரங்களில் பிறந்தவர்களும் தங்கள் ஜாதகத்தை புத்தாண்டு ஜாதகத்துடன் ஒப்பிட்டு பார்ப்பது, தெய்வ வழிபாடுகளைத் தேர்ந்தெடுப்பது சிறப்பு ஸ்தலங்களுக்கு சென்று வந்தால் சகல யோகங்களும் வந்து சேரும்.

இந்த ஆண்டு பிறக்கும் பொழுதே குரு சந்திரயோகத்துடனும், கூட்டுக்கிரக யோகத்துடனும் பிறக்கின்றது. சந்திரன் சுக்ரன் வீட்டில் சஞ்சரிக்க லக்னம் குரு வீடாக இருப்பதால் விபரீத ராஜயோக அடிப்படையில் நாட்டு மக்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் திடீர் திடீரென வந்து சேரும். எதிர்பாராத விதத்தில் இனிய தகவல்கள் வந்தது என்று எல்லோரும் சொல்லும் விதத்தில் அமையும்.

குரு ஆதிக்கம் உள்ள ஆண்டு என்பதாலும் நட்சத்திர அடிப்படையில் சூரியனின் ஆதிக்கமான கார்த்திகை நட்சத்திரத்தில் பிறப்பதாலும், பத்திரிகைத் துறை, எழுத்துத் துறை, கலைத்துறை, ஜோதிடத்துறை, ஆன்மீகத் துறை, மின்சாரத்துறை, சட்டம் ஒழுங்குத்துறை, நூல் வெளியீட்டுத்துறை, அழகுக்கலை, சின்னத்திரை, வண்ணத்திரை ஆகிய துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எல்லாம் ஆதாயம் அதிகரிக்கும்.

**வழிபட வேண்டிய தெய்வங்கள்!**

பஞ்சம ஸ்தானத்தில் கேது செவ்வாயுடன் இணைந்திருப்பதால் விநாயகப் பெருமான், முருகப் பெருமான் வழிபாடும், சிவன் உமையவள் வழிபாடும் இடப இராசி என்பதால் நந்தி வழிபாடும் இராசி நாதன் சுக்ரன் என்பதால் விஷ்ணு, இலக்சுமி, அனுமான் வழிபாடும் , லக்னாதிபதி குரு என்பதால் சரஸ்வதி வழிபாடும் சனி இலக்னத்தைப் பூர்ப்பதால் நவக்கிரக வழிபாடும் முனிஸ்வரர் வழிபாடும் செய்து வருவதன் மூலம் விஜய ஆண்டை ஒரு வெற்றிக்குரிய ஆண்டாக அமைத்துக் கொள்ளலாம். குரு ஆதிக்கம் என்பதால் அறுபத்து மூவர் வழிபாடும் யோகம் தரும்.

இல்லத்திலும் உள்ளத்திலும் எல்லா தெய்வங்களையும் நினைத்து வழிபாடு செய்யுங்கள். யோகபலம்பெற்ற நாளில் உங்கள் சுய ஜாதக ரீதியாக யோகம் தரும் கிரகத்துக்குரிய ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து அதன் சன்னதிக்குச் சென்றால் எண்ணியது நடக்கும். சந்தோசம் நிலைக்கும்.

## சிறப்புக்கள் அனைத்தும் பெற சித்திரை 1-ம் திகதி வழிபாடு



விஜய ஆண்டு ஞாயிற்றுக்கிழமையன்று பிறக்கிறது. ஞாயிற்றுக் கிழமை என்பது சூரியனுக்குரிய நாளாகும். ராஜ கிரகம் என்று போற்றப்படுபவர் சூரியன். எனவேஅன்றைய தினத்தில் அவரை வணங்கும் விதத்தில் கீழ் கண்ட பாடலைப் படித்து வழிபட்டால் நடப்பவை யெல்லாம் நல்லவையாக அமையும்.

காசினி இருளைக் கனிவுடன் நீக்கும்
தேசிகா உன்னைத் தெரிசனம் செய்தேன்!
மாணிக்க மோதிரம் மலர் செந்தாமரை
காணிக்கை யாக்கினால் கடைக்கண் பார்ப்பாய்!
கோதுமை தான்யம் கொண்டுவந் தளித்தால்
மாது மனைகளும் மகிழ்வுடன் தருவாய்!
வாழ்நாள் அனைத்தும் வளமுடன் வாழ்
ஆதவா உன்னை அழைத்தே வருக!

என்ற பாடலைப் பாடித் தினமும் வழிபடுவது நல்லது.

## புத்தாண்டு அன்று காலையில் எதன் முகத்தில் விழிக்க வேண்டும்

புது வருடப்பிறப்பு என்றாலே எல்லோருக்கும் மனதிற்குள் உற்சாகமும், சந்தோசமும் பொங்கி எழும். அப்படிப்பட்ட புத்தாண்டு நாளில் நாம் அதிகாலையில் கண் விழித்தவுடன் முதலில் இறைவனின் திருவுருவப் படங்களைப் பார்ப்பது அந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் நமக்கு நற்பலன்களைத் தரும் விதத்தில் அமையும்.

பொதுவாகவே காலையில் எழுந்தவுடன் நமது உள்ளங்கையைப் பார்த்து வழிபட வேண்டும் என்று பெரியவர்கள் கூறுவதுண்டு. இதற்கு காரணம் நமது விரல் நுனியில் இலட்சுமியும், நடுவில் சரஸ்வதியும், கரங்களின் அடிப்பகுதியில் வீரத்தை வழங்கும் துர்க்கையும் குடி கொண்டிருப்பதாக சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஆகவே கல்வி, செல்வம், வீரம் மூன்றுக்கும் அதி தேவதைகள் வீற்றிருக்கும் உள்ளங்கையை தரிசித்தால் அன்று முழுவதும் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

மேலும்வலம்புரிச்சங்குவைத்திருப்பவர்கள்அதில்காசுகளைப் பரப்பி வைத்து அதன் முகத்தில் விழிக்கலாம். கண்ணாடி, தண்ணீர், ஆலயகோபுரம் போன்றவற்றையும் எழுந்தவுடன் பார்ப்பது நல்லது. பூஜையறையில் கனிகளைப் பரப்பி வைத்து அவற்றின் முகத்தில் விழித்தாலும் கனிவான வாழ்க்கை அமையும். சான்றோர்களின் வாழ்த்துக்களைப் பெறுவது நல்லது.

# எரிபொருள் விலையை குறைக்க அரசின் நடவடிக்கை தேவை

## ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை கணிசமானளவு குறைவடைந்துள்ளதாகவும், இந்த விலை குறைப்பின் பயனாக இலங்கையில் எரிபொருட்களுக்கான விலையைக் குறைக்க வேண்டும். இதன் காரணமாக மக்கள் பயனடைய வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை 85 டொலர்களுக்கு விற்பனை செய்யப் படுகின்றது. இதன்படி இலாபம் வைத்துக் கொண்டு டீசல் ஒரு லீற்றரை 100 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும்.

இவ்வாறு எரிபொருள் விலையை குறைப்பதனால், மின்சாரக் கட்டண மற்றும் பேருந்து கட்டண உயர்வை தடுக்க முடியும்.

கடந்த பெப்ரவரி மாதம் உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 118 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட காரணத்தினால், எரிபொருளுக்கான விலையை அரசாங்கம் உயர்த்தியிருந்தது.

தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை [illegible] அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (செ-2)

# கலைஞர் கருணாநிதியை புலிகள் அச்சுறுத்தியிருக்கலாம் - விக்கிலீக்ஸ்

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவரும் தமிழக முன்னாள் முதல்வருமான மு.கருணாநிதி முதலமைச்சராக இருந்த காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அவருக்கு அச்சுறுத்தல் விடுத்திருக்கலாம் என அமெரிக்கா கருதியதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் 1989 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஆயுத வன்முறைகளை வெடிக்கச் செய்வோம் எனவும் போதியளவு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் வன்முறைகளில் ஈடுபடுவோம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கலாம்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான உதவிகளை கருணாநிதி அதிகளவில் வழங்கியுள்ளதாகவும் குறிப்பாக தமிழீழம் தொடர்பான கடும்போக்குவாதத்தை கருணாநிதி பின்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்துடன் நடைபெற்ற சந்திப்பினைத் தொடர்ந்து கருணாநிதி ஏனைய ஆயுதக் குழுக்களை உதாசீனம் செய்து, புலிகளுக்கு கூடுதல் ஒத்துழைப்பு வழங்கியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தி எதிர்ப்பு முதல் ஈழம் வரை



இளைஞர்களே! குட்டி நாய்களின் குரைப்பைக் கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. ஆகாயத்தின் இடியோசை கேட்டாலும் அஞ்சாமல் எழுந்து நின்று உங்கள் கடமைகளை ஆற்றுங்கள் என்றார். ஆன்மீக ஞானி விவேகானந்தர் அறிவுறுத்தியபடி கல்லூரி இளைஞர்கள் களம் நோக்கிப் புறப்பட்டுவிட்டனர். கடந்த கால வரலாறு மீண்டும் திரும்புகிறது.


இந்தியாவில் மாணவர்கள் சமுதாய நலனுக்காக போராட்டக் களத்தில் நுழைவதற்கு அழைப்பு விடுத்த முதல் மனிதர் அண்ணல் காந்தியடிகள்தான். அடிமைத்தளையை அறுத்தெறிந்து, சுதந்திரக் காற்றை இந்தியர் சுவாசிக்க மகாத்மா தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்க தேசாய் தொடர் உண்ணா நோன்பில் ஈடுபட்டனர். முடிவில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தது. மாணவர் போராட்டம் வென்றது.

பீகார் மாநிலத்தில் அப்துல் கபூர் ஆட்சியின் ஊழலுக்கு எதிராக மாணவர்கள் அணி திரண்டனர். சர்வோதயப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஜெயப்பிரகாஷ் நாராயன் ஆதரவுக் கரம் நீட்டினார். முழுமைப் புரட்சி என்ற முழக்கத்துடன் தொடங்கிய மாணவர்களின் ஊழல் எதிர்ப்புப்போர், பீகார் கபூர் ஆட்சியைக் கவிழ்த்ததோடு, இந்திய அரசையே ஜனதா கட்சியின் கைகளில் ஒப்படைக்குமளவிற்கு பல்வேறு பரிமாணங்களைப் பெற்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரை பெருமளவில் மாணவர்கள் பங்கேற்று நடத்தி புதிய போராட்டத்தில் வன்முறை வெடித்து மாணவர்களின் கைமீறி போராட்டத்தின் திசை மாறியது.

தண்டவாளம் தகர்க்கப்பட்டது. தபால் நிலையம் கொளுத்தப்பட்டது, அரசுக் கட்டடங்களில் தீ வைக்கப்பட்டது, பொலிஸ்துறை, இந்திக்கு மாறாக ஆங்கிலத்தில் கட்டளைகள் பிறப்பிக்க வழிவகுக்கப்பட்டது.

அனைத்துக் கல்லூரிகளிலும் 5 ஆண்டுகளுக்குள் தமிழ் பயிற்று மொழியாக்கப்படும் என்று உறுதிமொழி வழங்கப் பட்டது. 1965,1968 என்று இரண்டு



வரும்படி மாணவர்களை அழைத்தார். படிக்கும் பிள்ளைகளைப் போராடத் தூண்டியதற்காக மிகக் கடுமையாக காந்தி விமர்சிக்கப்பட்டார்.

பகத்சிங்கும் அவருடைய தோழர்களும் படிக்கும் பருவத்தில் காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றவர்கள் தான். நாடு முழுவதும் ஏராளமான மாணவர்கள் பாடசாலைகள், கல்லூரிகள் அனைத்தையும் புறக்கணித்து அரசியல் களத்தில் அடியெடுத்து வைத்தனர்.

அடிமை இந்தியாவில் உரிமைகளுக்காகப் போராடிய மாணவர்கள் சுதந்திர இந்தியாவில் ஊழலுக்கு எதிராகப் போராட நேர்ந்தது.

சிமன்பாய் படேல் ஆட்சியின் ஊழலுக்கு எதிராக மாணவர்கள் முதலில் அகமதாபாத்தில் தொடங்கிய போராட்டம் குஜராத் மாநிலம் முழுவதும் பெருந்தீயாய்ப் பரவியது. மாணவர்களுக்கு ஆதரவாக மொரார்ஜி சரித்திரம் படைத்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்றும் எளிதில் மறக்க முடியாதது.

திராவிட இயக்கம், ராஜாஜி தலைமையில் 1937 இல் அமைந்த அமைச்சரவை பாடசாலைகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிய நாள் தொட்டு இந்தி எதிர்ப்புப் போரில் கடுமையாக ஈடுபட்டது.

மாணவர்களை முன்னிறுத்தி இந்தி எதிர்ப்புப்போரில் ஈடுபட் 1965 ஜனவரியில் தி.மு.கழகம் வியூகம் அமைத்தது. தன்னெழுச்சியாக மாணவர்கள் தமிழகம் முழுவதும் திரண்டனர். அண்ணா மாணவர்களின் பின்னால் நின்றார். இரண்டு மாதங்கள் தமிழகம் தீப்பற்றி எரிந்தது.

சின்னச்சாமி, சிவலிங்கம், அரங்கநாதன், சாரங்கபாணி, வீரப்பன், முத்து என்று தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்வோர் எண்ணிக்கை பெருகியது. போராட்டத்தில் மாணவர்களின் கைமீறி வெள்ளக்கோயில், குமாரபாளையம், திருப் பூர், பொள்ளாச்சி, மணப்பாறை, கரூர் நகரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தியது, எழுபதுக்கும் மேற்பட்டவர்கள் உயிர் துறந்தனர். துணை இராணுவம் கொண்டு வரப்பட்டது. தமிழகம் அமைதி இழந்து தவித்தது.

பிரதமர் சாஸ்திரி வானொலியில் பேசினார். நேருவின் உறுதிமொழி காக்கப்படும் என்றார். அவருக்குப் பின்பு பிரதமரான இந்திராகாந்தி இந்தியோடு ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்க வழிவகுக்கும் சட்டத் திருத்தத்தை 1967 இல் நிறைவேற்றினார்.

அண்ணா தமிழகத்தின் முதல்வரான பின்பு மும்மொழித் திட்டத்தை எதிர்த்து 1968 இல் மாணவர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்துப் போராட்டத்தில் வன்முறை வளர்ந்தது.

முடிவில் மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டது. இந்தி வெளியேற்றப்பட்டது. தேசிய மாணவர் படையில் கட்டடங்களிலும் நடந்த இந்தி எதிர்ப்புப் போரில் தமிழுணர்வுடன் ஈடுபட்டவன் நான். இந்தப் போராட்டங்களால் இந்தி வெளியேற்றப்பட்டது. ஆங்கிலத்திற்கு ஆராதனை நடந்து வருகின்றது. ஆனால் தமிழுக்கு மட்டும் கல்லூரிகளில் பயிற்று மொழியாகும். வரம் இன்றுவரை வாய்க்கவில்லை.

ஈழத் தமிழரின் உரிமைகளுக்காக இன்று மாணவர்க் களமிறங்கியுள்ளனர். இந்தி எதிர்ப்புப் போரால் பயன் பெற்றவர்கள் அரசியல்வாதிகள். ஆனால், இன்று மாணவர்கள் எந்த அரசியல்வாதிக்கும் இடம் தரவில்லை. எந்தவிதமான வன்முறை நடவடிக்கையிலும் அவர்கள் இறங்கவில்லை. எந்த அரசுக்கும் எதிராக அவர்கள் கோஷம் எழுப்பவில்லை. அவர்களுடைய நோக்கங்கள் தெளிவானவை. ஒருவராலும் குறை சொல்ல முடியாதவை.

போர்க்குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் தமிழின் அழிப்பிலும் திட்டமிட்டு ஈடுபட்ட இலங்கை அரசு சர்வதேச குற்றவாளி நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். தமிழகத்திற்கான பொது வாக்கெடுப்பு ஐ.நாவின் மேற்பார்வையில் நடத்தப்பட வேண்டும். இதற்கு இந்திய அரசு எல்லா வகையிலும் உதவியாக இருக்க வேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை. அமெரிக்காவின் தீர்மானம் ஈழத் தமிழரின் நலனுக்கான ஒரு முன் னகர்வேயன்றி அது தீர்வன்று என்ற புரிதல் மாணவர்களிடம் இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

தமிழை வளர்க்க இந்தி எதிர்ப்புப் போர் நடந்தது. தமிழ் வளரவில்லை, ஊழலை ஒழிக்க குஜராத்திலும் பீகாரிலும் மாணவர் போராட்டம் நடந்தது. ஊழல் ஒழியவில்லை. இன்று ஈழத் தமிழருக்கான போராட்டத்தை மாணவர்கள் நடத்துகின்றனர். அரசியல்வாதிகளால் இதுவரை ஏமாற்றப்பட்ட மாணவர்கள் இன்று அரசியல் சார்புமின்றி மக்கள் போராட்டமாகச் சிறிதும் வன்முறைக்கு இடம் தராமல் ஈழப் போராட்டத்தைத் தொய்வின்றி வளர்த்தெடுத்தல், இந்திய அரசுக்கு ஈழமக்களின் நலனுக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டேயாக வேண்டும் என்ற யதார்த்தத்தை உணரச் செய்ய முடியும். உடல் வருந்த உண்ணா நோன்பிருப்பவர்கள் அதை விடுதது அறவழியில் போராட ஆயிரம் வியூகங்கள் வகுக்க வேண்டும். ஈழம் நிறைவேற முடியாத கனவல்ல, இன்னும் 25 ஆண்டுகளில் நாம் காணப் போகும் நிஜம். இனவுணர்வுடனும் மனித நேயத்துடனும் போராடும் மாணவருலகத்திற்கு நம் தலைவணக்கம். நம்பிக்கையே வாழ்க்கை. நம்பிக்கை இன்மையே மரணம்!

நன்றி : குமுதம்

தமிழருவி மணியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக போராட்டங்கள் அமைதியை சீர்குலைக்கின்றன

## இலங்கை வெளியுறவுத்துறை அறிக்கை

தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்கள் தேவையற்றவை என்று இலங்கை அரசு கூறியுள்ளது.

இது குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழக சட்டசபையில், கடந்த மாதம் 27 ஆம் திகதி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் இலங்கையை நட்பு நாடு என அழைக்கக்கூடாது என்றும் இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்றும் தமிழ் ஈழம் குறித்து இலங்கை தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கூறப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையை நட்பு நாடாக கருதக்கூடாது என்ற சிலரின் கோரிக்கைகள் மன அமைதியை குலைப்பதாக உள்ளன. இந்திய–இலங்கை நட்புறவுக்கு இவை ஏற்றதாக இல்லை.

தேவையற்ற மிகைப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை கூறுபவர்கள் இலங்கையின் எதிர்காலத்துக்கு தீர்வாக அர்த்தமற்ற கோரிக்கைகளை எழுப்புபவர்கள் என அனைவரையும் இலங்கைக்கு நேரில் வந்து பார்க்குமாறு அழைப்பு விடுக்கிறோம். தேசத்தை மறுகட்டுமானம் செய்யும் பணியில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர்கள் நேரில் பார்க்கட்டும்.

தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்கள் தேவையற்றவை. மேலும் வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கை தமிழர்கள் சிலர் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருவது கவலை தரும் விடயமாகவுள்ளது.

இலங்கைதமிழர்களுக்கு அரசியல் உரிமை பெற்றுத்தருவது என்ற போர்வையில் அவர்கள் இலங்கைக்கு எதிரான கோரிக்கைகளை எழுப்பி வருகின்றனர். எங்களை பொறுத்தவரையில் மனித உரிமை மீறல் புகார்கள் எல்லாம் வதந்தி மற்றும் தவறான தகவல்கள் அடிப்படையில் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆகும்.

எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதாக வெளியாகும் தகவல்களும் தவறானவை. அவற்றில் எந்த உண்மையும் இல்லை.

எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை மனிதாபிமான முறையில் நடத்துமாறு இலங்கை கடற்படைக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ–2)

## புத்தாண்டையொட்டி மதுக்கடைகள் பூட்டு

(கொழும்பு)

சித்திரைப்புத்தாண்டையொட்டி நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மதுபானக் கடைகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டி.ஜி.எம்.வி.ஹப்புராச்சி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் மதுபானக் கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ–2)

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண மன்மோகனை ஜெயா சந்திக்க வேண்டும்

### ராமதாஸ் கோரிக்கை

தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வலியுறுத்த வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

பிரதமரை சந்தித்த போது அனைத்து கட்சி குழுவினரையும் அழைத்து செல்ல வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக் கையில்,

கச்சத்தீவு பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 30 பேரை அவர்களுக்கு சொந்தமான 5 படகுகளுடன் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து சென்றுள்ளனர்.

அதேபோல் வங்கக் கடலின் இன்னுமொரு பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த காரைக்கால் மீனவர்கள் 26 பேரையும் இலங்கைப் படை கடத்திச் சென்றுள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் 56 பேரும் இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அநுராதபுரம் மற்றும் பருத்தித்துறை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக 'மீனவர்களை இலங்கை படையினர் தாக்குவதும், சட்ட விரோதமாக சிறை பிடிப்பதும் அண்மைக்காலமாக அதிகரித்திருக்கிறது. போதைப் பொருட்களை கடத்த முயன்ற பொய்யான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஓராண்டுக்கும் மேலாக சிறையில் உள்ளனர்.

மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்யக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் சிறையில் வாடும் 80 மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டதால் வறுமையில் வாடும் அவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

அத்துடன் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தமிழக முதல்வர் ஜெயலலிதா அனைத்துக் கட்சிக் குழுவுடன் டில்லி சென்று பிரதமரை சந்தித்து பேச வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (செ–2)

## சர்வதேச அழுத்தங்களை எதிர்க்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

### ஒன்றுபடுமாறு அழைக்கிறார் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சர்வதேச ரீதியாக எதிர்நோக்கி வரும் அழுத்தங்களை வெற்றிகொள்ள மக்களின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. எனவே அனைவரும் ஒன்றுபட வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியாக பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் மற்றும் சவால்கள் குறித்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறுகிய காலப்பகுதியில் நாடு பாரியளவு முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உலகின் சில நாடுகள் பக்கச்சார்பாக செயற்படுவதாகவும் நாடு அடைந்துள்ள அபிவிருத்திகளை கவனத்திற் கொள்ளத் தவறியுள்ளதாகவும் உலக அளவில் இலங்கை விவகாரங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ–2)

## இந்திய தொழிலாளர்கள் சிலாபத்தில் வேலை நிறுத்தம்

சிலாபம் மாதம்பையில் இந்திய தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் மொன்றில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாதம்பை இரும்பு உருக்கு தொழிற் சாலை ஒன்றில் கடமையாற்றி வரும் 90 இந்திய ஊழியர்களே இவ்வாறு வேலை நிறுத்துப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஐந்து ஊழியர்கள் நாடு திரும்ப கோரிய போது அதற்கு நிர்வாகம் அனுமதியளிக்கவில்லை. இதன் காரணமாகவே குறித்த இந்திய ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலையில் 225 பேர் கடமையாற்றி வருவதாகவும் இதில் பெரும்பான்மையானவர்கள் இந்தியர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (செ–2)

## புலி உறுப்பினர் ஒருவர் பிரித்தானியாவில் உயிரிழப்பு

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் பெற்று சென்றிருந்த ஒருவர் அங்கு உயிரிழந்திருப்பதாக பிரித்தானிய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராமச்சந்திரன் சிவகுமார் வயது (41). கடந்த பத்து வருடங்களாக இராணுவத்தினரால் சுடப்பட்ட குண்டு ஒன்றை தலையில் தாங்கியவாறு வாழ்ந்து வந்தார்.

கடந்த 2001 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் அரசியல் அந்தஸ்தை பெற்றுக் கொண்டார்.

இந்நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் அவர் தமது இல்லத்தில் வழுக்கி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். இவர் மூன்று தினங்களுக்கு முன்னர் அவர் உயிரிழந்துள்ளதாக பிரித்தானிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (செ–2)

## மைத்திரிபால சிறிசேனவை பதவியிலிருந்து நீக்க முயற்சி!


ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் பதவியில் இருந்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நீல அலைகள் நிகழ்வுக்கான சுவரொட்டிகளில் ஜனாதிபதியும் அவரது சகோதரர்களும் மட்டுமே உள்ளனர்.

இச் செயற்பாடு மைத்திரிபால சிறிசேனவை அவர்கள் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்குவதையே குறிக்கின்றது.

இந்த பதவிக்கு அமைச்சர் டலஸ் அழகப்பெரும இணைக்கப்படவுள்ளார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (செ–2)










பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திவிநெகும திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் முகமாக புதுவருட சந்தை நேற்று காலை வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சந்தையினை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் விருந்தினர்கள் சந்தையினைப் பார்வையிடுவதையும் அங்கு வைக்கப்பட்ட பொருட்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:–குருமன்காடு,பூந்தோட்டச் செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

10



"மகனின் நன்மை கருதியிருந்தால் உங்களுக்கு உரிமையான அரசை தம்பிக்கு விட்டுக் கொடுப்பீர்களா? உங்களுக்கு ஆளப்பலமில்லை என்றால் மகனுக்குமா இல்லை? யாழ்ப்பாண சிம்மாசனத்தில் அமர வேண்டிய மகன்"

"வார்த்தைகளைக்கொட்டாதே. அரசாட்சி என்பது விளையாட்டன்று. ஆசைப்பட்டு முடிபுனைந்தபின அவதிப்படுவதிலும், திறமையுடையவர்களுக்கு விட்டுக் கொடுப்பது மேல்..."

"நீங்கள் துரோகம் செய்துவிட்டீர்கள். நான் மன்னனின் மகனாக வாழ வேண்டும். அல்லது மன்னனாக வாழ வேண்டும். என்றான் பரராசசிங்கன்"

"நீ மன்னனாக ஆசைப்படுகிறாய். நீ உயிரோடு வாழ்ந்து எனக்கு ஈமக்கிரியைகள் செய்ய வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன். நீ சிறுவன். அரசியலின் நெளிவு சுழிவுகளை அறியாதவன்"

பரராசசிங்கன் புலியாகப் பாய்ந்தான்.

"நானா சிறுவன்? உங்களுக்கு நான் சிறுவனாக இருக் கலாம். என்னிலும் பார்க்க சங்கிலி சித்தப்பா நான்கு வயதுதான் அதிகம்"

"குமாரா. உன் சித்தப்பா மன்னனாவதை நீ விரும்பவில்லையா?"

"எனக்கு உரித்தான அரசுக்கு அவர் உரிமை கொண்டாடக் கூடாது. அதை நான் ஒருபோதும் விரும்பமாட்டேன்."

"உன்னால் யாழ்ப்பாண அரசின் மகுடத்தை தாங்க முடியுமா?"

"நிச்சயமாக முடியும்"

"பரிபாலனம் என்பது பஞ்சு மெத்தையல்ல குமாரா?"

"அறிவேன் தந்தையே..."

"குதர்க்கம் பேசுகிறாய்"

"உரிமைக்காகப் பேசுவது குதர்க்கமா?"

"இன்று நாட்டைக் கரு மேகங்கள் சூழ்ந்துள்ளன..."

"வீணாகப் பயமுறுத்த வேண்டாம்"

"பயமுறுத்தவில்லை உன்னால் வன்னியரை அடக்க முடியுமா? தென்னிலங்கை சிங்களவரை வெற்றிகொள்ள முடியுமா? புதிதாக வந்திருக்கும் போர்த்துக்கேயரைப் பணிய வைக்க முடியுமா?"



## சங்கிலி அளித்த வாக்குறுதியும் மந்திரிமனை குழப்பமும்

"முடியும்..."

"உன் தாத்தாவிற்கு அளித்த வாக்கை காப்பாற்ற உதவி செய். கொடுத் வாக்கை மாற்ற மாட்டேன்"

பரராசசிங்கன் முகத்தில் ஏமாற்றமும் சினமும் குமுறின. அவன் ஆத்திரத்தோடு தகப்பனைப் பார்த்துவிட்டு வெளியேறினான். பரராச சேகரர் மனைவியைப் பார்த்து விளித்தார்.

"தேவி உனக்குக் கூடவா அரச மோகம்?"

விருட்டென்று எழுந்த மாதவி கணவனை அனல் தெறிக்கப் பார்த்தாள்.

"நீங்கள் ஒரு துரோகி எங்களுக்குச் சொந்தமான அரசை ஒரு வைப்பாட்டியின் மகனுக்கு அளித்தீர்கள்"

பரநிருபரின முகம் திடீரென மாறியது.

"என்ன சொன்னாய்? அடி மாதவி... ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள். அந்த வைப்பாட்டியின் மகனையே மன்னனாக்கிக் காட்டுகிறேன்" என்றார்.

"காட்டுங்கள்... அதற்கு முதல் உங்கள் அத்தை இறந்துபோன சிங்கபாகுவின் மூத்த சகோதரி பெரியநாச்சியார் கண்மணி நாச்சிக்கும் திருகோணமலை வன்னிமை கோகர்ணவன்னிக்கும் பிறந்த புத்திரனுக்கு யாழ்ப்பாண அரசு சொந்தம் என்று கூறகினமாம். திருமலை வன்னி என்ன உங்களைப் போல ஏமாந்த சோனகிரியா? அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்? அரசுக்கு உரிமை கொண்டாடப் பலர் இருக்கிறார்கள்"

"அவை அனைத்தையும் சங்கிலி வெற்றி கொள்வான்"

இவ்வளவையும் வெளியில் பரராசசிங்கன் கேட்டுக் கொண்டு நின்றான். தந்தையின் பிடிவாதமும் தாயின் வேதனையும் தெரிந்தன. அவற்றுடன் யாழ்ப்பாண அரசின் மணிமகுடமும் கண்களின் முன் தோன்றியது. இதற்கெல்லாம் வழி சொல்லக் கூடியவர் மந்திரி அப்பா முதலி ஒருவரே என்ற எண்ணமும் தோன்றியது.

-செங்கை ஆழியான்-

(தொடரும்)

# தன் கன்றை இழந்த ஒரு பசுவுக்கு அன்று அடிக்க ஆராய்ச்சி மணி இருந்தது; இன்றோ எம் உறவுகளுக்கு...???

ஜீ.கே.வாசன் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் சந்திப்பு விபரங்கள் பல மாறுபட்ட பல்கோணச் சிந்தனைகளை பலருக்கும் பலவாறு தோற்றுவிக்கும். அதற்குமுன் இந்தியப் பிரதமரின் பதில்கள் கண்டுதமிழர்கள் எங்கிருந்தாலும் கொதிப்பது இயல்பு. ஆனால், இது இயல்பாகவே ஆறிவிடும் என்று டெல்லி அரசு நம்புகிறது.

இந்தநம்பிக்கையில்தான் இந்தியத் தேசியம் தன்னையே பணயம் வைத்து தமிழக சட்டசபையின் ஜனநாயக ரீதியிலான தீர்மானத்தை நிராகித்துள்ளது என அமைச்சர் சல்மான் குர்ஜித்தே கூறியிருந்தார்.

உலகின் இரண்டாவது பெரிய ஜனநாயக நாடான இந்தியா, ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட தமிழக அரசின் தீர்மானத்தை எப்படி நிராகரிக்க முடியும்? இது இந்தியா தனது ஜனநாயகத்தை பணயம் வைக்கும் முயற்சி என்பதோடு இந்தத் தமிழர் புறக்கணிப்பு, தமிழகத் தமிழர்கள் அமரர் மாண்புமிகு காமராஜர் நாடார் போலவே, இந்திய காங்கிரஸ் கட்சியிலும் இந்திய தேசியத்திலும்நம்பிக்கையை இழந்தமையை வலிதாக்கி பாரத மாதாவை நிர்வகிப்பவர்களின் மாற்றான் தாய் மனப்பான்மையைத் தொடர்ந்தும் தாங்கிப் பொறுக்காது.

இதுபோன்ற ஒரு சட்டச் சிக்கலை றியல் அற்பார் வழக்கின் மூலம் வலிதாக்கி நிலை நிறுத்தி யவரே சட்டமாமேதை அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம். டெல்லியின் இந்தத் தமிழர் புறக்கணிப்பை பொறுக்கவே முடியாத ஒரு நிலையிற்தான் -"காமராஜர் காங்கிரஸ்" தோன்றியிருக்க வேண்டும். இதனை ஜீ.கே. வாசனும் இந்திரா காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவர்களும் ஆராய வேண்டும். அமரர் காமராஜர் நாடார் பதவி மோகமோ அன்றி பண ஆசை பிடித் தவரோ அல்ல.

பாரத தேசம் மீது பற்றுக்கொண்ட காந்தியவாதி. அவரது நீண்ட நெடிய அனுபவத்தை தமிழகம் இனியும் உணராது தொடர்ந்தும் டெல்லி காங்கிரஸிற்கு ஆதரவு அளிப்பது ஈழத் தமிழ் இன அழிப்பிற்கும் தமிழக மீனவத் தமிழர் கொலைகளுக்கும் துணை போகும் துரோகமாகும்.

இதற்கிடையில் இலங்கை அமைச்சர் ஒருவர், தான் இனிச் சும்மா இருக்க மாட்டேன் என்று முழுத் தமிழகத்தையுமே எச்சரித்திருப்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய இன்னொரு செய்தியாகும்.

தன் கன்றை இழந்த பசுவுக்கே அன்று அடிக்க ஒரு ஆராய்ச்சி மணி இருந்தது. இந்த ஆளும் காங்கிரஸ் கட்சியும் அதன் நிர்வாகமும் இத்தனை ஆயிரம் அப்பாவி ஈழத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை விசாரிக்க, உலகே கொண்டுவந்த தீர்மானத்தை இரண்டாவது தடவையும் உலக அரங்கில் நீர்த்துப்போக வைத்த காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகுவது பற்றி சிந்திக்க வேண்டும்.

இவர்களை நம்பி இன அழிப்புக்கே துணைபோன கலைஞர்போல் மென்மேலும் இவர்களை நம்பாது, தொடரவுள்ள அநீதிகளுக்கு துணை போகாது. முதலிலேயே விலகுவது பற்றி சுய முடிவை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கனடாவின் இன்றைய எதிர்க் கட்சியான லிபறல் கட்சி, கனடா தேசம், கொழும்பு பொதுநலவாய அமைப்பு மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்று ஒரு பலமான ஒரு அறிக்கையை ஏப்ரல் 3 ஆம் திகதி வெளியிட்டுள்ளது. அதன் கட்சியின் தலைவரான பொப்றே ஆதாரபூர்வமாக இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இது ஒன்றும் கனடாவின் உள் அரசியற் போட்டி அல்ல. 2002 இலிருந்து நீண்டகாலமாக புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடாத்தியவேளை, கனடா அரசின் சார்பில் அனுசரணையாளராக கொழும்பில் நீண்டகாலம் தங்கியிருந்தவரே பொப்றே ஆவார்.

அச்சமயம் சிங்கள- தமிழ் இன ஒற்றுமையை நிலைநாட்ட முயன்ற இவர், சமஷ்டி ஆட்சிமுறை மூலமாக தமிழரது இனப்பிரச்சினை தீர்க்

**அண்மையில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்த மூப்பநார் வாசனுக்கு ஈழத்திலிருந்து ஒரு வேண்டுகை**

கப்பட வேண்டும். இல்லாவிடின் பிரிவினையைக் கோருவதைத் தவிர ஈழத் தமிழருக்கு வேறு வழியில்லை என்று பகிரங்கமாக கூறியவராவார்.

ஈழத் தமிழரின் ஜனநாயக ரீதியிலான வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையும் இலங்கை இப்படித்தான் புறக்கணித்தது. தேர்தல் வாக்களிப்பு மூலம் சென்றடைந்த ஜனநாயக மரபு ரீதியிலான இன இறைமை தொடர்பான முடிவை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மறுத்தது.

அதே தவறை இன்று இந்திய மத்திய அரசும் செய்கிறது. ஆட்சியாளர்கள் எங்கிருந்தாலும் ஒரு இனத்தை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடாத்துவதாற்தான் தனிக்குடித்தனச் சிந்தனைகள் பிறக்கின்றன. இதனையே ஈழப்பிரிவினைவாதமாக இன்றைய உலகிற்கு இந்தியா சித்தரிக்கிறது.

ஈழத்தில் முப்பது ஆண்டுகளாக காந்தி வழியில் போராடியும் இயலாத போதுதான் சுய இனப் பாதுகாப்பிற்காக தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்த வேண்டியிருந்தது. இந்தியாவும் பயற்சி அளித்தது. பின்னர் இதையே புலிப் பயங்கரவாதம், தமிழ்த் தீவிரவாதம் என இந்தியாவும் சேர்ந்து அழித்து ஒழித்தது.

இந்த வரலாற்று அனுபவத்தை அற வழியிற் போராடும் தமிழின தொப்புள்கொடி தமிழக மாணவ உறவுகள் கவனிக்க வேண்டும். இவ்வாறு ஏதாவது சூழ்ச்சி செய்தாவது தமிழக மாணவரின் போராட்டத்தை தமிழக் மக்களே வெறுக்கச் செய்ய காங்கிரஸ் கட்சி முயலலாம். தமிழர்களைப்பேசி சமாதானப் படுத்திவிடலாம் என அவர்கள் இன்னமும் நம்பியிருக்கிறார்கள்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணணையும் சிவ் சங்கர் மேனனையும் கலைஞரிடம் அனுப்பி அனுப்பியே முள்ளிவாய்க்கால் இன அழிப்பை இதே காங்கிரஸ் நடாத்தி முடித்தது.

நீங்கள் யாரைச் சென்று சந்தித்தாலும் யாரிடமும் எத்தனை கடிதம் கொடுத்தாலும் இது இந்தியாவின் இராஜதந்திர நிலைப்பாடு என்பார்கள். தன் குடிமக்களை காக்காத அரச தந்திரம் எங்காவது உள்ளதா? இந்தக் கேள்வியை ஜி.கே. வாசன் உடனடியாக மாண்புமிகு பிரதமரிடம் கேட்டிருக்க வேண்டும்.

நீங்கள் கட்சிக்காரராக அல்லாமல் ஒரு இந்தியக் குடிமகனாக இருந்து இதை பிரதமரிடம் கேட்டிருக்க வேண்டும். கலைஞர் கருணாநிதியும் இவ்வாறே அரசியல் வாதியாக நின்றே டெல்லியுடன் வாதிட்டதாக செய்திகள் அன்றும் வெளியாகியிருந்தன.

எம்.ஜி.ஆர். இருந்தபோதுகூட தி.மு.க ஆதரவு இப்படி குறையவில்லை என்றுதான் அவரும் கூறியிருந்தார். தமிழரைக் கொன்றால் டெல்லி அதைப் பற்றிக் கவலைப்படாதா? என்று கேட்கவில்லை.


பூநகரான்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய, இலங்கை, சீன பூகோள அரசியலும் ஈழத்தமிழினமும்

**மருதன், தன் வலையத்தில் எழுதியிருந்த கட்டுரைக்கும் அதற்கு மறுப்புரையாக நலங்கிள்ளி இன்போ தமிழ், கீற்று ஆகிய இணையத் தளங்களில் எழுதியிருந்த *கொழும்புக் கொழுப்பைக் கரைக்கும் அரசியல் எது?* என்ற கட்டுரைக்கும் பதில் சொல்லும் வகையில், அவர்கள் சுட்டிக் காட்டாத இன்னொரு பக்கத்தை *இன்றைய பூகோள அரசியல் யதார்த்தவாதம்* என்னவாக இருக்கிறது என்பதையும் விளக்கும் வகையில் மும்பையில் விழித்தெழு இயக்கம் சார்பாக நடந்த கருத்தரங்கில், தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளரும் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளருமான மாதவி, தான் ஏற்கனவே பேசியிருந்த கருத்துக்களின் சாரத்தை தொகுத்துத் தந்த பத்தி இது.**



யதார்த்த நிலை என்னவாக இருக்கிறது? என்பதைப் புரிந்து கொள்ளாமல் அதை எப்படி உடைத்துக் கொள்வது அல்லது மாற்று வழியை கண்டு பிடிப்பது எப்படி? அதற்கான சாத்தியக்கூறுகள் என்ன? இவை அனைத்தையும் நம் இளைய சமுதாயம், தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே என்நோக்கம்.

**இந்திய- இலங்கை வெளியுறவுக் கொள்கை**

வெளியுறவுக்கொள்கையை இரண்டாகப் பிரிக்கலாம். அறம் சார்ந்தது ஒன்று. இன்னொன்று பொருளாதார சமூக ஆதாயம் சார்ந்தது.

சுதந்திரம் பெற்ற இந்தியா கூட்டுச்சேரா கொள்கையைத் தான் தன் வெளியுறவுக் கொள்கையாகக் கொண்டிருந்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் விடுதலை அடைந்த நாடுகளை ஒன்றிணைக்கும் சக்தியாக இந்தியாவே விளங்கியது. அக்காலகட்டத்தில் நம் வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் அறம் சார்ந்த கோட்பாடுகள் முன்னிலை வகித்தன.

அந்த அடிப்படையில் தான் பண்டித் நேருவின் புகழ்மிக்க பஞ்சசீலக்கொள்கை இருந்தது. அவ்வாறே திபேத்தில் சீனாவின் நிர்வாக அதிகாரத்தை பஞ்சசீலக் கொள்கை ஏற்றுக் கொண்டது. இந்த அடிப்படையில் தான், 1955ல் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உறுப்பினராகும் தகுதியை இந்தியாவுக்கு வழங்கியபோது, அதை ஏற்க மறுத்த அன்றைய பிரதமர் நேரு அத்தகுதியை சீனாவுக்கு வழங்கும்படி சிபார்சு செய்கிற அளவுக்கு நம் வெளியுறவுக் கொள்கை தார்மீகம் பேசியது.

Think bank என்ற அறிவு ஜீவிகளின் அமர்வில் அமர்ந்து கலந்துரையாட ஒரு குறிப்பிட்ட நேரத்தை நேரு ஒதுக்கியிருந்தார் என்பார்கள். எனினும் நடந்தது எல்லாமே நேரு நினைத்தபடி அல்ல.

1962 இல் சீனா ஏமாற்றியது தான் இந்தியாவின் அறம் சார்ந்த வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத்த முதல் அடி. வெளியுறவுக் கொள்கையில் அதிகாரப் போட்டி அரசியலின் யதார்த்தம் என்ன என்பதை நேசநாடுகளாக இருந்து எதிரி நாடுகளாக மாறியவர்கள் தான் இந்தியாவுக்கு கற்றுக் கொடுத்தார்கள். நம் ஆயுதங்களைத் தீர்மானிப்பவர்கள் நம் எதிரிகளாகவே இருக்கிறார்கள் என்று சொல்வது இதைத்தானோ. நேருவின் வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத்த மரண அடி நேருவின் சகாப்தத்தை 1964-ல் முடிவுக்குக் கொண்டுவந்தது என்கிறார்கள். அதன்பின் 1970 வாக்கில் இந்தியா அறம் சார்ந்த வெளியுறவுக் கொள்கையைக் கைவிட்டு அதே நேரத்தில் முழுக்கவும் தன் சுயநலம் சார்ந்த வெளியுறவுக் கொள்கைக்குள் வராமல் ஒரு இடைப்பட்ட நிலையில் இருந்தது எனலாம். இக்காலத்தில் இந்தியா கூட்டுச்சேரா கொள்கையைக் கைவிட்டு சோவியத் வல்லரசின் நேச நாடாகிவிட்டது. இராணுவ, தொழில் நுட்ப வளர்ச்சிகளில் சோவியத்தின் உதவி, சோசலிச பொருளாதாரக் கொள்கை என்ற அரசின் பிரகடனம், தனியார்நிறுவனங்கள் அரசு மயமாக்கப்பட்ட நிலை, ஆகியன அன்றைய அரசியல் நிலவரங்களாக இருந்தன.

1971-ல் வங்கதேசம் உருவானதில் பெரும் பங்கு இந்தியாவினுடையது. இப்போதும் நாம் அனைவரும் ஈழப் பிரச்சினை குறித்துப் பேசும் போதெல்லாம் நான் உட்பட, இதையே பல மேடைகளில் பேசியும் எழுதியும் உணர்வுப் பிழம்பாய் கொதித்துப் போகிறோம். 1971களில் இருந்ததை விட அதிக வலுவுடன் இந்திய இராணுவம் இருக்கும் இன்றைய நிலையில் இந்தியாவால் ஏன் ஈழப்பிரச்சினையில் வங்க தேசத்திற்கு செய்ததைச் செய்யமுடியவில்லை?

**1970 களுக்கும் 90களுக்கும் பின்னர் உலக அரங்கில் நடந்த மிகப்பெரிய மாற்றங்கள் என்ன?**

வங்க தேசத்திற்காக பாகிஸ்தானுடன் இந்திய இராணுவம் போரிட்டுக் கொண்டிருந்தபோது அமெரிக்காவின் அணு ஆயுதக்கப்பல் வங்காள விரிகுடாவில் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

1974ல் பொக்கரம் அணுகுண்டு வெடிப்பு சோதனையில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தியா தன்னை அணுஆயுத நாடாக உலகுக்குப் பெருமையுடன் பறைசாற்றிக் கொண்டது. ஐ.நா.வில் வீட்டோ பவரில் இருக்கும் ஐந்து வல்லரசுகள் தவிர்த்து அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடாக தன்னை வெளியுலகுக்கு காட்டிக் கொண்டதன் மூலம் அதிகாரப் போட்டியில் நுழைந்தது இந்தியா.

1991 இல் சோவியத் வல்லரசு உடைந்தது. சோவியத்துக்கும் அமெரிக்காவுக்கும் நடந்துகொண்டிருந்த பனிப்போர் முடிவுக்கு வந்தது. இந்நிலையில் சோவியத்தின் நேசநாடுகளாக இருந்த இந்தியா போன்ற நாடுகளின் வெளியுறவுக் கொள்கையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. சோவியத்துடன் கொண்டிருந்த நேச உறவு காரணமாக கொள்கை அடிப்படையில் சீனாவுடன் கை கோர்த்திருக்க வேண்டிய இந்தியா அதற்கான எல்லா கதவுகளும் சீனாவால் மூடப்பட்டிருந்ததாலும் ஆசியாவின் தலைமைக்கான போட்டியில் இந்தியாவுக்கு எதிராகவே சீனா நிற்பதாலும் இந்தியா அமெரிக்காவின் பக்கம் சாயத் தொடங்கியது. இந்த இடைப்பட்ட காலங்களில் இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்ட பல்வேறு ஒப்பந்தங்களும், அதற்கான சூழல்களும் இந்திய-இலங்கை வெளியுறவு கொள்கையை பாதிக்கும் முக்கிய அம்சங்களாகின.

**சாஸ்திரி -சிறீமாவோ பண்டார நாயக்கா ஒப்பந்தம்**

1965-ல் இந்திய- பாகிஸ்தான் போரில் இலங்கையிலிருக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்தை பாகிஸ்தான் விமானப்படை எரிபொருள் நிரப்ப பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இலங்கை, பாகிஸ்தானுக்கு ஆதரவாக அறிவித்திதது. இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே இலங்கையின் இந்நிலைப்பாடு இருப்பதாக சாஸ்திரி நினைத்தார். இலங்கையின் இந்நிலைப்பாட்டைத் தவிர்க்க சாஸ்திரி சிறீமாவோடு ஒப்பந்தம் செய்ய முன்வந்தார். இந்திய அரசு இராணுவ பலத்தில், பரப்பளவில், பொருளாதார நிலையில் தன்னைவிட பல மடங்கு வலுவுள்ளதாக இருந்தாலும் அதை அச்சுறுத்துகின்ற கவண் கல்லாக தன்னிடமிருக்கும் பூகோள ஆயுதத்தை இலங்கை அரசு அப்போது உணர்ந்துகொண்டது எனலாம். இன்றுவரை அந்த கவண்கல் நெற்றிப் பொட்டில் பட்டால் என்னவாகும் என்ற நிலையில் தான் இந்தியா இருக்கிறது!

அந்த ஒப்பந்தப்படி, ஐந்தரை இலட்சம் மலையகத் தமிழர்களை அகதிகளாக இந்தியாவுக்கு அனுப்புவதை ஏற்றுக்கொண்டதன் மூலம் சாஸ்திரி ஈழத்தமிழர் நிலைப்பாட்டில் முதல் தவறைச்செய்தார். இலங்கையில் அன்று வாழ்ந்த 9.5 இலட்சம் மலையகத் தமிழர்களில் 5.5 இலட்சம் தமிழர்களை அகதிகளாக இந்தியா ஏற்றுக்கொள்வது, மீதி 4இலட்சம் தமிழர்களுக்கு இலங்கை அரசு குடியுரிமை கொடுப்பது என்றும் முடிவானது. இலங்கையில் வாழ்ந்து கொண்டிருந்த மலையகத் தமிழரான, இலங்கையை வளம் கொழிக்கும் கோப்பி, தேயிலை தோட்டங்களாக்கிய அந்த உழைப்பாளர்களுக்கும் அந்த மண்ணுக்கும் உள்ள தொடர்பு கேள்விக்குறியானதும், அவர்களை இந்திய அரசு அகதிகளாக எற்றுக்கொண்டதன் மூலம் ஈழமண்ணுக்கு அவர்கள் அந்நியர்கள் தான் என்று இந்தியாவே ஏற்றுக் கொண்டதாக அமையும் என்பதை கணிக்க தமிழக அரசும் மக்களும் தவறிவிட்டார்கள்.

**இந்திரா சிறீமாவோ ஒப்பந்தம்:**

1971 -ல் அமெரிக்கா வங்கக்கடலில் அணு ஆயுதக்கப்பலைக் காட்டி இந்தியாவை மிரட்டியபோது, சோவியத் உதவிக்கு வந்தது என்பார்கள். ஐ.நா.சபை அமெரிக்காவின் அத்துமீறிய செய்கையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியதால் அமெரிக்கா பின்வாங்கியது என்பார்கள். அப்போதும் இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கையை தன்பக்கம் வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கச்சதீவை இந்திய அரசு தாரைவார்த்துக் கொடுத்தது. இந்திராவும் சிறீமா வோவும் செய்துகொண்ட ஒப்பந்தம் தமிழக அரசின் ஒப்புதலுடன் தான் நடந்திருக்க வேண்டும்.


கச்சதீவு தமிழர்களின் நிலம் இராமநாதபுரம் சமஸ்தானத்திற்குச் சொந்தமானது. கடல்கோளுக்கு இரையாகிப்போனது போக, எஞ்சி நிற்கும் மிச்சம் மீதி இந்த தீவு. தமிழகத்து மீனவர்கள் ஓய்வெடுக்க, மீன்வலைகள் உலர்த்த, ஆண்டுக்கொருமுறை நடக்கும் அந்தோனியார் கோவில் திருவிழாவில் கலந்து கொள்ள என்று 1974 ஆம் ஆண்டு வரை இருந்த உரிமைகளையும் 1976ல் இலங்கைக்கு கொடுத்தது இந்திய அரசு. இன்றைக்கு டெசோ மாநாடுகள் நடத்தும் கலைஞர், தான் அப்போது தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தார் என்பதையும் கவனிக்க வேண்டும். இவர்களுக்குப்பின் வந்த நேருவின் பேரன், இந்திராவின் வாரிசு என்ற தகுதியை மட்டும் வைத்துக் கொண்டு இந்தியாவின் மக்களாட்சி அரசியல் தலைவராக- இந்திய பிரதமராக வந்த ராஜீவ் காந்தி எடுப்பார் கைப்பிள்ளையாகவே செயற்பட்டார். வெளியுறவுக்கொள்கையில் அவருக்கு எந்தவிதமான தொலை நோக்குப் பார்வையும் இருந்ததில்லை. அதிலும் குறிப்பாக ஈழப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அவர் நடவடிக்கைகள், மேலும் உக்கிரமாக்கியதெனலாம். திம்புவில் நடந்த பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் இந்தியப் பிரதமர் கபட நாடகம் ஆடினார். அமைதிப்படை தளபதியாக இருந்த ஹரிகிரட்சிங் தன் குறிப்புகளில் இதைப் பதிவு செய்திருக்கிறார்.

ராஜீவ் காந்தி தன்னை சந்திக்க விரும்புகிறார் என்று இந்தியத் தூதரகம் மூலம் அறிந்த பிரபாகரன் மகிழ்ச்சி அடைகிறார்; டில்லி வந்த பிரபாகரனை 28, ஜுலை 1987ல் இந்தியப்பிரதமர் சந்திக்கிறார்; முதல் கட்டப் பேச்சுவார்த்தைக்குப் பின் *அசோகா ஹோட்டல்* அறை எண் 518ல் அடுத்த பேச்சுவார்த்தைக்காக காத்திருக்கிறார் பிரபாகரன்; ஆனால், அடுத்த நாள் கொழும்பில் ராஜீவ் காந்தி பேச்சுவார்த்தைக்கு போயிருப்பதை தொலைக்காட்சி நேரடியாக ஒலிபரப்புகிறது. அவரேமேலும் சொல்கிறார். அமைதிப்படை இந்தியாவிலிருந்து இலங்கை அனுப்பப்படும்போது யாருக்காக? என்பது கூட தெளிவாகத் தெரிவிக்கப் படவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிறுவர் அரங்கம்



424



## யாருக்கு அரியாசனம்?

வைசாலியை ஆண்டுவந்த சித்ர குப்த மன்னர் தன்னுடைய இராச்சியத்தைத் திறம்பட நிர்வகித்து வந்தார். ஆனால் அவருக்குப் புத்திரபாக்கியம் இல்லாததால் தனக்குப்பின் யாரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது என்ற கவலையில் ஆழ்ந்தார். வைசாலியின் பிரபலமான குருகுலத்தின் குருவான பரமானந்தர் மன்னரை சந்தித்து புத்திரகாமேஷ்டி யாகம் செய்யும்படி அறிவுரை கூறினார்.

உடனே மன்னரும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து புரோகிதர்களை வரவழைத்து புத்திரகாமேஷ்டி யாகத்திற்கு ஏற்பாடு செய்தார். யாகமும் நன்கு முடிந்தது. ஓராண்டு காலத்திற்குள் மன்னருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவற்றுக்கு ஜெயன், விஜயன் என்று பெயர்கள் இடப்பட்டன. அதேசமயம் மன்னரின் முதன்மந்திரியான சுனந்தருக்கும் ஓர் ஆண்குழந்தை பிறக்க அதற்கு அவர் சுபுத்தி என்ற பெயரிட்டார்.

மூன்று குழந்தைகளும் நன்கு வளர்ந்து நண்பர்களாயினர். மன்னரும் மந்திரியும் தங்கள் பிள்ளைகளை குரு பரமானந்தரிடம் கல்வி கற்க அனுப்பினர். மூவருமே கல்வியில் சிறந்து விளங்கினர். ஆயினும் சுபுத்திக்குக் கல்வியுடன் கூடவே பணிவும் வினயமும் வளர்ந்தது. ஜெயனும் விஜயனும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு பல கலைகளைக் கற்றுக்கொண்டனர். குருகுலக் கல்வி முடிந்ததும் மூவரும் வீடு திரும்பத் தயாராயினர்.

அவர்கள் வீடு திரும்புமுன் மந்திரி சுனந்தர் குரு பரமானந்தரை அவ ரது இருப்பிடத்தில் சந்தித்து மன்னரின் வேண்டுகோளைத் தெரிவித்தார். தன் புதல்வர்கள் இருவரில் மணி முடி சூட்டி அரசாள முற்றிலும் தகுதியானவன் யார் என்பதை குருவை விட்டுச்சோதிக்கும்படி மன்னர் வேண்டுகோள் அனுப்பியிருந்தார். அதைத் தெரிவிக்கவே சுனந்தர் குருவைத் தேடி வந்திருந்தார்.

அதன்படி பரமானந்தர் மறுநாளே மூன்று பேரையும் அழைத்து தானொரு மிக முக்கியமான பூஜை நடத்த விருப்பதாகவும் அதற்கு மூன்று சிலைகள் தேவைப்படுவதாகவும் கூறினார். அவை மூன்றும் இரண்டு கிராமங்களில் தாண்டியிருந்த ஒரு குக்கிராமத்தில் சிற்பி செய்து முடித்து விட்டார் என்றும் அவற்றைக்கொண்டு வரும்படியும் கட்டளை இட்டார். அந்த மூன்று சிலைகள் மறுநாள் நண்பகலுக் குள் வந்துசேரவேண்டும் என்றும் சிறிது கூட சேதமடையாமல் ஒழுங்காகக் கொண்டு வரவேண்டும் என்றும் பணித்தார்.

மூவரும் உடனே அந்தக்கிராமத்தை நோக்கிப் புறப்பட்டனர். எத்தனையோ



## அம்புலிமாமா கதைகள்

விரைந்து சென்ற போதிலும் அந்தச் சிற்பி வசித்த கிராமத்தை அடைவதற்குள் இருட்டிவிட்டதால் வழியிலேயே தங்கி மறுநாள் காலையில் புறப்பட்டனர். சற்றுநேரத்தில் எங்கிருந்தோ வந்த ஒரு வழிப்பறிக் கொள்ளையர்கள் கூட்டம் மூவரையும் சூழ்ந்து கொண்டது. ஜெயனும் விஜயனும் தங்கள் வாள்களை உருவி அவர்களுடன் உக்கிரமாகச் சண்டையிட்டனர். இடையில் சுபுத்தி விஜயனைத் தடுத்து நிறுத்தி நாம் சரியான நேரம் சிலைகளைக்கொண்டு வரவேண்டுமானால் இங்கு நேரத்தை வீணாக்கக் கூடாது. ஜெயனும் நானும் இவர்களை சமாளிக்கிறோம். நீ முன்னோக்கிச் செல் என்று அறிவுரைகூற விஜயனுக்கு அதுதான் சரி என்று தோன்ற அவன் அவர்கள் இருவரையும் விட்டுப் புறப்பட்டான். சற்று நேரத்திலேயே சுபுத்தியின் உதவியுடன் ஜெயன் கொள்ளையர்களை புறமுதுகிட்டு ஓடச்செய்தான். அதன்பின்பு இருவரும் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். அதற்குள் விஜயன் சிற்பியைச் சந்தித்து சிலைகளைப் பெற்றுக் கொண்டு குருகுலம் திரும்ப அவனை வழியில் ஜெயனும் சுபுத்தியும் சந்தித்தனர். பின்பு மூவருமாக வாயுவேகமாகக் குருகுலத்தை நோக்கி விரைந்தனர். குருவின் இருப்பிடம் நெருங்க நெருங்க மூவரும் மேலும் அதிக வேகமாக விரைந்தனர்.

திடீரென அவர்கள் எதிரே இரதம் அதிவேகமாக வந்துகொண்டிருக்க அது வருவதைக் கவனிக்காமல் பாதையில் நான்கு சிறுமிகள் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களை இரதம் செலுத்துபவன் கவனிக்க வில்லையென்று புலப்பட்டது. மூவரும் அதைக்கண்டு பதறிப்போயினர்.

கையில் பிடித்துள்ள சிலையை அப்படியே விட்டுவிட்டு ஓடிப்போய் சிறுமிகளைத் தூக்கி காப்பாற்றினால் தான் அவர்கள் தப்பிக்க வாய்ப்பிருந்தது. ஆனால் அவ்வாறு செய்தால் சிலை சேதமாகிவிடுமே என்று அஞ்சி ஜெயன் பேசாமல் இருந்து விட்டான். சுபுத்தியும் மௌனமாக இருக்க விஜயன் மட்டும் சிலையை நழுவ விட்டு அவர்களைக் காப்பாற்ற ஓடினான்.

மூன்று சிறுமிகள் கடைசி நிமிடத்தில் இரதத்தைப்பார்த்து ஓடிப்போக



ஒரு சிறுமி மட்டும் மாட்டிக்கொள்ள இருந்தாள். ஆனால் அவளை விஜயன் காப்பாற்றிவிட்டான். அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ஏனெனில் அவன் தரையில் நழுவவிட்ட சிலை சற்று சேதமாகிவிட்டது. தான் எடுத்துக் கொண்ட முயற்சியெல்லாம் வீணாகி விட்டதே என்ற வருத்தத்துடன் விஜயன் சேதமான சிலையுடன் குருகுலத்தை அடைந்தான்.



ஜெயனும் சுபுத்தியும் குறித்த நேரத்திற்குள் சிலைகளைப் பத்திரமாக எடுத்துவந்ததால் குருவின் பாராட்டைப் பெற்றனர். விஜயன் சற்றே வருத்தத்துடன் குருவை அடைந்து சேதமான சிலையைக்கொடுத்தான். அதேசமயம் அவர்கள் எதிரில் படு வேகமாக வந்த இரதத்திலிருந்த மன்னரும் மந்திரியும் நிதானமாக இறங்கிவர குரு பரமானந்தர் அவர்களை முன்னே சென்று வரவேற்றார்.

சோதனை முடிந்ததா என்று மன்னர் பரமானந்தரை வினவ குரு புன்னகையுடன் முடிந்தது மகாராஜா! நாம் வைத்த சோதனையில் வெற்றி பெற்றது விஜயன்தான்! அவனே உங்களுக்குப்பின் அரியாசனத்தில் அமரத் தகுதியானவன் என்றான். குருவின் தீர்ப்பு முற்றிலும் சரியேயென்று ஆமோதித்த மந்திரி மகாராஜா! குரு நடத்திய சோதனையையும் அவருடைய தீர்ப்பையும் கேட்டீர்களா? ஜெயன் குருவின் கட்டளைகளை வேதம் போல் கருதி கீழ்ப்படிந்தான். எப்படியாவது குறித்த நேரத்தில் சிலையை சேதமின்றிக்கொண்டுவரவேண்டும் என்ற எண்ணம்தான் அவனுடைய சிந்தனையை முற்றிலும் சூழ்ந்திருந்தது. தவிர ஜெயன் கொள்ளையர்களுடன் மிகுந்த வீரத்துடன் சண்டையிட்டான். அவனுடைய வாட் போர், மற்போர் ஆகியவை நிகரற்றவை. ஜெயனுடைய ஏகாக்கிர சித்தம், போர்த்திறமை, அசகாய வீரம் ஆகியவற்றிலிருந்து அவன் பிரதம தளபதியாய் இருக்க முற்றிலும் தகுதியானவன் என்று புலனாகின்றது.

விஜயனுடைய திறமைகளை நோக்கினால் ஜெயனுக்கு எந்த விதத்திலும் சளைத்தவன் இல்லை. அதேசமயம் குருவின் கட்டளைப் படி நடப்பதை விட சிறுமிகளைக் காப்பாற்றுவதையே முக்கியமாகக் கருதினான். ஒரு மன்னனின் தலையாய கடமையே தன்னுடைய குடிமக்களின் நலன்காப்பதே. ஆகவே அரியாசனத்தில் அமர விஜயனே தகுதியானவன் என்றான்.

இடையில் குறுக்கிட்ட குரு மந்திரி என் சோதனையை சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறாய். நான் இந்த சமயம் மற்றொன்றும் கூற விரும்புகிறேன். ஜெயன், விஜயன் ஆகிய இருவருக்கும் அவ்வப்போது அறிவுரைகூறி ஆசான் போல் உதவி செய்தான் சுபுத்தி. எனவே எதிர்காலத்தில முதன்மந்திரியாக இருக்க அவன் தகுதியானவன் என்றான்.

அறிவாளியான குருவும் மதியூகியான மந்திரியும் தனக்குக் கிடைத்ததைக்கண்டு மகிழ்ந்த மன்னர் அவர்களை மனமாரப் பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகளை வழங்கும் விஜய வருட பலன்கள்

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**விழிப்புணர்ச்சி தேவைப்படும் வருடம்!**

**நேரம், காலம் பார்த்து செய்தால் நினைத்ததை சாதிக்கலாம் என்று சொல்லும் துலாம் இராசி நேயர்களே!**

“விஜய” வருடம் உங்களுக்கு விழிப்புணர்ச்சியோடு செயற்படும் வருடமாக அமைகிறது. ஆரம்பத்தில் சனியின் வக்ரம், அதோடு அஷ்டமத்தில் குரு, இராசிநாதனின் அஸ்தமனம்... இத்தனைக்கும் மத்தியில் இந்த புத்தாண்டு பிறக்கிறது. எனவே, அப்போதைக்கப்போது வாரவழிபாடு, மாதவழிபாடு, வருடவழிபாடு, சிறப்பு வழிபாடு ஆகியவற்றை மேற்கொண்டு வாழ்வை வளமாக்கிக் கொள்வது நல்லது.

குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் ஓரளவு நற்பலன்கள் ஏற்படும். என்றாலும் உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு குரு பகைக்கிரகமாகும்.

எனவே, திசா புத்திக்கேற்ற விதத்தில் பலன்களும் அமையும். என்ன இருந்தாலும் விரயங்கள் அதிகம் சந்திக்கும் ஆண்டு இந்த ஆண்டு என்பதால் வீட்டுத் தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்து கொள்ளுங்கள். வியாபாரத்தில் விரோதங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கூட்டு முயற்சிகளில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

**பணப்புழக்கம் அதிகரிக்கும்!**

கவர்ச்சியாகப் பேசி காரியம் சாதித்துக்கொள்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பவர்கள் நீங்கள். உங்கள் கரங்களில் பணம் எப்போதும் புரண்டு கொண்டேயிருக்கும். பேட்டிகளில் கலந்துகொள்ளும்போது சிபாரிசுகளைக் கையாளுவீர்கள்.

ஒருவரது கண் அசைவை வைத்தே அவர் எப்படிப்பட்டவர் என்பதை கண்டு பிடித்துவிடுவீர்கள். கனத்த சரீரத்தை நீங்கள் பெற்றிருந்தாலும் மனத்தளவில் யாருக்கும் தீங்கு செய்ய மாட்டீர்கள்.

இனத்தாருடன் மட்டுமே கூட்டு சேர வேண்டுமென்று சொல்வீர்கள்.

**நந்தன வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி சனிக் கிழமை இரவு 11.52 மணிக்கு தனுசு லக்னம், கார்த்திகை நட்சத்திரம் ரிஷப இராசியில் அமிர்த யோகத்தில், விஜய வருடம் பிறக்கிறது.**

பணப்பொறுப்பு மற்றவர்களுக்கு சொல்வதற்கு தயங்கமாட்டீர்கள். சில ரகசியங்களை மனதில் பதித்து வைத்திருப்பதால்தான் சிலநேரங்களில் நீங்கள் சிந்தித்துக்கொண்டேயிருப்பீர்கள்.

மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் நீங்கள் நிர்வாகத் துறையில் கெட்டிக்காரரர்கள். கலை, இலக்கியம், சினிமா போன்றவற்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## விழிப்புணர்ச்சி தேவைப்படும் வருடம்!

திருமண நேரத்தில் சுக்ரபலம் பெற்ற வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்தால்தான் தித்திப்பான வாழ்க்கை அமையும்.

**விஜய ஆண்டின் தொடக்கம் விரயங்கள் அதிகரிக்கும்!**

ஆண்டு தொடங்கும் பொழுதே அர்த்தாஷ்ட குருவின் ஆதிக்கம் இருப்பதால் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். குடும்பச்சுமை கூடும். கொள்கை பிடிப்பை தளர்த்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். கடுமையாக முயற்சித்தும் காரியங்கள் கடைசிநேரத்திலேயே முடிவாவதைக் கண்டு வருத்தப்படுவீர்கள்.

இருப்பினும் குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதாலும், விரய ஸ்தானத்தில் பதிவதாலும் குடும்பத்திற்கு தேவையான மின் சாதனப்பொருட்கள், நூதனப்பொருட்கள், கணிப்பொறி, மிக்ஸி, கிரைண்டர் போன்றவற்றையெல்லாம் வாங்கி மகிழ வாய்ப்புகள் கிட்டும்.



இந்த நேரத்தில் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்கி சேர்க்கும் அமைப்பு உருவாகும். கடன்சுமை குறைய வாங்கிய சொத்தை விற்க முற்படுவீர்கள்.

சுக ஸ்தானத்தையும் குரு பார்ப்பதால் மாற்று வைத்தியத்தால் உடல் நலம் சீராகும். குருப்பெயர்ச்சி வரை சற்றுப் பொறுமையைக் கடைப்பிடிப்பதுதான் நல்லது.

அஷ்டமத்து குரு, ஜென்ம சனி, ஜென்ம ராகு போன்றவற்றின் ஆதிக்கம் நடைபெறும் பொழுது நட்பு எந்த நேரமும் பகையாகலாம். எனவே, நாவில் கவனம் செலுத்துங்கள்.

சிறிய காரியங்களுக்குக்கூட பெரியளவில் முயற்சி செய்யும் சூழ்நிலை உருவாகும். மற்றவர்களுக்காக செய்யும் காரியங்களில் ஆதாயத்தைக் காட்டிலும் அலைச்சல் கூடுதலாகவே இருக்கும். எனவே, எதைச் செய்ய நினைத்தாலும் அதை ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது.

சப்தம ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் பலம் பெற்று விளங்குவதால் புதிய வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். தூரதேச பயணம் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும்.

**குருப்பெயர்ச்சி கொடுக்கும் பலன்கள்!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் வைகாசி மாதம் 14 ஆம் திகதி 28.05.2013 அன்று மிதுன இராசியில் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். அதன் பார்வை உங்கள் இராசியிலும் 3,5 ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே, பொருளாதார நிலை உயரும். பணப்பற்றாக்குறை அகலும். [illegible] கொட்டு[illegible]றும்.


ஒன்பதாம் இடம் என்பது பிதுர் ராஜிய ஸ்தானம் என்று வர்ணிக்கப்படுகிறது. எனவே, தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். தந்தை வழிச்சொத்துக்களில் உள்ள பிரச்சினைகள் தீரும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடிய பஞ்சாயத்துக்கள் வழிவகுக்கும். வம்ச விருத்தி ஏற்படவில்லையே என்ற கவலை அகலும்.

ஆலயத்திருப்பணிகளை முன்னின்று நடத்துவீர்கள். தீர்த்த யாத்திரைகள் மேற்கொண்டு தித்திக்கும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள குடும்ப உறுப்பிர்கள் அனைவரும் கூடி முடிவெடுப்பர். குருவின் பார்வை பதியுமிடங்கள் 3,5 என்பதால் சகோதர வழியில் ஒத்துழைப்பு கிட்டும். பூர்வீக சொத்துக்களில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பங்கு அல்லது அதற்குரிய தொகையைத் தர உடன் பிறப்புகள் முன்வருவர்.

பிள்ளைகளின் கல்வி சம்பந்தமான மேற்படிப்பு, வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றில் ஆர்வம் காட்டும் பெற்றோருக்கு அது நிறைவேற கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வாயில் தேடி வரன்கள்வந்து விட்டுப் போகிறதே என்று கவலைப்பட்டு கோவில் கோவிலாகப் போய் பரிகாரம் செய்து வந்தவர்கள் மகிழ்ச்சியடையும் விதத்தில் மண வாழ்க்கை அமையும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். தொழில் செய்வோருக்கு அரசுவழி சலுகைகள் கிடைக்கும்.

**மந்தன் சனியால் வரும் மாற்றங்கள்!**

சனி உங்கள் இராசியிலேயே உச்சம்



பெற்றிருப்பதோடு வக்ரமும் பெற்று சஞ்சரிக்கின்றார். 14.04.2013 முதல் 04.07.2013 வரையிலும் மீண்டும் 01.03.2014 முதல் 13.04.2014 வரை சனி வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் சனி, செவ்வாயின் பார்வை காலம் ஏற்படுகிறது. இதுபோன்ற காலங்களில் அதிக விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது.

உங்கள் இராசிக்கு 4,5 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது வைத்தியச் செலவுகள் மேலோங்கலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நிலைத் தொல்லைகளும் அதனால் மனக் கவலைகளும் உருவாகலாம். பாதியில் பணிகள் தொடராமலேயே நிற்கலாம். பணியாளர்கள் தொல்லையாலும் பகைவர்களின் குறுக்கீடுகளாலும் மீதிப்பணி தொடர இயலாமல் போகலாம். வாகனங்களால் செலவுகளும் உருவாகும்.

பயணங்களை அடிக்கடி மாற்றி அமைப்பீர்கள். பிள்ளைகள் எடுத்த முடிவிற்கு நீங்கள் அனுசரித்துச் செல்லும் சூழ்நிலைகூட ஒருசிலருக்கு உருவாகலாம். பொதுவாக எது எப்படியிருந்தாலும் சனி உங்கள் இராசியைப்பொறுத்தவரை நன்மை செய்வார் என்பதால் சனி கவசம் பாடி சனிபகவானைத் துதிப்பது நல்லது.

சனி- செவ்வாய் பார்வைக் காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனமுடன் இருப்பதுதான் நல்லது. பணப் பற்றாக்குறை அதிகரிக்கும். பாகப் பிரிவினையில் பிரச்சினைகள் உருவாகலாம். இல்லத்தில் அமைதி ஏற்பட வேண்டுமானால் எல்லோருடனும் அனுசரித்துச்செல்ல வேண்டியது அவசியமாகும். கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன்மூலம் மன அமைதியை வரவழைத்துக்கொள்ள இயலும்.

**குருவின் வக்ர காலமும் செவ்வாயின் வக்ர காலமும்!**

13.11.2013 முதல் 12.03.2014 வரை மிதுனத்தில் குரு வக்ரம் பெறுகிறார். 3,6 க்கு அதிபதியான குரு வக்ரம் பெறுவது நன்மைதான். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேரும். உத்தியோக மாற்றம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். அரசியல்வாதிகளின் ஒத்துழைப் போடு அனைத்துக் காரியங்களிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

**பலன் தரும் பரிகாரம்!**

**வெள்ளிக்கிழமை தோறும் மகா லட்சுமியை வழிபட்டு வாருங்கள். வியக்கும் வாழ்வமைய பைரவரை வழிபட்டு கவலைகளைப் போக்கிக் கொள்ளுங்கள்.**

செவ்வாயின் வக்ர காலம் அவ்வளவு நல்லதல்ல. 2,7 க்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் குடும்பத்தில் உள்ளவர்கள் குணம் மாறி நடந்து கொள்வர். விரும்பிய காரியங்களை விரும்பிய நேரத்தில் செய்ய இயலாது. விருப்ப ஓய்வு பெற்று ஒருசிலர் சுயசம்பாத்தியத்தில் ஈடுபட முன்வருவர். இக்காலத்தில் ஆறுபடையான் அழகன்- முருகன் அருளால் ஆதாயத்தை அதிகம் அடையலாம்.

**துலாம் இராசியில் பிறந்த பெண்கள் பூமாதேவியைப்போல் கடைப்பிடிக்க வேண்டிய ஆண்டு இது. சேமிப்பு கரைந்து கொண்டேயிருக்கும். சிறு சிறு தொல்லைகள் வந்தாலும் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு உதவிகள் கிடைக்கும். கிட்ட இருந்தவர்களின் பகை மாறும். நீண்டதூரப் பயணம், இடமாற்றம் சிலருக்கு வரலாம்.**

**கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட ஆண்டு முழுவதும் அன்பும் அரவணைப்பும்தான் தேவை. குடும்ப நலன்கருதி எடுத்த முக்கிய முடிவுகளை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். ஜென்ம இராகுவிற்குப் பரிகாரமாக சர்ப்ப சாந்தியைச் செய்து கொள்வதோடு ஜென்மச் சனிக்கு பரிகாரமாக ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.**

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை மனித புதைகுழி தொடர்பில்

# பாதுகாப்புச் செயலாளர் மீது குற்றம் சுமத்த முயற்சி-அரசு

(கொழும்பு)

மாத்தளையில் கண்டுபிடிக்கப் பட்ட மனித புதைகுழிதொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க எதிர்க்கட்சிகள் சூழ்ச்சி மேற்கொண்டுவருவதாக அரசாங் கம் குற்றம் சுமத்தியுள்ளதாக அரசா ங்க தகவல் திணைக்களத்தின் பணி ப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரி வித்துள்ளார்.

மாத்தளையில் 1980 ஆம் ஆண் டுகளில் புதைக்கப்பட்ட சடலங்களே தற்போது எச்சங்களாக மீட்கப்பட் டுள்ளன. இந்த காலப்பகுதியில் கோத் தபாய ராஜபக்ஷ மாத்தளைக்கான எதிர்க்கட்சி இணைப்பாளராக செய ற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அத் துடன் இராணுவத்தில் சவேந்திர சில்வா போன்றவர்களும் மாத்தளையில் செயற்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே ஜே.வி.பி யும் ஐக்கிய தேசிய கட்சியும் இணை ந்து இந்த மனித புதைகுழி தொடர் பில் விசாரணை நடத்த கோரி இருந் தது. இதன் போது கோத்தபாய ராஜ பக்ஷ மீது குற்றச்சாட்டுகளை முன் வைக்கவும் திட்டமிட்டிருந்தது.

எனினும் ஜே.வி.பி கோத்தபா யவை நோக்கி ஒரு விரலை காட்டும் போது, அதன் ஏனைய நான்கு விரல்களும் ஜே.வி.பியை நோக்கி இருக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-2)

தொழில் நுட்பக்கோளாறு காரணமாக

# ஸ்ரீலங்கன் விமானம் மத்தளவில் அவசரமாக தரை இறக்கம்!

கொழும்பிலிருந்து றியாத் நோக்கி முந்நூற்று ஐம்பது பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த ஸ்ரீலங் கன் விமான சேவைக்குச் சொந்த மான விமானம் ஒன்று தொழில்நுட் பக் கோளாறு காரணமாக அவச ரமாக தரையிறக்கப்பட்டது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக் குச் சொந்தமான யு.எல். 273 என்ற விமானமே கடந்த ஞாயிற்று க்கிழமை இவ்வாறு தரையிறக்கப் பட்டுள்ளது.

குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்ப ட்டு இலங்கையின் வான் பரப்பின் ஊடாகப் பறந்து கொண்டிருந்த போது அதன் இயந்திரப் பகுதியில் ஏற் பட்ட கோளாறு காரணமாக அம்பாந் தோட்டையிலுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் அவ சரமாகத் தரையிறக்கப்பட்டது.

சுமார் 350 பயணிகளுடன் தரையிறங்கிய இந்த விமானம் பத்து மணி நேர தாமதத்தின் பின்னரே தனது பயணத்தை மீண்டும் ஆரம் பித்துள்ளது. (செ-2)

# மத்தள விமான நிலையத்தால் பறவைகள் வாழிடங்கள் கேள்விக்குறி?

(கொழும்பு)

மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வ தேச விமான நிலையத்தின் சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள பறவை கள் தங்குமிடங்களை அழிக்கும் நடவடிக்கையில் விமான சேவை கள் அமைச்சின் கீழ் உள்ள சிவில் விமான சேவைகள் அதிகார சபை ஈடுபட்டு வருகின்றது.

குறித்த விமான நிலைய சுற்று வட்டாரத்தில் பறவைகள் பறப்பதால் விமான நிலையத்தின் செயற்பா டுகள் தடைப்படும்.

எனவே அவற்றை தடுக்கும் முகமா கவே அப்பகுதியில் உள்ள பறவை களின் வாழுமிடங்கள் மற்றும் விலங் குகள் உணவாக உட்கொள்ளும் தாவர வகைகளையும் அழிப்பதற் கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தாக சிவில் விமான சேவைகள் அதி கார சபையின் நிறைவேற்றுப் பணி ப்பாளர் எச்.எம்.சீ. நிமல்சிறி தெரிவித் துள்ளார். இதேவேளை பறவைகள் வாழ்விடங்களை அழிக்காமல் விமா னங்கள் தரை இறங்க முன்னும் விமானநிலையத்திலிருந்து வெளியேற முன்னும் அபாய சத்தங்கள் ஊடாக பறவைகள் விலங்குகளை விரட்டு வது குறித்தும் ஆராயப்பட்டு வருவ தாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-2)

# நாகபாம்பு பெண் டிலானி நாட்டை விட்டு தப்பியோட்டம்

நாகபாம்பு பெண்ணான நிரோசா விமலரட்ன அல்லது டிலானி என அழைக்கப்படும் பெண்ணை கட்டுநா யக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்ய குடிவரவு மற் றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிடுமாறு பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழு ம்பு கோட்டை நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.

நாகபாம்பு பெண் நீதிமன்றத்தில் ஆஜராகாமையினால் அவருக்கு எதி ரான பிடியாணை உத்தரவை கொழு ம்பு கோட்டை நீதிமன்றம் கடந்த 4 ஆம் திகதி பிறப்பித்தது.

சந்தேக நபரான நிரோசா விமல ரட்ன அல்லது டிலானி என அழைக் கப்படும் இந்தப் பெண் கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இந்நிலையில் அவர் இருக்கின்ற இடத்தையோ இன்றேல் அவருடைய நிரந்தர முகவரியையோ தம்மால் தேடியறிந்துக் கொள்ள முடியவில்லை என்று நீதிமன்றத்தின் கவனத்திற்கு நேற்று முன்தினம் கொண்டு வந்த கொள்ளுப்பிட்டி பொலிஸார் அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்று விட்ட தாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்த னர்.

அவரை விமான நிலையத்தில் வைத்து கைது செய்ய வேண்டுமா யின் பிடியாணையின் பிரதியை விமான நிலைய பொலிஸாரிடம் கையளிக்கு மாறு நீதவான் கேட்டுக் கொண்டார்.

சந்தேக நபர் இரவு விடுதி ஒன்றில் நாகபாம்பு ஒன்றை வைத்திருந்தமை தொடர்பில் கொழும்பு கோட்டை நீத வான் முன்னிலையில் கடந்த 4 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அந்த வழக்கு விசாரணை செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-2)




★1658-ஊர்காவற்றுறைக் கோட்டை பிரித்தானியரினால் கைப்பற்றப் பட்டது.

★1710-காப்புரிமை பற்றிய முதலாவது சட்ட விதிகள் பிரித்தானியாவில் வெளியிடப்பட்டன.

★1741-புருசியா ஆஸ்திரியாவை மோல் விட்ஸ் என்ற இடத்தில் இடம்பெ ற்ற போரில் வெற்றிகண்டது.

★1790-ஐக்கிய அமெரிக்காவில் காப்புரி மம் பற்றிய விதிகள் எழுதப் பட்டன.

★1815-இந்தோனேசியாவில் தம்போரா மலை தீ கக்கியதில் பல தீவுகள் அழிந்ததுடன் 71 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★1821-கொன்ஸ்டண்டினோபோலின் ஆயர் ஐந்தாம் கிரெகோரி துருக்கியர்களினால் தூக்கிலிடப் பட்டார்.

★1826-துருக்கியப் படைகளின் ஆக்கிரமி ப்பை அடுத்து மெசோலோங்கி என்ற கிரேக்க நகரில் இருந்து 10 ஆயிரத்து 500 பேர் நகரை விட்டு வெளியேறினர். இவர்க ளில் மிகச் சிலரே தப்பினர்.

★1864-முதலாம் மாக்சிமிலியன் மெக் சிக்கோவின் மன்னனாக முடி சூடினான்.

★1868-அபிசீனியாவில் அரோகீ என்ற இடத்தில் பிரித்தானிய மற்றும் இந்தியக் கூட்டுப் படைகள் தியோடர் மன்னனின் படை களை வெற்றி கண்டன. 700 எதியோப்பியப் படைவீரர்கள் கொல்லப்பட்டனர். இந்திய/ பிரித்தானியப் படையினரில் இருவர் மட்டுமே கொல்லப் பட்டனர்.

★1869-கியூபாவில் கியூபா புரட்சிக் கட்சி ஜொசே மார்ட்டியினால் தொடங்கப்பட்டது.

★1912-டைட்டானிக் பயணிகள் கப்பல் தனது முதலாவதும் கடைசியு மான பயணத்தை இங்கிலாந்தின் சௌதாப்மடன் எமிலியானோ சப்பாட்டா அரசு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1963-ஐக்கிய அமெரிக்காவின் த்ரெஷர் என்ற நீர்மூழ்கி கப்பல் 129 பேருடன் காணாமல் போனது.

★1972 வியட்நாம் போர்: அமெரிக்க வடக்கு வியட்நாம் மீது விமானத் தாக்குதல் நடத்தியது.

★1979-டெக்சாஸ் மாநிலத்தில் விச்சிட்டா அருவியில் சுழற்காற்று தாக்கிய தில் 42 பேர் கொல்லப்பட்டனர்.

★1991-இத்தாலியின் மொபி பிரின்ஸ் என்ற பயணிகள் கப்பல் லிவோர் னோவில் எண்ணெய்த் தாங்கி கப்பல் ஒன்றுடன் மோதியதில் 140 பேர் பலியாகினர்.

★1992-லண்டனில் பால்ட்டிக் எக்ஸ்சேஞ்சு என்ற கட்டடம் ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் குண்டுத் தாக்குத லால் அழிந்தது.

★1998-அயர்லாந்து குடியரசுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் வட அயர்லாந்து குறித்த பெல்பா ஸ்ட் உடன்பாடு எட்டப்பட்டது.

**பிறப்புக்கள்**

★1870-விளாடிமிர் லெனின் (இ.1924)

★1887-பெர்னாண்டோ ஹொசே, நோபல் பரிசு பெற்றவர் (இ.1971)

★1898-ஆபிரகாம் கோவூர், பகுத்தறிவா ளர், உளவியல் வல்லுநர் (இ.1878)

★1917-ரொபேர்ட் வூட்வார்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1979)

★1918-ஜோர்ன் அட்சன், சிட்னி ஒப்பேரா மாளிகையை வடிவமைத்தவர் (இ.2008)

★1927-மார்ஷல் நிரென்பேர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

**இறப்புக்கள்**


★**1585-பாப்பரசர் 13 ஆவது கிரகோரியார் (பி.1502)**

★1931-கலீல் ஜிப்ரான்; லெபனான் கவிஞர், ஓவியர் (பி.1883)

★1995-மொரார்ஜி தேசாய், இந்தியாவின் முன்னாள் பிரதமர்

★2012- என். வரதராஜன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன் னாள் மாநிலச் செயலாளர்

**திருத்தந்தை 13 ஆம் கிரகோரி**



1502 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி பிறந்தார். ஊகோ பொண்கொம்பாக்னி (Ugo Boncompagni) எனும் இயற்பெயர் கொண்ட திருத்தந்தை 13 ஆம் கிரகோரி 1502 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி இத்தாலிய பொலொக்னா நகரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். இவர் தனது 40 ஆவது வயதில் உரோமபுரியில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

பின்னர் ஆயராக நியமனம் பெற்ற இவர் ஆலயச் சட்ட விதிகளைக் கையாள்வதில் கைதேர்ந்தவராக இருந்ததால் திரியெந்தில் இடம்பெற்ற திருத் தந்தையின் சங்க அமர்வில் பங்கேற்றார். தொடர்ந்து 4 ஆவது பயஸ் திருத்தந்தை இவரைக் கர்தினாலாக நியமனம் செய்ததுடன் ஸ்பானியா நாட்டின் மறைத்தூதராகவும் அறிவித்தார். இதனால் கர்தினால்களின் ஒன்றியத்தால் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பைப் பெற்றார்.

இவர் மிகுந்த விட்டுக்கொடுப்புடனும் புனித கார்லோ பொறோமயோவின் துணையுடனும் ஆழ மாக திருஅவையின் கொள்கைகளில் மறுமலர்ச்சி ஏற்பட்ட வழிசமைத்தார். இவர் தனது பணிக்காலத்தில் கத்தோலிக்க திருச்சபையை பொறுப்பேற்று சிறப்பாக வழிநடத்தியதோடு பிரிவினைச் சபையின் பரம்பரையையும் கட்டுப்படுத்தினார். இவரது பெயர் யூலியஸ் நாட்காட்டியின் மறுமலர்ச்சியுடன் இன்றும் நிலைத்துள்ளது. இந்நாட்காட்டியிலிருந்து 1582 ஆம் ஆண்டில் பத்து நாட்களை இவர் இல்லாது செய்தார்.

இந்த மாற்றம் செய்யப்பட்ட நாட்காட்டி இவரது பெயராலேயே கிரகோரியின் நாட்காட்டி என அழைக்கப்படுகின்றது. திருத்தந்தை 13 ஆம் கிரகோரி 1572 ஆம் ஆண்டு முதல் 1585 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி இறக்கும் வரை திருத்தந்தையாக பணியுரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவிற்கு போதியளவு பொருளாதார அறிவு கிடையாது

## அமெரிக்கா கருதியதாக விக்கிலீக்ஸில் தகவல்

முன்னாள் இராணுவத்/தளபதி சரத் பொன்சேகாவிற்கு போதியளவு பொருளாதார அறிவு கிடையாது என அமெரிக்கா கருதியதாக விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அமெரிக்கா இவ்வாறு சரத்பொன்சேகாவின் பொருளாதார அறிவு குறித்து கருத்து வெளியிட்டுள்ளது.

ஊழல் மோசடிகளுக்கு எதிராக போராடப் போவதாக தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அறிவித்த போதிலும் தெளிவான பொருளாதாரக் கொள்கைகள் எதுவும் சரத் பொன்சேகாவிற்கு கிடையாது என அமெரிக்க பிரதித்தூதுவர் ரெபெக்கா சொன் அரில் தெரிவித்துள்ளார்.

பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் பரந்த அறிவு கிடையாது என்பதனை சரத் பொன்சேகா பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டுள்ளதாகவும் எதிர்கால பொருளாதாரத் திட்டங்கள் குறித்து கலந்துரையாட சரத்பொன்சேகா நாட்டம் காட்டவில்லை எனவும் ரெபேக்கா தெரிவித்துள்ளதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (செ-5)

# கல்லாறு கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு!

## கவனமெடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்லாறு கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த கிராமத்தில் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் வறட்சிக் காலத்தில் மிகவும் துன்ப நிலையை அனுபவிக்கின்றனர்.

கடற்தொழிலையே தமது வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வரும் மேற்குறித்த கிராம மக்கள் மிகவும் கஷ்ட நிலையில் வாழ்ந்து வருவதுடன் இலவசமாக கிடைக்கும் குடிநீருக்கும் கஷ்டப்பட வேண்டிய அவல நிலை உள்ளது.

இக்கிராமத்தில் வழமையாக குடிநீர் விநியோகத்தை கண்டாவளை பிரதேச செயலகமும் கரைச்சி பிரதேச சபையும் மேற்கொண்டனர். ஆனால் இவ்வாண்டுமுதல் இச்சேவையை அவர்கள் நிறுத்தியமையால் அம்மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (செ-3-264)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




## பெரும்துத்தி

**Botanical Name**
**Abutilon Indicum**
**Family-Malvaceae**
**E.N:-Country Mallow**
**S.N:- Anoda**

துத்திசெடி அல்லது பெரும்செடி வகையைச் சேர்ந்தது. இச் செடி சுமார் 1.15 மீற்றர் உயரத்திற்கு பல கிளைகளுடன் நன்கு வளரும். போலியான குச்சிகளில் விருத்தமான சுமார் 5முதல் 10 சென்ரிமீற்றர் குறுக்களவு உள்ள பெரிய இலைகள் கலக்க இருக்கின்றன. இலை, காம்பு, குச்சி ஆகியவற்றில் வெண்ணிறமுள்ள பஞ்சு போன்ற சிறு சுனைகள் அதிகம். இலைகளெல்லாம் சிறிது வெண்மை கலந்த பசுமை நிறமுடையதாகவே இருக்கின்றன. இலைகளின் மேல் ஒருவித எண்ணெய்பிசுக்கும் - நறுமணமும் இளஞ் செடிகளில் குறைவாகவும் முற்றிய செடிகளில் வளர்ச்சிக்கு தக்கவாறு அதிகமாகவும் இருக்கின்றன.

நல்ல மஞ்சள் நிறப்பூக்கள். சுமார் 4 செ.மீ குறுக்களவுள்ள விருத்த வடிவமானது பூக்களின் நடுவே மகரந்தப் பொடியைத் தாங்கி நிற்கும் மெல்லிய பஞ்சு போன்ற



முட்கள் அதிகம் இருக்கின்றன.

காய் அழகான உருவமுடையது. அடிப்பாகம் பெருத்தது. மேல்பாகம் சிறிது சிறுத்தும் இருக்கின்றன, மெல்லிய கடதாசி போன்ற தோலால் ஆனது. 20-25 பைகளால் ஒவ்வொரு காயும் பிணைக்கப்பட்டது. இப்பையின் ஒரு பக்கவரம்பும், முனையும் காயின் வெளிப்புறத்தில் நீட்டிக்கொண்டிருப்பதைக்காணலாம்.

ஒவ்வொரு பையின் வெளிப்புறமும் வரம்பாக தோன்றும் இப்பைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே பிரித்து எடுக்கலாம். கருமை நிறமும், ஏலரிசி போன்ற பருமனுள்ள விதைகளையும் காணலாம்.

இச்செடி பல்லாண்டுகள் வரை உயிர் வாழும்.

**பரம்பலும் பயிரிடலும்**

யாழில் பொதுவாக தரிசு நிலங்கள் எங்கும் தானாக முளைத்து வளரும். எல்லாவகை மண்களிலும்பயிராகும். விதைபோட்டுசிறு கன்றுகளை பிடுங்கி மீற்றருக்கு ஒன்றாக நட்டு வளர்க்கலாம்.

**மருத்துவப்பயன்கள்**

*துத்தி கீரையை தண்ணீரில் போட்டு கொதிக்கவைத்து சாறு எடுத்து சர்க்கரை, பசுப்பால் சேர்த்து குடித்தால் ஆசனகடுப்பு நீங்கும்.

*துத்தி கீரையை சட்டியில் போட்டு ஆமணக்கு எண்ணெய் ஊற்றி வதக்கி ஆசனவாயிலிட்டு கட்ட மூலநோய் சுகமாகும்.

*கீரைச்சாறை பசுப்பாலில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் மூலநோய் குண மாகும்.

*துத்தி இலையை விளக்கெண்ணெய் சேர்த்து வதக்கி ஒத்தடம் கொடுத்தால் கை, கால் பிடிப்பு குணமாகும்.

*கீரையுடன் மஞ்சள் சேர்த்து விளக்கெண்ணெய் விட்டு வதக்கினால் மூலநோயில் உண்டாகும் பௌத்திரகட்டி குணமாகும்.

*துத்தி இலையை அரைத்து மஞ்சள் கலந்து புண்கள் மீது தடவினால் அவை விரைவில் ஆறும்.

*துத்தி கீரையை சீரகம் சேர்த்து அரைத்து சாப்பிட்டால் பித்தமயக்கம், வாந்தி போன்றவை குணமாகும்.

*கீரையுடன் வாய்விளக்கம் சேர்த்து சாப்பிடின் மலச்சிக்கல் குணமாகும்.

*துத்தியுடன் சிறிது படிகாரம் சேர்த்து அரைத்து வாய் கொப்பளித்தால் பல்வலி, இரத்தகசிவு போன்றன தீரும்.

*துத்தி சாறு பிழிந்து (15ml) நெய் (1கரண்டி) கலந்து சாப்பிடின் கழிச்சல் நோய் குணமாகும்.

*துத்தி சாறுடன் பச்சரிசிமா சேர்த்து பற்று போட்டால் கட்டிகள் பழுத்து ஆறும்.

*கீரையுடன் கற்கண்டு சேர்த்து சாப்பிடின் ஆண்மை குறைவு நீங்கும்.

*துத்தி, கடுகாய் -இரண்டையும் கஷாயம் வைத்து குடித்தால் [illegible] குணமாகும்.

*கீரையை பருப்பு சேர்த்து கடைந்து சாதத்துடன் தொடந்து 21 நாட்கள் சாப்பிட மூல கோளாறு தீரும்.

*இலை அல்லது வேரின் குடிநீரால் வாய் கொப்பளிக்க பல் நோய் தீரும்.

*வேர்ப்பட்டை 40g எடுத்து 400ml நல்லெண்ணெயில் இட்டு காய்ச்சி எண்ணெய்யை இறக்கி வடிகட்டி முகப்பருக்களுக்கு பூச குணமாகும். இது வதனைகாந்தி தைலம் எனப்படும்.

குறிப்பு :- கருந்துத்தி, சிறுதுத்தி, பெருதுத்தி என பலவகையான பரம்பல் உண்டு. எனினும் எல்லாவகை துத்தி இலைகளையும் சமைத்து உண்ணலாம்.

**துத்தி கீரைக்கூட்டு**

தேவையானவை-துத்திகீரைதேவையானளவு
பாசிப்பயறு (100g)
மல்லித்தூள்
மஞ்சள்
மிளகாய் -3
கறிவடகம்
சின்னவெங்காயம்
கடலைப்பருப்பு - 50g
நல்லெண்ணெய் - 3கரண்டி
உப்பு
சோம்பு

செய்முறை:- வாணலியில் எண்ணெய் விட்டு, கடலைப்பருப்பு போட்டு, மிளகாய் போட்டு பொரிந்ததும், கறிவடகம், வெங்காயம் போட்டுவதக்கி அரை டம்ளர் நீர்விட்டு தாளிக்கவும். கீரையைப் போடவும். உப்பு போடவும். பாசிபயறினை வேகவைத்து அதனுடன் மஞ்சள் பொடிபோட்டு மல்லித்தூள் போட்டு கொதிக்க விட்டு கீரையில் போடவும். சோம்பை போடவும். பின்பு தேங்காயை கரகரப்பாக அரைத்து பரிமாறவும்.

பயன்:- சகலவித உஷ்ணநோய்கள் தீரும்

**துத்தி கீரை பொரியல்**

தேவையானவை:- துத்திகீரை-அரைகப்
சின்ன வெங்காயம் - தேவையானளவு
துவரம் பருப்பு - 100 கிராம்
கடுகு - 1கரண்டி
பச்சைமிளகாய் -2
உழுந்து - 3கரண்டி
தேங்காய் துருவல் - 1/2 மூடி
உப்பு -தேவையானளவு
நல்லெண்ணெய் - 2கரண்டி

செய்முறை:- வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உழுந்தினைப் போட்டு பொரித்து பின் வெங்காயத்தை இட்டு வதக்கி கீரையை [illegible] தண்ணீர் தெளித்து வேகவிடவும். உப்பு போடவும். பின் தேங்காய் துருவலை போட்டு கிளறிவிடவும். இறுதியில் மிளகுதூள் போட்டு பரிமாறவும்.

பயன்:- உஷ்ண நோய்கள், காமாலை நோய் தீரும்

**துத்தி கீரை துவட்டல்**

தேவையானவை:-
துத்தி கீரை
சின்ன வெங்காயம் - சிறிதளவு
செத்தல் மிளகாய் - 2
தேங்காய் துருவல் - சிறிதளவு
உப்பு தேவையான அளவு
நல்லெண்ணெய் - 2கரண்டி
கடலைப்பருப்பு - 2கரண்டி

செய்முறை:- கீரையை அரியவும், வாணலியில் எண்ணெய் விட்டு கடலைப்பருப்பு, மிளகாய், கடுகு, வெங்காயம் என்பவற்றை இட்டு வதக்கி கீரையைபோட்டு நீர்விட்டு உப்பு போட்டு பின் கீரையை இறக்கி வைத்து தேங்காய் துருவலைப் போட்டு நன்கு கிளறவும். பின்பு மிளகு தூள் சேர்த்து பரிமாறவும்.

**துத்திபூ கடைசல்**

துத்திபூவை அலசி நீரைவடியவிட்டு துவரம் பருப்பு 100g, மஞ்சள் பொடியுடன்



உப்பு போட்டு பூண்டு தட்டிப்போட்டு மத்தால் கடையவும்.

பயன்:- இரத்தவாந்தி, இரத்தபேதி குணமாகும்.

குறிப்பு:- சாதாரணமாக பெருந்துத்தியானது யாழ்.மாவட்டத்தில் தரிசு நிலங்களில் பொதுவாக பரம்பிக் காணப்படும். இதன் இலைகளை நாம் கீரையாகவும் பயன்படுத் தலாம். மூலநோய் உள்ளவர்கள் இதனை வாரத்தில் 3 நாட்கள் நெய்யில் வதக்கி சாப்பிட நல்ல குணம் கிடைக்கும். இதில் சிறுதுத்தி என்றொரு இனமும் உண்டும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் துயரங்களை தீர்த்து அபிவிருத்திகளை முன்னெடுங்கள்

## இந்திய பாராளுமன்ற குழுவிடம்

## போரினால் பாதிக்கப்பட்ட அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய பாராளுமன்றக் குழுவினர் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் துயரங்களினை தீர்ப்பதற்கும் அவர்களின் அபிவிருத்திக்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பினர் ஊடகங்கள் வாயிலாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் இவ்வமைப்பின் தலைவர் வி.சகாதேவன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

✦ இந்திய இராணுவ தலையீட்டுடன் தொடங்கிய 1987 அழிவிலிருந்து 2009 இறுதி யுத்தக் காலப்பகுதிவரை வடக்கு மாகாணத்தில் அழிவடைந்த சுமார் 4 இலட்சம் வீடுகளுடன் ஒப்பிடுகையில் இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீடுகளை பகிர்ந்தளிக்க இயலாமல் உள்ளது.

✦ வயோதிபக் குடும்பங்களுக்கும் புதிதாக திருமணம் முடித்தவர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் வீட்டுத் திட்டத்தில் இடமளிக்கப்படாமையானது சமூக ஏற்றத்தாழ்வுக்கு வழிவகுத்துள்ளது.

✦ ரூபா 5 இலட்சத்து 50 ஆயிரம் என்பது 2009 பொருட்களின் விலையுடனும் நாண யப் பெறுமதியுடனும் ஒப்பிடுகையில் சரியான கணிப்பீடாக இருந்தாலும் தற்போது இதே செலவில் வீடு ஒன்றை நிர்மாணிக்க முடி யாது.

✦ இலங்கைக்கும் இந்தியாவுக்குமான வர்த்தக பெறுமதி வருடமொன்றுக்கு 4 பில்லியன் டொலருக்கும் அதிகம். இந்த வர்த்தகத்தில் பெரும் பகுதியை போரால் பாதிக்கப்பட்ட பிரதேச நிறுவனங்களுடன் இந்திய தொழிலதிபர்கள் ஒப்பந்தத்தை மேற்கொள்வது எமது வடக்கு கிழக்கின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய ஒரு செயற்பாடாகும்.

✦ போரால் பாதிக்கப்பட்ட பகுதி வர்த்தகர்களுக்கு வழங்கப்படும் ஆரம்ப கட்ட இழப்பீடுகளை நாம் வரவேற்கும் அதேவேளை ஆரம்பம் முதல் எம்மால் முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கைகளுக்கு அமைவாக யுத்தத்தில் சொத்துக்களை இழந்த சகலருக்கும் முழுமையான இழப்பீடு வழங்கவேண்டும். இவ் வேலைத்திட்டத்தில் இலங்கை அரசாங்கத்தையும் ஊக்கப்படுத்த வேண்டியது தங்களின் பொறுப்பாகும்.

✦ யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமது கணவன்மாரை இழந்த பெண்களுக்கு மறுவாழ்வு, மறுமணம் போன்ற வேலைத்திட்டத்திற்கும் யுத்தத்தால் அநாதைகளாக்கப்பட்ட சிறு குழந்தைகளின் மேம்பாட்டிற்கெனவும் எமது பகுதியில் அதிகநிதி செலவிடப்படவேண்டியுள்ளது. எமது பிரதேசத்தில் ஏறத்தாழ 90ஆயிரம் விதவைகள் உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். இதற்கு உங்கள் உதவி தேவையானதாகும்.

✦ இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஒன்றை வடக்கில் தொடங்கினால் ஏராளமான இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சியளிக்கமுடியும்.

✦ 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் வரவும் அதனைத் தொடர்ந்த சூழ்நிலைகளுமே வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு காரணமாகும். இந்திய அரசாங்கத்தின் பின்னணி மற்றும் அழுத்தம் காரணமாகவே வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள காங்கேசன்துறை துறைமுகத்தையும் பலாலி விமானத்தளத்தையும் இரண்டு நாட்டு இராணுவங்களும் பங்குபோட்டு பயன்படுத்துவதற்காகவும் வலிகாமம் வடக்கு மக்களின் பிரச்சினையில் இலங்கை அரசு பாராமுகமாக நடந்துகொள்கிறது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனவே நிலைமையை சாதகமாக கையாள்வதற்காக இப்பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள ஐயாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு செயற்படுமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக அகதிவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழமக்களையும் சிறப்பு முகாம்களில் வாடிக்கொண்டிருப்பவர்களையும் விடுவிப்பதுடன் அவர்களை இலங்கைக்கு வந்து மீளக் குடியேறவும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

காலம் தாழ்த்தும் ஒவ்வொரு கணமும் பிறந்த மண்ணில் அவர்களுக்கான உரிமைகளை சிறிது சிறிதாக இழந்து வருவதை அவர்களுக்கு நீங்கள் புரிய வைக்க வேண்டும்.

✦ எமது போரால் பாதிக்கப்பட்ட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் எமது கடற்பிரதேசத்திற்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீனவர்களை நீங்கள் கட்டுப்படுத்துவதுடன் இவ்விடயத்தை மேலும் மேலும் நீடிக்க விட்டு அரசியல் பிரச்சினையாக மாற அனுமதிக்காமல் சட்டப்படி செய்ய வேண்டியதை சட்டப் படி செய்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு,

2009 முள்ளிவாய்க்கால் இறுதிச் சமரின் பின்னர் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியதோடு அப்போதைய நிதியமைச்சர் ப.சிதம்பரத்தின் ஆலோசனைப்படி 50 ஆயிரம் வீடுகளை இடம் பெயர்ந்த மக்களுக்கு கட்டிக் கொடுக்க இந்திய அரசு முடிபு செய்து அத்துடன் இடம் பெயர்ந்து சொத்துக்களை இழந்த மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இழப்பீடு வழங்கச் சொல்லி எமது அமைப்பின் மூலம் 2011 ஆம் ஆண்டு உண்ணாவிரதம் இருந்து முன்வைத்த கோரிக்கைகளையும் ஏற்று இந்திய அரசாங்கம் இழப்பீடுகளை வழங்க முன்வந்தது. இவற்றுக்காக இந்திய அரசுக்கும் தமிழக மக்களுக்கும் முதற்கண் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-4)



## மரண அறிவித்தல்



**நல்லதம்பி சற்குணநாதன்**

வளலாயைப் பிறப்பிடமாகவும் சன்னதி வீதி, இல.56, பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நல்லதம்பி சின்னாச்சிப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வனுமாகிய நல்லதம்பி சற்குணநாதன் (06.04.2013) அன்று காலமானார்.

அன்னார் நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், கிரிதரன் (லண்டன்), சுபாஜினி (கனடா), தபோதினி (கனடா), நளாயினி (அவுஸ்திரேலியா), சசிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசுதர்ஷினி (ராஜி), குகதாசன், டிலோஜன், சிவேந்திரகுமார், பானுஷா ஆகியோரின் மாமனாரும் சதுர்த், ஷானிகா, ஷஞ்சிகா - ரிஷிகர், சுரபி - ரசிக்கா, வினுஜன் - ஆருணி, அபிஷன், ஆருஜன்-ஆதவன் ஆகியோரின் பேரனும் வரதராசன் அன்னலட்சுமி, தவமணிதேவி (சோலை) மல்லிகாதேவி (சின்னச்சோலை) ஆகியோரின் சகோதரனும் தங்கமணி காலஞ் சென்ற கதிர்காமநான் மற்றும் கந்தசாமி காலஞ்சென்ற ஸ்ரீகனகசபேசன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (11.04.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் வளலாய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சன்னதி வீதி, இல.56,பத்தமேனி, அச்சுவேலி.
தொ.பே: 021 7912390

(2347) தகவல் : குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி




தெய்வத்திரு

**வேலுப்பிள்ளை கந்தசாமி**

திதி. 10.04.2013

ஆண்டொன்று மறைந்ததையா நீர் எம்மை பிரிந்து
நாள்தோறும் தவிக்கின்றோம் உம்மை இழந்து
வாழவைத்த தெய்வம் எங்கள் அன்பு ஐயா
சென்றதெங்கே தினந்தோறும் தேடுகின்றோம்
காலமெல்லாம் வாழ்வோம் உம் நினைவோடு
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கற்கோவளம்
பருத்தித்துறை

குடும்பத்தினர்

(சி/2911)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். திருநகர்ப்பகுதியில் தொடர்மாடிக்குடியிருப்பு

## விஜயகாந்த் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநகர்ப்பகுதியில் தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றினை அமைத்து மாநகர சபையின் சுத்திகரிப்பு தொழிலாளர்களை குடியிருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என யாழ். மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் சுகாதாரக் குழுத் தலைவருமான எஸ். விஜயகாந்த் தெரிவித்தார்.

சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கான தொடர்மாடிக் குடியிருப்பை அமைத்துதர தன்னார்வு தொண்டு நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.


யாழ். மாநகர சபையின் முதல்வராக துரையப்பா இருந்த காலப்பகுதியில் அதாவது 1971 தொடக்கம் 1975 காலப் பகுதியில் இந்த திருநகர் பகுதியில் 56 வீடுகள் அமைக்கப்பட்டு மாநகர சபையின் தொழிலாளர்கள் குடியிருத்தப்பட்டிருந்தனர்.

ஆனால், யுத்தம் காரணமாக மேற்படி வீடுகள் பாதிப்படைந்துள்ளது.

எனவே, குறித்த வீடுகளை அகற்றி விட்டு புதிதாக தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றினை அமைத்து கொடுக்க திட்டமிட்டுள்ளோம்.

மேலும் முன்பு இருந்ததைவிட ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் திருநகர் பகுதியில் வசித்து வருகின்றனர். இதில் பலருக்கு நிரந்தர வீடுகள் இல்லை. எனவேதான் தொடர்மாடி வீடுகளை அமைக்கத் திட்டமிட்டோம்.

இது தவிர வீட்டின் உரிமையாளர்களுக்கு சட்டப்படி காணிகளுக்கான உறுதிகளையும் வழங்கத் திட்டமிட்டுள்ளோம். யாழ். மாநகர சபையைப் பொறுத்தவரை 420 சுகாதாரத் தொழிலாளர்கள் நிரந்தரமாக பணிபுரிகின்றனர். இதில் பலருக்கு வீடுகள் இல்லை. அவர்களுக்கான வீடுகளை அமைத்துத் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)



யாழ். மாநகர முன்னாள் முதல்வர் அமரர் எஸ்.எஸ்.நவரத்தினம் நினைவாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு மின்சார தையல் இயந்திரம் மற்றும் ஒரு தொகுதி உடுபுடைவை என்பன விநியோகிக்கப்பட்டன. ஜேர்மனியில் தங்கியிருக்கும் அன்னாரின் நெருங்கிய உறவினரான இ.சுத்தானத்தினால் வழங்கப்பட்டன.

# சர்வதேச நடவடிக்கைகளை பொதுபலசேனா ஆரம்பிக்கும்!

## அமைப்பின் செயலாளர் தெரிவிப்பு

பொதுபலசேனா இந்த மாதத்தில் இருந்து தமது அமைப்பின் சர்வதேச நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதுடன் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தும் பணிகளையும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக குறித்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் அமைப்பின் தேசிய அமைப்பாளர் விஹாரன்தேனியா நந்ததேரர் உள்ளி ட்ட குழுவினர் நேற்று முன்தினம் அமெரிக்காவின் நியூயோர்க் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளனர். அங்கு ஒரு மாதம் தங்கியிருக்கும் இவர்கள் அங்குள்ள பௌத்த தேரர்கள் மற்றும் இலங்கையர்களைச் சந்தித்து தமது அமைப்பின் நோக்கங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்க உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-5)

# இந்தோனேஷிய தடுப்பு முகாமில் இலங்கையர்கள் உண்ணாப் போர்

இந்தோனேஷிய தடுப்பு முகாம் ஒன்றில் ஆறு இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உரிய வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் குறித்த முகாமில் மொத்தமாக 89 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தற்போதுள்ள முகாமிலிருந்து வேறு வசதியான முகாமிற்கு மாற்றுமாறு கோரியே கடந்த மூன்று நாட்களாக குறித்த புகலிடக் கோரிக்கை யாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் இதனால் அவர்களது உடல் நிலைமை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவோருக்கு உணவு வழங்கப்பட்டு வருவதாகவும் அதனை அவர்கள் நிராகரித்து வருவதனால் தாம் பலவந்தமாக உணவினை வழங்க முடியாது என முகாம் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (செ-2)

# புத்தாண்டுச்சந்தை

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் திவிநெகும சமுர்த்தி புத்தாண்டுச் சந்தை இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் காலை 9.30 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஆ.இரகுநாதன், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இச் சந்தையில் அனைத்து மக்களையும் கலந்து கொண்டு பயனடையுமாறு கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (செ-3-134)

# வலயமட்ட பெருவிளையாட்டு போட்டி முடிவுகள் வருமாறு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட பெருவிளையாட்டு போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர்திருமதி எல்.மாலினி வெனிற்றனால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு;

**கரப்பந்து**

**15 வயதுப் பிரிவு ஆண்**

மு/யோகபுரம் ம.வி, மு/முத்தையன்கட்டு வ.க.ம.வி, மு/மாங்குளம் ம.வி

**15 வயதுப்பிரிவு பெண்**

மு/பாண்டியன்குளம் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா, மு/முத்தையன்கட்டு வ.க.ம.வி,

**17 வயதுப்பிரிவு ஆண்**

மு/பாண்டியன்குளம் ம.வி, மு/யோகபுரம் ம.வி, மு/மல்லாவி ம.க

**17 வயதுப்பிரிவு பெண்**

மு/பாண்டியன்குளம் ம.வி, மு/முத்தை யன்கட்டு வ.க.ம.வி, மு/கூழாமுறிப்பு அ.த. க.பா

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/மல்லாவி ம.க, மு/பாண்டியன்குளம் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/மாங்குளம் ம.வி, மு/பாண்டியன்குளம் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா

**சதுரங்கம்**

**15 வயதுப்பிரிவு ஆண்**

மு/ஒட்டுசுட்டான் ம.வி, மு/யோகபுரம் ம.வி, மு/மாங்குளம் ம.வி

**15 வயதுப்பிரிவு பெண்**

மு/யோகபுரம் ம.வி, மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மு/ஒட்டுசுட்டான் ம.வி

**17 வயதுப்பிரிவு ஆண்**

மு/மல்லாவி ம.வி, மு/யோகபுரம் ம.வி, மு/ஒட்டுசுட்டான் ம.வி

**17 வயதுப்பிரிவு பெண்**

மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மு/மல்லாவி ம.க, மு/மாங்குளம் ம.வி

**பூப்பந்து**

**15 வயதுப் பிரிவு ஆண்**

மு/மல்லாவி ம.க, மு/துணுக்காய் அ.த.க.பா, மு/ஒட்டுசுட்டான் ம.வி

**15 வயதுப்பிரிவு பெண்**

மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா, மு/மல்லாவி ம.க, மு/மாங்குளம் ம.வி

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/மல்லாவி ம.க, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா, மு/மாங்குளம் ம.வி

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/ஒட்டுசுட்டான் ம.வி, மு/வன்னி விளாங்குளம் அ.த.க.பா, மு/மாங்குளம் ம.வி

**கபடி**

**15 வயதுப்பிரிவு ஆண்**

மு/பாலிநகர் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா, மு/கூழாமுறிப்பு அ.த.க.பா

**15 வயதுப்பிரிவு பெண்**

மு/கற்சிலைமடு அ.த.க.பா, மு/பாலிநகர் ம.வி, மு/ஒட்டுசுட்டான் ம.வி

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/பாலிநகர் ம.வி, மு/கற்சிலைமடு அ.த.க.பா, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/முத்தையன்கட்டு வ.க.ம.வி, மு/பாலிநகர் ம.வி, மு/ஒட்டுசுட்டான் ம.வி

**கரம்**

**15 வயதுப்பிரிவு ஆண்**

மு/யோகபுரம் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா, மு/மாங்குளம் ம.வி

**15 வயதுப்பிரிவு பெண்**

மு/யோகபுரம் ம.வி, மு/மாங்குளம் ம.வி, மு/ நட்டாங்கண்டல் அ.த.க.பா

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/யோகபுரம் ம.வி, மு/மாங்குளம் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/யோகபுரம் ம.வி, மு/ஒட்டுசுட்டான் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா

**எல்லே**

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/பாலிநகர் ம.வி, மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா, மு/ஒட்டுசுட்டான் ம.வி,

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/ஒட்:சுட்டான் ம.வி, மு/பாலிநகர் ம.வி, மு/கூழாமுறிப்பு அ.த.க.பா

**உதைபந்து**

**15 வயதுப்பிரிவு ஆண்**

மு/மாங்குளம் ம.வி, மு/யோகபுரம் ம.வி, மு/கூழாமுறிப்பு அ.த.க.பா

**17 வயதுப்பிரிவு ஆண்**

மு/கற்சிலைமடு அ.த.க.பா, மு/ஒட்டுசுட்டான் ம.வி, மு/யோகபுரம் ம.வி

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/மல்லாவி ம.க, மு/கற்சிலைமடு அ.த.க.பா, மு/ஒட்டுசுட்டான் ம.வி

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/ஒட்டுசுட்டான் ம.வி, மு/பாண்டியன்குளம் ம.வி, மு/கற்சிலைமடு அ.த.க.பா

**வலைப்பந்து**

**15 வயதுப்பிரிவு பெண்**

மு/கற்சிலைமடு அ.த.க.பா, மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா, மு/தண்டுவான் அ.த.க.பா

**17 வயதுப்பிரிவு பெண்**

மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா, மு/யோகபுரம் ம.வி, மு/கற்சிலைமடு அ.த.க.பா

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா, மு/மாங்குளம் ம.வி, மு/ஒட்டுசுட்டான் ம.வி

**எறிபந்து**

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க.பா, ம/துணுக்காய் அ.த.க.பா, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/பாலிநகர் ம.வி, மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பா

**கிரிக்கெட்**

**19 வயதுப்பிரிவு ஆண்**

மு/ஒட்டுசுட்டான் ம.வி, மு/பாலிநகர் ம.வி, மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா

**19 வயதுப்பிரிவு பெண்**

மு/கூழாமுறிப்பு அ.த.க.பா, மு/பாண்டியன்குளம் ம.வி, மு/ஒட்டுசுட்டான் ம.வி

(செ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய இதயத்தில் அச்சமில்லை. பணிவில்லாத இடத்தில் அசுத்தமே ஏற்படும்.

–ரஸ்கின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

## எங்களுக்கு உதவுவதுபோல் நடித்து முத்தநாதர்களும் வருவார்கள்

சமயம் என்ற எல்லை கடந்து தமிழ் மக்கள் அனைவரும் பெரிய புராணம் என்ற மிக உயர்ந்த நூலைப் படிக்க வேண்டும்.

சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணம் சைவ சமயத்தில் உள்ள அறுபத்துமூன்று நாயன்மார்களின் சரிதத்தையும் இறை பரம் பொருளின் அற்புதத்தையும் விதந்துரைப்பதாகும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களின் பெருமையைப் பேசும் பெரிய புராணத்தில் இருக்கக் கூடிய உயர் சிறப்பு சமத்துவம் பேணும் பண்பாடாகும்.

அரசர், மந்திரி, வேடர், புலால் உண்போர், வேதியர், சூத்திரர், வர்ணத்தவர், பெண்ணியம் என்ற பேதங்களின்றி அனைவருக்கும் உயர்ந்த மதிப்புக் கொடுக்கின்ற பக்குவம் சேக்கிழார் தந்த பெரிய புராணத்தில் நிறையவே உண்டு.

பெரிய புராணத்தின் பேசுபடு பொருளாக இருக்கக்கூடிய அறுபத்துமூன்று நாயன்மார்களில் மெய்பொருள் நாயனார் என்பவர் ஓர் அரசர். மிகச் சிறந்த சிவபக்தர். சிவனடியார்களை வணங்குவதும் அவர்களுக்கு உதவுவதிலும் சிவதரிசனம் காண்பவர். சுருங்கக் கூறின் அன்பே சிவம் என்பதை இன்ப ஊற்றாகக் கொண்டவர்.

அத்தகையவருக்கும் எதிர்ப்பு இருக்கத் தான் செய்தது.

முத்தநாதன் என்ற ஒரு கொடியவன், மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்வதற்குச் சதி செய்கிறான்.

அதற்காக சிவனடியார் போல் வேடம் தரிக்கின்றான். உடம்பு முழுவதிலும் திருநீற்றை பூசிக்கொண்டு கூரிய ஆயுதமொன்றை புத்தகத்திற்குள் மறைத்து வைத்து மெய்ப்பொருள் நாயனாரை நோக்கிச் செல்கிறான்.

காவலர்கள் சிவனடியார் என்றெண்ணி ஈழத்தமிழர்கள் போல முத்தநாதனுக்கு எழுந்து நின்று மரியாதை செய்கின்றனர்.

முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரின் இருப்பிடத்திற்குச் செல்ல, மன்னனும் வந்தவர் சிவனடியார் என்றெண்ணி எழுந்தோடி வந்து தொழுது நிற்க,

தான் கொண்டு வந்த கூரிய ஆயுதத்தால் மெய்ப்பொருள் நாயனாரைக் குத்திவிடுகிறான் முத்தநாதன்.

பிறர் மீது அன்பு கொண்ட மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனைப் பாதுகாப்பாக கொண்டு சென்று ஊரின் எல்லையில் விடுமாறு காவலருக்குக் கட்டளையிட்டு தன்னுயிர் நீத்தார்.

மெய்ப்பொருள் நாயனாரின் நிலையில் தான் இப்போது ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள்.

எனவே வருகின்றவர்கள் யார்? அவர்களின் உள்நோக்கம் என்ன? வெளி நோக்கம் எத்தகையது என்பதை தமிழ் மக்கள் அறிந்து கொள்வது கட்டாயம்.

சிவனடியார் போல் நடிப்பவர் அனைவரும் சிவ பக்தர்கள் என்றோ, ஈழத்தமிழர்களை சந்திக்க வருகின்றவர்கள் அனைவரும் எங்களின் விசுவாசிகள் என்றோ நினைத்தால் மெய்ப்பொருள் நாயனாருக்கு நடந்த கதிதான் எங்களுக்கும்.

ஆகையால் கவனம்.

# பண்டிகைக்கால வியாபாரத்தையும் வீழ்ச்சி அடைய செய்யாதீர்கள்!

## *சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் மகஜர்*

(தும்பளை)

பண்டிகைக் காலங்களில் பிற இடங்களில் இருந்து வருகை தரும் நடைபாதை வியாபாரிகள் தொடர்பாக அதனை ஊக்குவிக்கின்ற சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் வியாபாரம் தொடர்பாக மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது யாழ். மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் வணிகர்களின் வியாபாரம் வீழ்ச்சி கண்டு வருகின்றது.

இவ் வீழ்ச்சிக்கான காரணங்கள் பல எனினும் இவ் வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு வணிகர்கள் படாத பாடுபடுகின்றார்கள் என்பது வணிகத்துடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் புரியும். இப்படியான காலகட்டத்தில் நாம் பொதுவாக பண்டிகைக்காலங்கள், தமிழர் திருநாட்கள் போன்றவற்றையே வியாபாரத்திற்காக மிகவும் எதிர்பார்த்து காத்திருப்பது வழமை.

எனினும் எமது வயிற்றில் அடிப்பது போல வழமைக்கு மாறாக பண்டிகை காலங்களில் மிகப் பெரிய அளவில் தற்போது நடைபாதை வியாபாரிகள் வருகை தந்து நாம் ஓரளவு தானும் வீழ்ச்சியில் இருந்து மீளலாம் என எண்ணும்போது எமது எண்ணத்தை தவிடு பொடியாக்குகிறார்கள்.

எனவே அன்பான நடைபாதை வியா பாரிகளே தயவுசெய்து எம்மை மேலும் மேலும் கடனாளி ஆக்காதீர்கள்! உங்களைப் போல் நாமும் உழைக்க வேண்டும். எமது கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதை மறக்காதீர்கள்.

இலங்கையில் ஏனைய இடங்களைப் போல் சாவகச்சேரி ஓர் சனத்தொகை நிறைந்த பிரதேசம் அல்ல. இங்கு குறிக்கப்பட்ட தொகையான நுகர்வோருக்கு வணிகம் செய்ய முடியும்.இக் குறைவான நுகர்வோரை நம்பியே நாம் கடைகளை விரித்து வைத்து விட்டு இலவு காத்த கிளிபோல காத்திருக்கின்றோம். எனவே எமது வியாபாரத்தில் தயவு செய்து நஷ்டத்தை ஏற்படுத்தாதீர்கள். அதுபோல இந்நடவடிக்கையை எப்போதும் வருமானம் கருதி ஆதரிக்கின்ற நகராட்சி மன்றத்தை மனச்சாட்சிப்படி, நேர்மையாக நடக்கும்படி அன்பாக வேண்டுகின்றோம்.

சாவகச்சேரி வணிகர்களின் பங்களிப்பு எப்போதும் நகராட்சி மன்றத்திற்குத் தேவை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். எங்களுடன் ஒன்றிணைந்து புரிந்துணர்வுடன் செயற்படுவதுதான் நகரின் வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கும் என்பது எமது ஆழமான நம்பிக்கை ஆகும்.

நாம் கேட்ட முக்கியமான கோரிக்கையான நடைபாதை வியாபாரத்தை தடை செய்தல் அல்லது நவீன சந்தையின் மையத்தில் இருந்து ஒருகிலோமீற்றர் தூரத்தில் அதற்குரிய இடத்தை கொடுத்தல் என்கின்ற விடயத்தை நகராட்சி மன்றம் கவனத்தில் எடுக்கவே இல்லை என்பதை நவீன சந்தைக்கு அருகில் மைதானத்தில் புதிதாக தகரக் கொட்டகைகள் போடப்பட்டு நடைபாதை வியாபாரிகளுக்காக காத்திருப்பதில் இருந்து நன்றாகத் தெரிகிறது.

எனவே எம்முடன் பேச நகராட்சி மன்றம் அழைப்பு விடுத்திருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வருவது வெறும் பிரச்சாரமாகவே நாம் எண்ணுகின்றோம். இவ்வாறான செயற்பாடு தங்களுடன் புரிந்துணர்வை தோற்றுவிக்காது என்பதை அன்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கு எழுதப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (செ-3-19)

# வயோதிபப்பெண் சடலமாக மீட்பு

கிணற்றிலிருந்து வயோதிபப் பெண்ணொருவரின் சடலம் உறவினர்களால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஆவரங்கால் கிழக்கு பகுதியை சேர்ந்த வைரமுத்து கனகம்மா வயது (60) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.


சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 5 மணியளவில் வீட்டு முற்றத்தில் இருந்த மேற்குறித்த வயோதிபப் பெண்ணைக் காணவில்லையென உறவினர்கள் தேடிய போதே வீட்டுக்கு அருகில் உள்ள வயற் கிணற்றுக்குள் சடலமாகக் காணப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து உறவினர்களால் மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-3-134)

# கீரிமலை பகுதியில் சடலம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள கேணிக்கு அருகில் மூதாட்டி ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

70 வயது மதிக்கத்தக்க மூதாட்டியின் சடலமே இவ்வாறு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை என்றும் சடலத்தினை மல்லாகம் நீதவான் பார்வையிட்ட பின்னர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

# கலாசார நிகழ்வு

பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் கீழ் பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் சியபத்வில என்னும் கலாசார நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம்வீரசிங்கம்மண்டபத்தில்நடைபெறவுள்ளது என மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (செ-5)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



### எல்லாம் அவன் செயல்

✦ மேகம் சூரிய ஒளியை மறைப்பதுபோல அகங்காரம் என்னும் மனமாசு ஈஸ்வரஜோதி நம்முள் பிரகாசிப்பதைத் தடுக்கிறது.

✦ என் செயலாவது யாதொன்றும் இல்லை! எல்லாம் அவன் செயல்! என்ற எண்ணம் மனதில் நிலைக்குமானால் இந்தப்பிறவியிலேயே முக்தி கிடைத்துவிடும்.

✦ தற்பெருமை உள்ளவர்களிடம் இறையருள் தங்கியிருப்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தையே இறைவன் தன் இருப்பிடமாக கொண்டிருக்கிறான்.

✦ மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரியது. இதில் இறைவனை அறிய முயலாவிட்டால் வாழ்நாள் வீணாகிப்போய்விடும்.

✦ தராசின் முள் கனமான தட்டை நோக்கிச் சாய்வது போல மனிதனின் மனம் ஆசைகளால் கனக்கும்போது இறைவனை விட்டு விலகத் தொடங்கிவிடும்.

✦ கர்வம் நமக்கு உண்டாகுமானால் நான் இறைவனின் தொண்டன்.நான் இறைவனின் குழந்தை என்ற நினைவால் மட்டும் ஏற்படுவதாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைந்தார்

## தென்னாபிரிக்க வீரர் பர்னல்



பரனெல் நேற்றுமுன்தினம் மும்பை நீதிமன்றில் சரணடைந்தார்.

அவர் ரூ.10 ஆயிரம் உத்தர வாத தொகையின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

போதை விருந்து வழக்கில் தேடப்பட்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் பர்னெல் நேற்றுமுன் தினம் நீதிமன்றில் சரணடைந்தார்.

மும்பை ஜுகு பகுதியில் உள்ள ஒரு ஹொட்டலில் கடந்த ஆண்டு மே மாதம் இளைஞர்களும், இளம் பெண்களும் மதுபானம், போதை மருந்து உட்கொண்டு ஆட்டம் போடடுக்கொண்டிருந்தபோது பொலிசாரின் அதிரடி சோதனையில் சிக்கினர்.

இதில் இந்தியாவின் ஐ.பி.எல். கிரிக்கெட் வீரர் ராகுல் சர்மா, தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் வெய்னே பர்னெல், நட்சத்திர தம்பதி அபூர்வா அக்னிகோத்ரி, ஷில்பா அக்னி கோத்ரி உட்பட 86 பேர் கைதாகினர். இவர்களில் 35 பேர் வெளிநாட்டவர் ஆவர்.

இந்த சம்பவம் தொடர்பாக போதை பொருள் தடுப்பு நீதிமன்றில் கடந்த மாதம் 6ஆம் திகதி 1200 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அப்போது குற்றஞ்சாட்டப்பட்ட அனைவருக்கும் நீதிமன்றம் கட்டளை அனுப்பியது. மருத்துவ பரிசோதனைக்கு பிறகு வெளிநாட்டினர் உள்பட பலர் நாட்டை விட்டு சென்றுவிட்டதால், அவர்கள் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் போதை விருந்து சம்பவத்தில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் வெய்னே

## வெற்றி - தோல்விக்கு காரணம் சொல்கிறார்கள் அணித் தலைவர்கள்

கொல்கத்தா நைட் ரேடர்ஸ் அணியுடன் இடம்பெற்ற போட்டியில் ராஜஸ்தான் ரோயல் அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றி குறித்து ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித் தலைவர் ராகுல் ராவிட் கூறுகையில்,

நாங்கள் துடுப்பாட்டத்தில் 15 முதல் 20 ஓட்டங்கள் வரை குறைவாகவே எடுத்துவிட்டோம். ஆனால் எங்களது பந்துவீச்சாளர்கள் மிகவும் சிறப்பாக பந்து வீசி அணியை வெற்றி பெறவைத்தனர். குறிப்பாக திரிவேதியின் பந்து வீச்சு அபாரமாக இருந்தது.

கொல்கத்தா அணியின் தொடக்க விக்கெட்டுகளை எளிதில் கைப்பற்றினோம். இதேபோல நடுவரிசையிலும் சீரான இடைவேளியில் விக்கெட்டுகள் சரிந்தன. கம்பீரின் விக்கெட் மிகப்பெரிய ஒன்றாகும். இவ்வாறு டிராவிட் கூறினார்.

தோல்வி குறித்து கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர் கூறும்போது, தவறான நேரத்தில் எங்களது விக்கெட்டுகள் சரிந்தன. எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி ராஜஸ்தானை 144 ஓட்டங்களுக்குள் மடக்கினர்.

துடுப்பாட்டத்துக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் இந்த இலக்கு எடுக்க கூடியதுதான். ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் மோசமாக விளையாடி விக்கெட்டை பறிகொடுத்தனர் என்றார்.

## வென்றாலும் தலையிடி தோற்றாலும் தலையிடி!



ஜெய்ப்பூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் - கொல்கத்தா நைட் ரேடர்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி மெதுவாக பந்து வீசியது குறிப்பிட்ட நேரத்தில் 2 ஓவர் குறைவாக வீசி இருந்தது.

இதைத்தொடர்ந்து ராஜஸ்தான் அணியின் தலைவர் டிராவிட்டுக்கு ஐ.பி.எல். விதிப்படி ரூ.10 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


## செரீனா சம்பியன்

அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தில் உள்ள சார்ல்ஸ்டன் நகரில், நடைபெற்ற டபிள்யு டிஏ பாமிலி சர்க்கிள் கிண்ண டெனிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் சம்பியனானார்.

இவர் தன்னை எதிர்த்து விளையாடிய ஜெலீனா ஜன்கோவியாவை 3-6, 6-0, 6-2 என்ற செற்களில் தோற்கடித்து முதலிடத்தைப் பிடித்தார். இரண்டு மணி நேரத்தில் அவர் இந்த சாதனையைச் செய்தார். இது அவர் பெறும் மூன்றாவது தொடர் வெற்றியாகும்.

இதுவரை டெனிஸ் விளையாட்டில் 49 பட்டங்களைப் பெற்று உலகின் 10 ஆவது பெண் என்ற பெருமையை செரீனா வில்லியம்ஸ் பெற்றுள்ளார்.

## டெனிஸ் தரவரிசையில் செரீனா முதலிடம்



அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தில் உள்ள சார்ல்ஸ்டன் நகரில், நடைபெற்ற டபிள்யு டிஏ பாமிலி சர்க்கிள் கிண்ண டெனிஸ் போட்டியின் பின் பெண்கள் டெனிஸ் கூட்டமைப்பான (டபிள்யூ. டி.ஏ.) வெளியிட்ட டெனிஸ் வீரர்களுக்கான தரவரிசையில்,

அமெரிக்க டெனிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் பெணகள் தரவரிசை பட்டியலில் 11,115 புள்ளிகளுடன் முதல் இடத்தையும் ரஷ்யாவின் மரியா ஷரபோவா 10,240 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தையும் பெலாரஸ் நாட்டை சேர்ந்த விக் டோரியா அசரென்கா 9,325 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் டில்லியில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் டில்லி டேர்டேவில்ஸ் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியிடம் தோல்வி கண்டது.

இந்த ஆட்டத்தில் டில்லி அணி வீரர் உன்முக்சந்த் 19 பந்துகளில் 2 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 23 ஓட்டங்களை எடுத்தார். இந்த போட்டியின்போது உன்முக்சந்த் பயன்படுத்திய உடை ஐ.பி.எல். விதிமுறையை மீறும் வகையில் இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதற்கு ஐ.பி.எல். நிர்வாகமும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



சர்ச்சை

## உலக செஸ் சம்பியன் போட்டி சென்னையில்



விஸ்வநாதன் ஆனந்த் - மேக்னஸ் கார்ல்சன் இடையேயான உலக செஸ் சம்பியன் போட்டி சென்னையில் நவம்பர் மாதம் நடைபெறும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இந்தப் போட்டிக்கு ரூ. 29 கோடி நிதியையும் தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

உலக செஸ் போட்டி இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். அந்த பெருமை தமிழகத்தையே சாரும். இதற்காக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அகில இந்திய செஸ் சம்மேளனம் மற்றும் தமிழ்நாடு செஸ் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

**இன்றைய ஆட்டம்** இரவு 8 மணி

Chennai Super Kings Vs Kings XI Punjab

## இங்கிலாந்து சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான இலங்கை அணி

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக் கான இலங்கையின் தற்காலிக 30 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வணியில் புதிய வீரர்கள் சிலருக்கு வாய்ப்பு வழங் கப்பட்டுள்ளதோடு, சிரேஷ்ட வீரர்கள் சிலருக்கும் மீண்டுமொரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சானக வெலகெதர, திலின கண் டம்பி, சாமர கப்புகெதர, பர்வீஸ் மஹரூப், டில்ருவான் பெரேரா, மலிங்க பண்டார போன்ற நீண்டகாலமாக இலங்கைக்காக போட்டிகளில் பங்குபற்றியிருக்காத வீரர்கள் இக்குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

30 பேர் கொண்ட குழாம்: திலகரத்ன டில்ஷான், குஷால் ஜனித் பெரேரா, உபுல் தரங்க, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, அஞ் சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, டினேஷ் சந்திமால், கித்துருவன் விதானகே, அஞ்சலோ பெரேரா, ஷெஹான் ஜெயசூரிய, சாமர கப்புகெதர, திலின கண்டம்பி, லசித் மலிங்க, நுவான் குலசேகர, திஸர பெரேரா, ஷமின்ட எரங்க, சுரங்க லக்மால், பர்வீஸ் மஹரூப், சானக வெலகெதர, இஷர ஜெயரத்ன, டில்ஹார லொக்குஹெட்டிகே, ரங்கன ஹேரத், அஜந்த மென்டிஸ், ஜீவன் மென்டிஸ், டில்ருவான் பெரேரா, மிலிந்த சிரிவர்தன, மலிங்க பண்டார, சீக்குகே பிரசன்ன, சச்சித்திர சேனநாயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்ரைசர்ஸை பழி தீர்த்தது பெங்களூரு றோயல்ஸ்

இந்தியாவில் நடைபெற்று வரும் ஆறாவது ஐ.பி.எல் தொடரின் 9-வது லீக் போட்டியில் நேற்றுபெங்களூருறோயல்சலஞ்சர்ஸ்-ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிகள் மோதியது.

பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய அக்ஷத் ரெட்டி 12 ஓட்டங்களும், பார்த்தீவ் பட்டேல் 20 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்கார 23 ஓட்டங்களும், கமரூன் வைட் 52 ஓட்டங்களும், திஸார பெரேரா 40 ஓட்டங்களும் எடுத்தனர்.

20 ஓவர்கள் முடிபில் ஹைதராபாத் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் பெங்களூரு அணி சார்பாக ஆர்.பி.சிங் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனையடுத்து 162 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டுபெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் களமிறங்கியது.


இதில் அதிரடி ஆட்டக்காரர் கெய்ல் 13 ஓட்டங்களிலும், அகர்வால் 29 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் டில்சானுக்கு பதில் களமிறங்கிய டி வில்லியர்ஸ் 15 ஓட்டங்களிலே ஆட்டமிழந்தார்.

4-வது விக்கெட்டுக்காக ஹோலி - ஹென்றிக்கஸ் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடியின் ஓட்டக்குவிப்பு அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

அதிரடியாக விளையாடிய ஹோலி 47 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 93 ஓட்டங்களுடனும், ஹென்றிக்கஸ் 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக வீராட் ஹோலி தெரிவானார்.



# மும்பை அணி வெற்றி



டில்லி அணிக்கெதிரான போட்டியில் மும்பை அணி 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

6-வது ஐ.பி.எல் தொடரின் 10-வது லீக் போட்டி நேற்றைய தினம் மும்பை இந்தியன்ஸ் அணிக்கும், டில்லி டேர்டேவில்ஸ் அணிக்குமிடையில் மும்பை வான்காடே மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி, முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களின் முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் தினேஷ் கார்த்திக் சிறப்பாக ஆடி 86 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பில் நெஹறா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

210 என்ற கடின வெற்றியிலக்குடன் களமிறங்கிய டில்லி அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

அவ்வணி சார்பில் டேவிட் வேர்ணர் சிறப்பாக ஆடி 61 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பில் ஜோன்சன், பொலார்ட், ஓஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் வெற்றிக்கு வித்திட்ட தினேஷ் கார்த்திக் தெரிவானார்.

## தனித் தமி...

என இந்திய விஜத்தின்போது இந்திய அரச தலைவர்களிடம் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐ.தே.கவின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு,

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தாததாலேயே நாட்டு மக்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான பொதுத் தேர்தலொன்றை அடுத்த வருடத்தில் அரசு நடத்த வேண்டும் என நாம் அதற்கு அழுத்தம் கொடுப்போம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு அரசு உறுதியளித்திருந்தது. இதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலுள்ள பெரும்பான்மையான நாடுகள் அங்கீகரித்தன. ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இம் முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் ஒரு பிராந்திய மாகவே தமிழ் நாடு இருக்கின்றது. அதனால் தமிழ் நாடு எதைக் கூறினாலும், தமிழீழம் உருவாவதற்கு இந்திய மத்திய அரசு ஒரு போதும் இணங்காது என இந்திய அரசுத் தலைவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

மேலு ம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென்றே நாம் கூறுகின்றோம். அதனால் இந்தியாவின் இந்த இரு நிலைப்பாடுகளில் எதனை இலங்கை அரசு விரும்புகிறது?

10 கோடி தமிழ் மக்கள் இருக்கும் தமிழ்நாடு தனி நாடாவதையா இலங்கை விரும்புகிறது என இந்திய அரசுத் தலைவர்கள் என்னிடம் கேள்வி எழுப்பினர். இதன்போது இலங்கையில் தமிழீழமோ, இந்தியாவில் தமிழ்நாடு தனிநாடாகவோ நான் ஒருபோதும் விரும்பமாட்டேன். அதற்கு நான் எதிரானவன் என்று இந்திய அரச தலைவர்களிடம் நான் எடுத்துக் கூறினேன்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்தாவிட்டால், அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்திநாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் பொதுத் தேர்தலொன்றை அரசு நடத்த வேண்டும் என நாம் அரசுக்கு அழுத்தம் கொடுப்போம் என்று மேலும் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க. (செ-11)

## பாரதிய ஜனதாவில்...

இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பாக விளங்கியது. அப்போது பலாலி விமானத் தளத்தை புதுப்பித்துத் தருமாறு இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்தும், தமிழர்களின் பாதுகாப்புக் கருதி அதனைச் செய்ய வாஜ்பாய் மறுத்தார்.

ஆனால் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசு அதே விமானத் தளத்தைப் புதுப்பித்து கொடுத்தது மட்டுமல்லாமல், இலங்கை இராணுவத்தின் அனைத்து அட்டூழியங்களுக்கும் துணையாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

இலங்கையில் வீடு கட்டிக் கொடுக்க இந்தியா உதவி செய்து வருவதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த வீடுகளில் தமிழர்கள் யாரும் குடியமர்த்தப்படவில்லை. சிங்களவர்கள், இலங்கை இராணுவத்தினர்தான் தங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்களவையில் தி.மு.கவினர் கோரிய தீர்மானத்திற்கு ஆதரவு தரவில்லை என்பதற்காக பா.ஜ.க. இந்த விடயத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகச் செயல்படுகிறது எனப் புகார் கூறப்பட்டது.

ஆனால் எங்கள் கட்சியின் முன்னணித் தலைவர்கள் யஸ்வந்த சின்கா சென்னைக்கு வந்து இலங்கையில் தமிழீழம் அமையப் பாடுபடுவோம் என உறுதிபடத் தெரிவித்தார். இலங்கை விடயத்தைப் பொறுத்தவரை 9 ஆண்டுகளுக்கு முன்பு பா.ஜ.கவின் நிலைவேறு. இனப்படுகொலைக்குப்பின் பா.ஜ.கவின் தற்போதைய நிலை வேறு.

தற்போதைய காங்கிரஸ் அரசால் இலங்கைத் தமிழர்களை மட்டுமல்ல இந்திய மீனவர்களைக் கூட காப்பாற்ற முடியவில்லை. ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேரைக் கொன்ற கொடூரத்தைக்கண்டிக்ககாங்கிரஸ்அரசால்முடியவில்லை.

இந்நிலையில்இரட்டைஅதிகாரமையங்களால் ஆட்சி நிர்வாகம் சிறப்பாகச் செயற்படுகிறது என காங்கிரஸ் கட்சி கூறுகிறது. சோனியா காந்தி சொல்வதை மன்மோகன் சிங் கேட்டதன் விளைவு தான் இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு காரணம்.

நான் தேசிய செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளேன். இப்பதவியின் மூலம் இலங்கைத் தமிழர்கள் நலனிற்காக பா.ஜ.கவின் தேசியத் தலைமையை வலியுறுத்துவேன்.

வீதிகளில் போராட்டம் நடத்தும் கட்சிகளால் இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு காலம் கிடைக்காது. ஆனால் இந்திய பாராளுமன்றத்தில் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாகத் திகழும் பா.ஜ.கவினால் தான் மட்டுமே இதற்கு விடிவுகாலம் பிறக்கும்.

இதற்கான முயற்சியில் தமிழக பா.ஜ.க. செயல்படும். அதனை தேசியத் தலைமை ஏற்கும். இரண்டுக்கும் இவ்விடயத்தில் கருத்து வேறுபாடு இல்லை என்றார். (செ-2)

## முல்லைத்தீவில் இன்...

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழர்களின் நிலப் பறிப்பு மற்றும் கடல் ஆக்கிரமிப்பு மீள்குடியேற்றத்திற்கு ஏற்படுத்தப்படும் தடைகளை நிறுத்தக் கோரி பிரஜைகள்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்கள-முஸ்லிம் மக்களின் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தும் நோக்குடனும் தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தும் முகமாக முஸ்லிம் அமைச்சரான ரிசாட் பதியுதீன் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் சர்வதேச நாடுகளுக்கு தமிழர்களின் நிலையை வெளிப்படுத்தவும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மக்கள் தமது நிலைமைகளை விளக்கி ஜனாதிபதிக்கு இன்று மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கையில் மீண்...

ஆரம்பக்கட்டப் பணிகளையேனும் இன்னமும் பூர்த்தி செய்யவில்லை.

அத்தோடு குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை உரிய முறையில் ஏற்படுத்தாமை போன்ற காரணிகளினால் மீளவும் முரண்பாடுகள் வெடித்த சந்தர்ப்பங்கள் பல வரலாற்றில் பதிவாகியுள்ளது.

எவ்வாறெனினும், இந்த நடவடிக்கை மிகவும் கடினமானது. ஆனால் நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கையானது மிகவும் அவசியமானது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மிக நீண்ட காலமாக உறவுகள் நீடித்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர இலங்கைக்கு அமெரிக்காவும் இந்தியாவும் உதவிகளை வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக அறிவித்த முக்கிய நாடுகளில் ஒன்றாக அமெரிக்கா திகழ்கின்றது.

இலங்கையில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து கண்காணித்து வருகின்றோம்.

கருத்துச் சுதந்திரம் மிகவும் அவசிய மானது. ஜனநாயக நாடுகளில் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்தது.

மேலும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் முழுமையான அளவில் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திரு.சுந்தரலிங்கம்- தொடர்பு கொள்ளவும்

பலவருடங்களுக்கு முன்பு பருத்தித் துறைக் கடற்கரை வீதியைச் சேர்ந்த எமக்கு வாகன ஓட்டுனராகக் கடமை புரிந்த திரு.சுந்தரலிங்கமாகிய நீங்கள் ,சென்ற மார்ச் மாதம் 10 ஆந் திகதி என்னை எனது வீட்டில் வந்து சந்தித்தீர்கள். உங்களது தற்போதைய விலாசத்தை கேட்டுத் தெரிந்து கொள்ளத் தவறிவிட் டேன்.உங்களை மிகவும் அவசிய மாகச் சந்திக்க வேண்டி உள்ள தால் சென்ற மார்ச் மாதம் 10 ஆந் திகதி என்னை சந்தித்த வீட்டில் உடனடியாக வந்து சந்திக்கவும் அல்லது பின்வரும் இலக்கத்து டன் தொடர்பு கொள்ளவும்.

**T.P: 078 5279455.** (2350)


# இலங்கையில் யுத்தம்...

யாற்றுகையில்,

யுத்தம் இங்கு முடிந்தாலும் இப்போது ஜெனிவாவில் எம்முடன் யுத்தம் ஆரம்பித்துள்ளது. இங்குள்ளவர்களும் சென்று சாட்சியமளிக்கின்றனர்.

நாம் எதைச் செய்த போதும் குற்றச்சாட்டுக்களே எமக்கு மீதமாகியுள்ளன. முப்பது வருடங்கள் யுத்தம் தொடர்ந்த போதும் இறுதி 5 நாட்களில் என்ன நடந்தது என்ற கேள்வியே ஜெனிவாவில் எழுப்பப்படுகிறது. இறுதி 5 தினங்களில் என்ன நடந்ததென்பதை முழு நாடும் அறியும்.

எதிரிகள்எதிர்எதிரில்துப்பாக்கிகளுடன்சந்திக்க நேரும் போது முந்தியவர்கள் சுட நினைப்பர்.

யுத்தத்தின் இயல்பு அதுதான். அவர்கள் கூறுவது போல் பெருந்தொகையான மரணம் ஏற்படவில்லை. பெருமளவிலானோர் மரணமடைந்து விட்டனர் என்று சொல்லப்படுகின்ற போதும் அவர்கள் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

நாம் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உயர்மட்டத்தில் கவனம் செலுத்துபவர்கள், மனித உரிமை மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக நாம் அன்று தொட்டு இன்று வரை முக்கியமளிப்பவர்கள். இப்போதும் அதனை மதிப்பவர்கள், மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்து வருபவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இனங்களுக் கிடையில் அன்னியோன்யத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தியுள்ளோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-5)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**A/L 2015**

கலை ,வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்:-13.04.2013 சனி.காலை 8 மணி (C-2926)


A/L - 15
(கலை, வணிகம்)

ஏப்ரல் 13
8 மணி

DMI
Jaffna


## படிவம்

- தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான விண்ணப்பப் படிவம் (பட்டதாரிகள்)
- O/L மீளாய்வுப் படிவம்.

ஆகிய விண்ணப்பப் படிவங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஏனைய பிரபல்யமான புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**எஞானம்ஸ் பிறிண்டேர்ஸ்**
கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம். **T.P: 077 7164613** (2353)


## 30 பேர்...

அதன் வீரியம் 6.3 என்றும் அமெரிக்க நிலவியல் ஆய்வு மையம் கூறியுள்ளது.

அணு ஆலை பழுதடையவில்லை என்று ஈரானிய தொலைக்காட்சியில் தோன்றிய புஷேரின் ஆளுநர் கூறினார்.

அந்தப் பகுதியில் பத்தாயிரம் பேர் வாழ்வதாக ஈரானிய செம்பிறைச் சங்கம் கூறியுள்ளது.

பாதிப்புக்களை கணிப்பிட அவர்கள் குழுவொன்றை அங்கு அனுப்பியுள்ளனர். (செ-11)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.:021 222 8093
61,Kachcheri-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (235)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**O/L DAY CLASS**

புதிய பிரிவு ஆரம்பம்
(12.04.2013) காலை 8.00 மணி

- கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
- O/L DAY CLASS நடைபெறும் ஒரே இடம்.
- *முதல் அனுமதி பெறும் 100 மாணவர்களுக்கு மட்டுமே பிரிவு I இல் அனுமதி.*

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் கே.கே.எஸ் வீதியில் பெற்றோல் விற்பனை நிலையத்திற்கு பின்புறமாக இரண்டாவதாக உள்ள 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கே.கே.எஸ் பிரதான வீதியிலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ளது.

*தொடர்பு:-* **071 2828041**
**071 4806309** (2344)

## Alpha Omega International நிறுவனத்தில் உடனடி வேலை வாய்ப்பு

மலர்ந்துள்ள இவ்வருடத்தில் உங்கள் கனவு நனவாக வேண்டுமா? இதோ நிரந்தர தொழிலைப் பெற்று உங்கள் எதிர்காலம் நோக்கி பயணிக்க வேண்டுமா? மாதமொன்றுக்கு 100,000 ரூபா சம்பாதிப்பை பெற விரும்புகிறீர்களா? தொடர்பு கொண்ட உடனேயே வேலை.

1. மேற்பார்வையாளர் (Supervisor)
2. உதவி முகாமையாளர் (Assit.Manager)
3. முகாமையாளர் (Manager)
4. குறைந்த பட்சம் மாதமொன்றுக்கு 30,000 - 80,000 சம்பாதிப்பு
5. பதவி உயர்வின்போது சம்பள உயர்வு

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்களிலும் வேலை வழங்கப்படும்.

**தகைமை: O/L, தங்குமிடம், மருத்துவம், இலவசம்**

**தொடர்புகளுக்கு: 0777656513, 0773434236.**

# வேலை வாய்ப்பு

திருகோணமலையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள SriLankan Airlines இற்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடியவர்கள் தேவை. சிங்களம் விரும்பத்தக்கது.




Post : Ticketing & Reservation
Age: 18 -30

தகுதியுடையோர் கீழ் உள்ள முகவரிக்கு உங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

Mihinlanka
289, Stanley Road, Jaffna.



Valampuri Graphics

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-2922)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062

# நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்.... விரையுங்கள்!



(C-2919) Valampurii Graphics

## மகா சில்க்ஸ்

32, 40A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

## பியூட்டி சில்க்ஸ்

69, 69 A நவீன சந்தை (உட்புறம்),யாழ்ப்பாணம்.

## ஹவுஸ் ஒவ் செலெக்சன்

22 J, பெரியகடை வீதி, நவீன சந்தை (வெளிப்புறம்), யாழ்ப்பாணம்.

ஆகிய எமது மூன்று ஸ்தாபனங்களிலும் இன்று தொடக்கம் 14.04.2013 வரை ரூபா 5000 பெறுமதியான புடைவை வகைகளைக் கொள்வனவு செய்யும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 5000 பெறுமதியான பட்டு சாறி ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

இன்றே விரையுங்கள்...!

அதிர்ஷ்டசாலிகள் 14.04.2013 அன்று குலுக்கல் மூலம் தெரிந்தெடுக்கப்படுவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.